விலை ரூபா 20.00



கேள்வியாகும் கல்வி
பக்கம் 13



விண்வெளி மையத்தில் மாணவர்கள்
பக்கம் 08



இது கறுப்புச் சந்தை அரசு
பக்கம் 17



திரில் வெற்றி
பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 157

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 19 செவ்வாய்க்கிழமை (01/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## தமிழீழத்துக்கு தமிழர் பகுதிகளில் ஐ.நா. வாக்கெடுப்பு

### சென்னை டெசோ மாநாட்டில் தீர்மானம்

சென்னை, மே 1

இலங்கையில் தனித் தமிழீழம் அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை, தமிழர் வாழும் பகுதிகளில் பொதுவாக்கெடுப்பை விரைவில் நடத்த வேண்டும் என நேற்று தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் பொதுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கருணாநிதி தலைமையில் நேற்று திங்கள்கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து தமிழீழ ஆதரவாளர்களின் சார்பில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கருணாநிதி, அன்பழகன், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, சுப்புலட்சுமி ஜெகதீசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு மீண்டும் உருவாக்கப் பட்டது. 04

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில்

# மாபெரும் கூட்டு மே தினம் இன்று

### பல பகுதிகளில் இருந்தும் எண்ணற்ற மக்கள் திரள்வர்

யாழ்ப்பாணம், மே 1

சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் வரலாற்றில் முதற்தடவையாக ஒன்றிணைந்து கூட்டு மே தின நிகழ்வை யாழ்ப்பாணத்தில் இன்று நடத்தவுள்ளன.

இலங்கையில் அரசு மேற்கொண்டு வரும் சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறைகள் மற்றும் மக்கள் மீது சுமத்தும்பொருளாதாரநெருக்கடிகள், உழைப்பாளர்கள் மீதான சுரண்டல்கள் என்பவற்றை சர்வதேசம் அறிந்துகொள்ளும் வகையில் இந்தக் கூட்டு மேதின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வழமையாகபெரும்பான்மைக் கட்சிகள் மே தின நிகழ்வுகளை தலைநகரிலேயே நடத்துவது வழக்கம் இம்முறை அதற்கு மாறாக தமிழர் பகுதியான யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து நடத்தவுள்ளன. அரசின் அராஜகத்துக்கு எதிராக குரல் கொடுக்க எதிர்க்கட்சிகள் அனைத்தும் இன்று ஒன்றுதிரளவுள்ள கூட்டு மே தின நிகழ்வில் நாட்டின் பலபாகங்களில்இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் அணி திரள்வார் 04

## அரசியல் தீர்வு வேண்டுமா?

### தெரிவுக் குழுவுக்கு வாருங்கள்

கொழும்பு, மே 1

பேச்சு மூலம் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புமாயின் உடனடியாக அவர்கள் அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தங்கள் கட்சியின் பிரதிநிதிகளைப் பெயரிட வேண்டும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறித்து விவரிக்கையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் கூறியதாவது:-

பேச்சு மூலம் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்ட 04

## அரசின் அராஜகங்களுக்கு எதிராக மே தினத்தில் ஒன்றிணையுங்கள்

### மக்களுக்கு ஐ.தே.க. அழைப்பு

யாழ்ப்பாணம், மே 1

அரசின் அராஜகங்கள் - அடக்குமுறைகள் ஆகியவற்றுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும் எதிர்க் கட்சிகளின் கூட்டு மேதின நிகழ்வில் அணி திரளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.நகரில் உள்ள 'எக்ஸ்போ பவிலியன்' ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட அந்தக் கட்சியின் பிரமுகர்கள் இந்த அழைப்பை விடுத்தனர்.

எதிரணிக் கட்சிகளின் கூட்டு மே தின நிகழ்வு இன்று பெரும் ஏற்பாட்டில் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ளுமாறே ஐ.தே.க. அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சி 04

## பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் வன்னிப் போரில் கொல்லப்பட்டனர்

### இதற்கான பொறுப்புக் கூறல் அவசியம் என்கிறார் பான் கீ மூன்

புதுடில்லி, மே 1



வன்னி இராணுவ நடவடிக்கையில் இறுதி சில மாதங்களில் துரதிர்ஷ்டவசமாகப் பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டன. இந்த விவகாரம் குறித்து பொருத்தமான சமூக அரசியல் வழியில் பதிலளிக்குமாறு 04

## இலங்கைப் பிரச்சினை குறித்து பான் - மன்மோகன் பேச்சு

### ஐ.நாவும் இந்தியாவும் ஒரே நிலைப்பாட்டில்

புதுடில்லி,மே 01

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அவசர நடவடிக்கைளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாகப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு இரண்டு நாள் பயணமாகச் சென்றுள்ளஐ.நா. பொதுச் செயலர் பான் கீ 04

## தமிழ் ஆசிரியர் திருமலையில் கைது

திருமலை, மே 1

திருமலையில் தமிழ் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை வலயத்துக்குட்பட்ட திருகோணமலை புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியா 04

## கடும் கோபத்தில் இலங்கை

புதுடில்லி,மே 1

இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் இந்திய ஊடகத்துக்கு வழங்கியுள்ள செவ்வி இலங்கை அரசுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் போரின் இறுதிக்கட்டத்தில் பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், மனிதஉரிமைகள் மோசமாக மீறப்பட்டதாகவும் பான் கீ மூன் இந்திய ஊடகமான இந்தியா ருடேக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருந்தார். 04

## யாழ். இளைஞர்கள் இந்தியாவில் கைது

இலங்கையில் இருந்து ஆள் கடத்தல்காரர்களால் அழைத்து வரப்பட்டவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் இலங்கையை சேர்ந்த இருவர் கொல்லம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள், தனபாலசிங்கம் மற்றும் ஸ்ரீதாசன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா, பாவற்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான காளிராஜா இலங்கைராஜா (வயது-62) என்பவரே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தோட்ட வேலைக்காக பாவற்குளத்தில் தங்கியிருந்த போது கயிற்றால் கட்டப்பட்டு கம்பிகளால் தாக்கப்பட்டு இவர் கொலை செய்யப்பட்ட பின் கிணற்றில் போடப்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## இலங்கைப் பெண்கள் ஜோர்தானில் நிர்க்கதி

வீட்டுப் பணிப் பெண்களாக ஜோர்தான் சென்ற 29 இலங்கைப் பெண்கள் அந்த நாட்டின் அம்மான் நகரில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளதாகத் தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் ஒரு சிலர் அம்மான் பொலிஸ் நிலையத்திலும், ஏனையோர் பழைமையான கட்டடமொன்றிலும் தங்கியுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஐரோப்பிய நாடாளுமன்ற குழு வந்தது

ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு நேற்று இலங்கை வந்தடைந்தது. இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலைக் குறித்து ஆராயவுள்ளதுடன், பல்வேறு சந்திப்புகளை இந்தக் குழு மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குழு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை இலங்கையில் இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்ற வேலைத்திட்டங்களையும் இந்த குழு பார்வையிடவுள்ளது.

## கூட்டு மே தினத்தில் சஜித் குழுவினர்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எதிர்க்கட்சிகளின் பொது மேதினக் கூட்டத்தில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மேதினக் கூட்டத்தைப் புறக்கணிப்பதாக முன்னர் சஜித் பிரேமதாஸ தரப்பினர் தெரிவித்திருந்தனர். இன்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவு தினத்தில் மாத்திரம் கலந்துக் கொள்ள விருப்பதாக அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அந்தக் குழுவினர் யாழ்ப்பாண மே தினக் கூட்டத்தில் கலந்துக் கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழு பரிந்துரைகளை ஆராய குழு நியமித்தது மு.கா.

கொழும்பு, மே 1

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு குழுவை நியமித்துள்ளது.

முஸ்லிம்களின் அபிலாஷைகளைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் கொள்ளவில்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஒரு வேலைத்திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பில் அரசு அதன் கூட்டுக் கட்சிகளிடம் ஆலோசனைகளைக் கோரியிருந்தது.

இந்த ஆணைக்குழு ஜனநாயக முறைமையை வலுப்படுத்தல், பொறுப்புக்கூறுதல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல் மற்றும் அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குதல் என்பன பற்றி பிரதானமாகப் பரிந்துரைத்திருந்தது.

இந்தப் பரிந்துரைகளை ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கடந்த சனிக்கிழமை ஒரு குழுவை நியமித்தது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.டி .ஹஸன் அலி கூறினார்.

இந்தக்குழுவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஹஸன் அலி, கல்முனை பிரதி மேயர் நிஸாம் காரியப்பர், ஏ.எம். பையஸ், எம்.எஸ்.எம்.சல்மான் ஆகியோர் உள்ளனர்.(த)

# பொன்சேகாவை வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுமாறு அறிவுரை

கொழும்பு,மே 1

நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எல்லை நிர்ணயிக்கப்படாத காலத்துக்கு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

சரத் பொன்சேகாவின் நுரையீரல் நோய்க்காக ஒவ்வொரு 4 மணித்தியாலங்களுக்கும் புகைவடிவ மருந்தைச் சுவாசிக்கக் கொடுக்க வேண்டும். இது சுவாசக் குழாயிலுள்ள தடைகளை அகற்றுவதற்காக வழங்கப்படுகின்றது.

வைத்தியசாலையிலிருந்து எப்போது சரத் பொன்சேகா வெளியேற முடியுமென்பது குறித்து வைத்தியர்களினால் தீர்மானிக்க முடியவில்லையெனச் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா கூறினார்.

தற்போது சிறைத்தண்டனை அனுபவித்துவரும் தனது கணவர் மகஸீன் சிறைச்சாலையில் இன்னும் சில நாள்களுக்குத் தங்க வேண்டியுள்ளதாகவும் ஆனால் அங்கு போதியளவு வசதிகள் இல்லையெனவும் அனோமா பொன்சேகா கூறினார். சரத் பொன்சேகாவுக்குச் சிறையில் வழங்கப்பட்ட ஆவி மூலமான மருந்து போதாமலிருந்ததாகவும் இதனால் அவருக்கு தொடர்ந்து இருமல் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஆஸ்துமா நோயால் வருந்திக்கொண்டிருந்த சரத் பொன்சேகா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டுமென கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. சரத் பொன்சேகாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதில் ஏற்பட்ட தாமதத்தை தொடர்ந்து அவர் தான் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து சரத் பொன்சேகா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (த)

# ஐ.நாவில் இந்தியாவை பழி தீர்த்தது இலங்கை

ஜெனிவா, மே 1

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின்போது, இலங்கைக்கு எதிராக வாக்களித்த இந்தியாவை ஐ.நாவிலேயே இலங்கை பழி தீர்த்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நீதிக்கான அனைத்துலக நீதிமன்ற நீதிபதி பதவிக்கான போட்டியிலேயே இந்தியாவுக்கு எதிராக இலங்கை வாக்களித்துள்ளது.

நீதிக்கான அனைத்துலக நீதிமன்ற நீதிபதி பதவிக்கு இந்தியாவின் சார்பில் உச்ச நீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாரி போட்டியில் நிறுத்தப்பட்டிருந்தார்.

ஐ.நா. பொதுச் சபையில் அண்மையில் இது தொடர்பான வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தது. இதன்போது இந்தியா நிறுத்திய நீதிபதி தல்வீர் பண்டாரிக்கு எதிராக இலங்கை வாக்களித்துள்ளது. பிலிப்பைன்ஸ் சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளருக்கே இலங்கை ஆதரவளித்துள்ளது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன மறுத்துவிட்டார். இரகசிய வாக்களிப்பே நடத்தப்பட்டது என்பதால் இலங்கை யாருக்கு வாக்களித்தது என்பது குறித்து எதுவும் பேசமுடியாது என்று அவர் கூறினார்.

இந்த வாக்கெடுப்பின் போது இந்தியாவின் சார்பில் நிறுத்தப்பட்ட நீதிபதி தல்வீர் பண்டாரி தோற்கடிக்கப்பட்டார். இலங்கை ஆதரித்த 84 வயதான பிலிப்பைன்ஸ் நீதிபதி புளோரன்ரினோ பொலிசியானோ அனைத்துலக நீதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது இலங்கைக்கு ஆதரவாக - அந்தத் தீர்மானத்துக்கு எதிராகப் பிலிப்பைன்ஸ் வாக்களித்தது.



தல்வீர் பண்டாரி

ஐ.நா. முதன்மையான நீதிமன்ற அமைப்பான நீதிக்கான அனைத்துலக நீதிமன்றம் 1946ஆம் ஆண்டு ஐ.நா.சாசனப்படி உருவாக்கப்பட்டது.

15 நீதிபதிகளைக் கொண்ட இந்த நீதிமன்றம் அனைத்துலகச் சட்டங்கள், நாடுகளால் சமர்ப்பிக்கப்படும் சட்டப் பிரச்சினைகள் குறித்த ஆலோசனைகள், ஐ.நா. அமைப்புகள் மற்றும் சிறப்பு முகவரகங்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. (த)

# லண்டன் ஒலிம்பிக் தீபத்தை ஏந்துகிறார் தமிழ் மாணவன்



லண்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக் போட்டிக்காக, போட்டி ஆரம்பிப்பதற்கு முன் ஏந்தப்படும் தீபத்தை ஏந்துவதற்காகப் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவன் ஒருவனும் தெரிவாகியுள்ளான். முருகேசப்பிள்ளை கோபிநாத்(வயது 21) என்ற மல்லாவியைச் சேர்ந்த இந்த மாணவன் நியூகாஸ்டல் பல்கலைக்கழகத்தில் உயிரியல் மருத்துவ பீடத்தில் கல்வி பயின்று வருபவர்.

ஒலிம்பிக் வரவேற்பு நடைபெற்ற போதும் எத்தனையோ மொழிகளுக்குள்ளும் முதலில் வணக்கம் என தமிழிலேயே ஆரம்பிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீபம் அலுமினியத்தில் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீபத்தில் 8, 000 துவாரங்கள் போடப்பட்டு இருக்கின்றன.

8, 000 துவாரங்கள் போடப்பட்டுள்ள இந்தத் தீபத்தினை 8, 000 வீரர்கள் 8, 000 மைல்கள் ஓட இருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவர் மேற்படி தமிழ் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மிகப் பெரிய பௌத்த கொடி

உலகில் மிகப் பெரிய பௌத்த கொடி 2ஆம்திகதி முதல் பொதுமக்களின் பார்வைக்குத் திறக்கப்படும் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்த்தன தெரிவித்தார்.

கண்டி பொக்காவல இஸிபத்தன விஹாரையில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய பௌத்த கொடி தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

200 அடி நீளமும் 100 அடி உயரமும் கொண்ட உலகிலேயே மிகப் பெரிய பௌத்த கொடியான இதனைப் பார்வையிடுவதற்கு பல இலட்சக்கணக்கான மக்கள் வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் கூறினார்.

## பிரபாகரனுக்கு எப்போதும் சாவில்லை

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறாரா என்று தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, போராளிகளுக்கு எப்போதும் சாவு இல்லை என்று அவர் பதிலளித்தார்.

மேலும் புலிகள் மீண்டும் போராட்டம் நடத்தினால் டெசோ அமைப்பு அதை ஆதரிக்குமா என்று அவரிடம் கேட்டதற்கு, புலிகள் மீண்டும் வந்து போராட்டம் நடத்தினால் அறப்போராட்டம் நடத்துங்கள் என்றுதான் அழைப்பு விடுப்போம் என்று அவர் கூறினார்.

போராடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் தூய்மையாக இருந்தால் அந்தப் போர்க்குணம் என்றைக்கும் மாறாமல் இருக்குமானால் எந்த லட்சியத்துக்காகக் குறிக்கோளுக்காக போராடுகிறார்களோ அவர்கள் அதிலே மாறாமல் இருப்பார்களேயானால் அந்த போராளிகளிடத்தில் எங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு என்று கருணாநிதி மேலும் தெரிவித்தார். (த)



வெலிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளம் குடும்பப் பெண் ஒருவர் இரண்டாவது முறையாகவும் ஒரே தடவையில் மூன்று ஆண்குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். இந்த மூன்று குழந்தைகளும் இப்போது சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளனர். ரம்யா தமயந்தி என்ற இந்தப் பெண் முன்னரும் ஒரே தடவையில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். அவற்றில் மூன்று ஆண், ஒரு பெண் குழந்தைகள் அடங்கும். இதில் ஒரு குழந்தை பின்னர் மரணமானது.

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து விலகுவேன்

## மேர்வின் சில்வா கூறுகிறார்



கொழும்பு, மே 1

தன் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு ஒன்று உள்ளது என யாராவது நிரூபிப்பார்களானால், ஒரு லட்சத்து ஐம்பத்து இரண்டு வாக்குகளை பெற்ற தான், பொது மக்களிடம் கூறிவிட்டு அமைச்சு பதவி மற்றும் அரசியலில் இருந்து விலகிவிடுவேன் என்று மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பு மற்றும் பொதுச் செயற்பாடுகளுக்கான அமைச்சின் ஊடான சேவையை கிராமத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் கம்பஹா மாவட்டத்தின் இறுதி நடமாடும் சேவை நீர்கொழும்பு நகரில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய அவர், தான் ஊடகங்கள் மீது மிகுந்த அன்புடன் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். இலங்கையில் உள்ள ஊடகங்கள் சர்வதேசத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்வதாக மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இருந்த போதும், சில ஊடகங்கள் துரோகமிழைக்கும் வகையில் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார். தம்மீது சேறுபூசும் வகையில் ஒரு பத்திரிகையில் செய்தி வெளியானதாகவும், அதில் தான் ஊழல் மோசடிகள் குறித்து விசாரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மிகக் குறைந்த வேதனத்துக்காகத் தொழிலை மாற்றிக் கொண்ட அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தன்னிடம் நேர்காணல் ஒன்றை நடத்துவதற்கு கோரிக்கை விடுத்ததாகவும், மூன்று நேரமும் சோறு சாப்பிடும் தனக்கு அவ்வாறான விடயங்களில் கலந்து கொள்வதற்கு நேரமோ, இணக்கமோ இல்லை என்றும் அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மே தினப் பேரணியை குழப்புவதற்கு அரசு சூழ்ச்சி

## குற்றம் சாட்டுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

யாழ்ப்பாணம், மே 1

**எதிரணிக் கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் இன்று ஏற்பாடு செய்துள்ள மேதினப் பேரணியில் மக்களைப் பங்கேற்காது செய்வதற்காக அரசு பல்வேறு தடைகளையும் சூழ்ச்சிகளையும் மேற்கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது.**

யாழ்.நகரில் நேற்று ஐ.தே.க. ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மே முதலாம் திகதி தொழிலாளர் தினமாகும். சம்பளத்துடன் கூடிய விடுமுறை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் வீதி அபிவிருத்தி என்ற பெயரில் வீதித் தடைகளைப் போட்டு உழைக்கும் மக்களை - மலையக மக்களை வடக்குக்கு வராமல் தடுக்க திட்டங்கள் போடப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் உரிமைகள், தேவைகள் உதாசீனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் வடக்கின் வசந்தம் என்று அரசு கூறி வருகின்றது.

நாம் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ள மேதின நிகழ்வுக்கு நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து வடக்கின் குறைபாடுகளை நேரில் கண்டுவிடுவார்கள் என அஞ்சியே மக்களைத் தடுக்க அரசு முயல்கிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். விலைவாசி ஏற்றத்துக்கு ஏற்ப சம்பள உயர்வுகள், நிவாரணங்களை வழங்காது மக்களை அரசு வறுமைக்குள் வாட்டுகிறது.

அரசுக்கு எதிராக மக்கள் அணிதிரண்டு மஹிந்த அரசின் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.- என்று மேலும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (ம-3)



ஊர்காவற்றுறை முகாம் வீதி திருத்த வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வீதியில் சேதமடைந்துள்ள நான்கு பாலங்களின் கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. (ம-7)

## இளைஞரைக் கடத்தி கடுமையான தாக்குதல்

### அவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், மே 1

கடந்த புதன்கிழமை 9.30 மணியளவில் வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் ஓட்டோவில் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு நெருப்பில் காய்ச்சப்பட்ட கம்பியினால் சுடப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

கடந்த புதன் கிழமை இரவு வேலைக்குச் சென்றுவிட்டுச் சுதுமலையில் தனது வீடு நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் நடுவீதியில் ஆட்டோ ஒன்றில் வந்த மூவர் அடங்கிய கும்பலால் கடத்தப்பட்டுப் பிறிதோர் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு நெருப்புக் கம்பியால் சுடப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தாக்கப்பட்டவர் தகவல் தருகையில்,

தான் தனது சைக்கிளில் செல்லும் போது தன்னை வழிமறித்த இனந்தெரியாதவர்கள் என்னை ஆட்டோவில் ஏற்றிச் சென்றனர். ஓட்டோ சுமார் 30 நிமிடம் வரை பயணித்த பின்னர் ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டது. ஓட்டோவில் ஏற்றும் போதே என் கண்கள் கட்டப்பட்டது. இதனால் நான் எங்குகொண்டு செல்லப்பட்டேன் என்பது தெரியாது. அது நின்றவுடன் என்னைத் தாக்கியதோடு நெருப்புக் கம்பியால் சுட்டனர். பின்னர் மீண்டும் ஓட்டோவில் ஏற்றி என்னை பழைய இடத்துக்குச் சமீபமாக இறங்கிவிட்டனர். இந்தச் சம்பவத்தில் சுதுமலை வடக்கு மானிப்பாயை சேர்ந்த வேதாபரணம் ரமேஸ் (வயது-28) என்பவரே கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டவர் ஆவார். இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் யாழ் மனித உரிமை கண்காணிப்புக்குழுஇல் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இதுகுறித்த முறைப்பாடுகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று மானிப்பாய்ப் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர். (த-15)

## மகனால் தாக்கப்பட்ட தந்தை பெரிய தந்தை தாக்கிய பெறாமகள்

தென்மராட்சி, மே 1

மகனால் தாக்கப்பட்ட தந்தை, பெரிய தந்தையால் தாக்கப்பட்ட பெறாமகள் ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சாய் வடக்கிலிருந்து மகனால் தாக்கப்பட்ட தந்தையும் மந்துவில் வடக்கிலிருந்து பெரியதந்தையால் தாக்கப்பட்ட மகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மரத்திலிருந்து வீழ்ந்த தென்னோலையின் அடிப்பகுதி தலையைத் தாக்கியதில் காயமடைந்த மிருசுவில் உஷனைச் சேர்ந்த கனகலிங்கம் தயன் (வயது- 20) என்பவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வீதியின் குறுக்கே சென்ற சிறுமியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுமிக்கு கால் முறிந்தது. காயமடைந்த 5 வயதுச் சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ம-9)

## நூலக அபிவிருத்திக்கு தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 1

ஊர்காவற்றுறை பொது நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை முன்னெடுக்கவுள்ளது. மின்சாரம், குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களின் தேவை கருதி விடுமுறை தினங்களிலும் பொது நூலகத்தைத் திறக்கவும் வழமையாக மாலை 4.30 மணிக்கு மூடப்படும் நூலக நேரத்தை ஒரு மணித்தியாலயம் அதிகரித்து 5.30 மணிக்கு மூடவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நூலக ஆலோசனைக்குழு இது குறித்து முன்வைத்த தீர்மானத்தை சபை ஏற்றுக்கொண்டுள்ளது என்று பிரதேச சபைத் தலைவர் ம.ஜெயகாந்தன் தெரிவித்தார். (ம-7)

## மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்கு

சாவகச்சேரி நகரசபையின் மக்கள் பங்களிப்புடனான வீதி விளக்குப் பொருத்தும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன. முதற்கட்டமாக நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 100 மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

ஆரம்ப நிகழ்வுகள் எட்டாம் வட்டாரத்தில் வைரவநாதர் வீதியில் இடம்பெற்றது. நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் சபை உபதலைவர் கு.சதாசிவமூர்த்தி, உறுப்பினர் பொ.செல்வரத்தினம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-9)

## ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படாதது ஏன்?

### கூட்டத்தில் புகுந்து கேள்வி எழுப்பினார் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், மே 1

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், காரைநகர் பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமையை வன்மையாகக் கண்டித்துக் கேள்வி எழுப்பியுள்ளார் காரைநகர் பிரதேச சபையின் ஐ.தே.க. உறுப்பினர் க.பாலச்சந்திரன்.

நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் திடீரென நுழைந்த காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:-

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏன் இந்த மண்ணைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரனும் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் ஒவ்வொரு பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் உழைப்பவர்கள். அவர்களுக்கு இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படாமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

கடந்த காலங்களில் ஒவ்வொரு தொகுதிகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இன்று காரைநகரில் இருந்து கிளிநொச்சி வரை உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே தமிழ் ... நாடாளுமன்ற உறுப்பினர்கள். எனவே அவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

காரைநகரின் அபிவிருத்திக்காகப் பாடுபடுகின்ற காரைநகர் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமையை வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்களுக்கு எதிர்காலத்தில் அழைப்பு விட நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று கூறினார்.

இதற்குப் பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், இனிவரும் கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்படும்-என்றார். (த-60)

மே தினம்
2012
கல்வி கலங்கரை விளக்கு
தொழில்வளர்ச்சியின் உயிர்நாடி
உலகத் தொழிலாளர் தினமாம் மே நாளில்
அனைத்துத் தொழிலாளர்களுடனும்
அச்சகத் தொழிலாளர்களும்
சிறப்புற வேண்டுகின்றோம்.

கரிகணன் பிறிண்டேர்ஸ்
இல.424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 0094-21-2222717 / 21-7397530, தொ. நகல்: 0094-21-2222891
இணையம்: www.harikanan.com மின்னஞ்சல்: print@harikanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அராஜகங்களுக்கு எதிராக மே தினத்தில் ஒன்றிணையுங்கள்

01↘ யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஜோசப் மைக்கல் பெரேரா, காமினி ஜெயவிக்கிரம பெரேரா, ஆர்.யோகராஜன் மற்றும் கட்சியின் உப தலைவர் கே.வேலாயுதம், கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின் போது கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தமை வருமாறு,

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதி மக்களின் பிரச்சினைகளை சர்வதேசம் அறிந்துகொள்வதற்காகவும் புதிய அரசியல் கலாசாரத்தின் தேவைக்காகவும் இந்த மே தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகிறது.

நாட்டில் தலைவிரித்தாடும் அரச பயங்கர வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டும்.

இனவாதிகளும், இனவாதத்தை கக்குகின்றவர்களும் கொழும்பு மற்றும் பிற பகுதிகளில் மே தினத்தை கொண்டாடும் போது உழைக்கும் மக்களை இணைத்து யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நாம் நடத்தப் பல்வேறு தடைகள் அரசாலும் அவர்களுடன் சேர்ந்து இயங்குபவர்களாலும் போடப்படுகின்றன.

நெடுந்தீவில் தனி ஒரு கட்சி மக்களை அச்சுறுத்தி அவர்களின் சுதந்திரத்துக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அந்த மக்கள் தம்மை பாதுகாக்கும்படி எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்- என்றார். (த-3)

## தமிழ் ஆசிரியர் திருமலையில் கைது

01↘ லயத்தில் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும் ரி.குகதாஸ் (வயது -47). கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் கைது செய்யப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவரது மனைவியும் ஓர் ஆசிரியர் ஆவார். இவருக்கு சிறிய குழந்தையும் உண்டு.

இவரது கைது குறித்து விசனம் அடைந்துள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இவரை விடுவிக்க பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்பு கொண்டு ஆவண செய்யுமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் சி.நந்தகுமார், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கும் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (த-சி)

## பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் வன்னிப் போரில் கொல்லப்பட்டனர்

01↘ இலங்கை ஜனாதிபதியிடம் நான் கேட்டுக் கொண்டேன். இதற்குப் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பான் கீ மூன், இந்தியா ரூடேக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது செவ்வியில் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலுவான அரசியல் அதிகாரம் உள்ள நிலையில், கூடிய விரைவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற கடினமான வழியை இலங்கை மேற்கொண்டதை நான் மதிக்கின்றேன். ஆனால் இராணுவ நடவடிக்கையில் இறுதி சில மாதங்களில் துரதிஷ்டவசமாக பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டன. இந்த விவகாரம் குறித்துப் பொருத்தமான சமூக அரசியல் வழியில் பதிலளிக்குமாறு இலங்கை ஜனாதிபதியிடம் நான் கேட்டுக் கொண்டேன்.

நான்ஒரு நிபுணர் குழுவை நியமித்தேன். அனைத்துலக சமூகத்திடமிருந்து எழுந்த பலமான கோரிக்கைகளையடுத்து இலங்கை அரசும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. அது நல்ல பரிந்துரைகளைச் செய்தது.

இலங்கை ஜனாதிபதி இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். இலங்கை ஜனாதிபதி மஹிந்த அவர் பலமான ஆணையைக் கொண்டுள்ளார். முழுமையான பொறுப்புக் கூறும் பொறிமுறை மிக விரைவில் உருவாக்கப்பட வேண்டும்-என்றார் பான் கீ மூன். (த)

## மாபெரும் கூட்டு மே தினம் இன்று

01↘ கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிரணிக் கட்சிகளின் கூட்டு மே தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டு மே தினத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவ சிகல உறுமய ஆகியன கலந்து கொள்கின்றன.

கூட்டு மேதினப் பேரணி இன்று பிற்பகல் 1 மணிக்கு நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோயில் முன்றிலில் ஆரம்பமாகும். அங்கிருந்து கோவில் வீதி வழியாக பேரணி யாழ்ப்பாணம் குருநகர் சென். றோக் விளையாட்டு மைதானத்தைச் சென்றடையும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில். அங்கு பொதுக் கூட்டம் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நவ சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, ஐக்கிய சோஷலிசக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜெசூரிய, நவசிகல உறுமய கட்சித் தலைவர் சரத் மன்மேந்திரா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற் சங்கத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைப் பிரச்சினை குறித்து பான் – மன்மோகன் பேச்சு

01↘ மூன், கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், மற்றும் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கையில் போருக்குப் பிந்திய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கையில் உண்மையான நல்லிணக்கப்பாட்டை எட்டுவதற்கு, மஹிந்த ராஜபக்ஷ அரசும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று இருதரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் புதுடில்லித் தகவல்கள் கூறுகின்றன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருந்தது. இந்த நிலையில் ஐ.நா. பொதுச்செயலருடன் இதுபற்றி எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு இலங்கை அரசுக்கு இந்த விடயத்தில் மேலும் அழுத்தங்களைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(த)

## கடும் கோபத்தில் இலங்கை

01↘ அத்துடன் போருக்குப் பிந்திய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார். பான் கீ மூனின் இந்தக் கருத்து இலங்கை அரசுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா. பொதுச்செயலரின் இந்தக் கருத்து நியாயமற்றது என்றும், இதனை விடுதலைப் புலிகள் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்றும் இலங்கை அரசு கருதுகிறது.

இதையடுத்து, பான் கீ மூனின் பொருத்தமற்ற இந்தக் கருத்துகள் தொடர்பாக, ஐ.நாவிடம் கேள்வி எழுப்புமாறு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்னவுக்கு உத்தரவிட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த)

## அரசியல் தீர்வு வேண்டுமா?

01↘ மைப்பு விருப்பம் அல்லது தயார் எனின் அவர்கள் முதலில் செய்யவேண்டியது அரசினால் நாடாளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குக் கட்சியின் பிரதிநிதிகளின் பெயர்களை வழங்குவதாகும்.

சபாநாயகரைத் தொடர்பு கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இதனைச் செய்யவேண்டும். கூட்டங்களில் கலந்து கொண்டு இவ்வாறு பேச்சு மூலம் தீர்வுகாண நாங்கள் தயார் என்று கூட்டமைப்பு கூறுவதில் அர்த்தம் இல்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம் பெறாத நிலையில் ஆளும் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றே கருதுகின்றோம். அதாவது ஆளும் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்து பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை. மாறாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பேச்சு நடத்தி அரசியல் தீர்வைக் காண முன்வரவேண்டும்- என்றார். (த)

# தமிழீழத்துக்கு தமிழர் பகுதிகளில் ஐ.நா. வாக்கெடுப்பு

01↘ முன்பு போலவே இந்த அமைப்புக்கு, தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு என்று தமிழிலும், Tamil Eelam Supporters Organisation (TESO) என்று ஆங்கிலத்திலும் பெயர் சூட்டப்பட்டது.

இது குறித்து தி.மு.க. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த அமைப்புக்கு கலைஞர் கருணாநிதி தலைவராகவும், பேராசிரியர் அன்பழகன், திரு.கி.வீரமணி, திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு.சுப.வீரபாண்டியன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### அமைப்பின் குறிக்கோள்

பல்லாண்டுகளாகப் பாரம்பரியமான முறையில் இலங்கையின் தேசிய இனமாக இருந்து வரும் தமிழினம் மனித உரிமைகளும், குடிமை உரிமைகளும் பறிக்கப்பட்டு, இந்த நூற்றாண்டில் மிகப் பெரிய இனப் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு, அணி அணியான அல்லல்களால் அனுதினமும் அலைக்கழிக்கப்பட்டு வரும் பிரச்சினை தீர்வதற்கு தனித் தமிழ் ஈழம் அமைவதைத் தவிர வேறு தகுந்த வழியில்லை என்ற உண்மை நிலையை இந்தியத் திருநாட்டின் பிற மாநிலங்களிலும், உலக நாடுகளிலும் உணரச் செய்வதற்கும், தக்க ஆதரவு திரட்டுவதற்கும் உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாயிலாக அமைக்கப்பட்ட இந்தோனேசிய அரசின் தலைமை வழக்கறிஞரைத்தலைவராகக் கொண்ட விசாரணைக் குழு, இலங்கை இராணுவத்தினர் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலை உறுதி செய்திருக்கிறது. வாழ்வுரிமைக்காகப் போராடிய ஈழத் தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டதற்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை 2011, ஏப்ரல் 25ஆம் திக்தியன்று நியூயோர்க்கில் வெளியிடப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை ராணுவம், 40 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்களைக் குண்டு போட்டுக் கொன்றதோடு, போர்க் கைதிகளையும் கொடூரமாகச் சுட்டு அழித்தது என்றும்; பெண் போராளிகள் பலாத்காரம் செய்யப்பட்டனர் என்றும் அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கைப் போர்க் குற்றங்கள் பற்றி ஐ.நா. குழு பரிந்துரைத்துள்ளவாறு சர்வதேச விசாரணை ஆணையத்தை அமைத்து விசாரணை நடத்தி, குற்றங்களுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளிலும் இந்திய அரசு உடனடியாக ஈடுபட வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு மத்திய அரசை வலியுறுத்தி ஏற்கனவே தீர்மானம் வாயிலாகக் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையில் போர் முடிந்த பிறகு தமிழர் பகுதிகளை சிங்கள ராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. தமிழர் பகுதிகள் எல்லாம் சிங்கள மயமாக்கப்பட்டு வருவதாகவும், தமிழ் ஊர்ப் பெயர்கள் கூட சிங்களப் பெயர்களாக மாற்றப்படுவதாகவும், இந்துக் கோவில்கள், கிறித்துவத் தேவாலயங்கள் மற்றும் இஸ்லாமியர் மசூதிகள் ஆகியவை புத்த விகாரைகளாக மாற்றப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

இந்த நிலையில் தனி ஈழம் அமைவதற்கு தமிழர்கள் மத்தியில், ஜனநாயக முறையில் பொது வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்திட வேண்டும் என்பது தான் இலங்கைத் தமிழர்கள் பால் அன்பும், அக்கறையும் கொண்டுள்ள அனைவரது கருத்தாக இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையினையடுத்து இதைப் போல பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு கொசோவோ, தென் சூடான், கிழக்கு திமோர், மொண்டிநீக்ரோ போன்றவை தனி நாடுகள் என்ற அங்கீகாரத்தை ஏற்கனவே பெற்றிருக்கின்றன.

அதன் அடிப்படையில் இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்; இலங்கையில் தமிழர் பகுதிகளில் புதியதாகக் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு இந்தப் பொது வாக்கெடுப்பில் வாக்குரிமை வழங்கப்படக் கூடாது நடத்தப்படும் பொது வாக்கெடுப்பு முடிவின் அடிப்படையில் தனி ஈழம் அமைவதற்கு ஐக்கிய நாடுகள் மன்றம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அதற்கு நமது இந்திய அரசு தேவையான ஒத்துழைப்பினையும் ஆதரவினையும் நல்குவதோடு ஐ.நா. சபையிலும், உலக அமைப்புகளின் மூலம் சர்வதேச அரங்கிலும் உரிய அழுத்தத்தையும் தர வேண்டும்.

தமிழ் ஈழம் குறித்த முடிவை தமிழர்களின் விருப்பத்துக்கே விட்டு விடுவது என்ற நிலையை ஐ.நா. சபை விரைவில் மேற்கொள்ள இருக்கிறது. தமிழ் ஈழம் குறித்த வாக்கெடுப்பு ஒன்று புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் மத்தியில் உலக நாடுகளில் நடந்து வருகிறது. இதன் மூலம் வட்டுக்கோட்டை தீர்மானம் என்ற ஈழப் போராட்டத்தின் அடிப்படைச் சாசனத்தை சர்வதேசம் அங்கீகரிக்கும் நிலை சாத்தியமாகி உள்ளது.

தனித் தமிழ் ஈழம் விரைவில் அமைந்திட, ஐ.நா. சபை, தமிழர்கள் வாழும் பகுதிகளில் பொது வாக்கெடுப்பினை விரைவிலே நடத்திட வேண்டுமென்றும் அதற்கு நமது இந்தியப் பேரரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இன்று உருவாகியுள்ள தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு இந்தத் தீர்மானத்தின் மூலமாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது-என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பூசகர்களுக்கு பயிற்சி நெறி

தென்மராட்சி, மே 1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து பூசகர்களுக்கான 15 நாள்கள் பயிற்சி நெறியை ஜூன் 11 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள்ள தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட ஆலயங்களின் அந்தணர் அல்லாத 15 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட அந்தணப் பூசகர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

### தேங்காய் விலை வீழ்ச்சி

வடமராட்சி, மே1

வடமராட்சிப் பிரதேசத்தில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஒரு வார காலத்துக்கு முன்னர் 50 ரூபா தொடக்கம் 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் ஒன்று இப் போது 20 ரூபா முதல் 30 ரூபா வரையில் விற்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேச நுகர்வோருக்குத் தேவையான தேங்காய் தென்மராட்சியில் உள்ள கொடிகாமம் பகுதியிலிருந்து வியாபாரிகளால் எடுத்துவரப்பட்டு சந்தைப் படுத்தப்படுகின்றன.(வ-8)

# இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்காவில் கவனயீர்ப்பு

சர்வதேச பொது மன் னிப்புச் சபையின் ஒருங்கிணைப்பில், அமெரிக்க உயர்கல்வி மாணவ சமூகத்தினால், நியூயோர்க் நகரில் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கவன யீர்ப்பு நிகழ்வொன்று, பலரது கவனத்தையும் பெற்றுள்ளது.

"Get on Bus for human rights"எனும் தலைப்பில், இலங்கை தொடர்பில் ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு நிகழ்வானது, உள்ளக அரங்க நிகழ்வாகவும், வெளித்திடல் கவனயீர்ப்பு போராட்ட மாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளக அரங்க நிகழ்வில், மன்னிப்புச் சபையின் மேலாளர் சூசன் நோசெல் இலங்கையில் இருந்து தற்போது அமெரிக்காவில் தஞ்சமடைந் துள்ள பிரபல ஊடகவியலாளர் ஏ.எஸ். திசநாயகம் மற்றும் பர்மா, இந்தோனேசிய பிரதிநிதிகள் பலரும் உரையாற்றியிருந்தனர்.



700இற்கும் மேற்பட்ட உயர்கல்வி மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

காணமல்போயும், கடத்தி வைக்கப்பட்டும் உள்ளவர்களது நிலையினை வலியுறுத்தும் வகையில் இடம் பெற்றிருந்த நிகழ் வரங்கொன்று, பர்மியப் பெண்ணொருவரினால் மேற்கொள்ளப்பட்டமை அனை வரது கவனத்தையும் பெற் றது.

700இற்கும் மேற்பட்ட உயர்கல்வி மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

உள்ளரங்கினைத் தொடர்ந்து, இலங்கையின் தூதரகத்தை நோக்கி பேரணியாகச் சென்ற மாணவர்கள், ''இலங்கையே உன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம்'' என்று தொடர் முழக்கமிட்டனர்.

இந்தநிகழ்வில் பங்கெடுத்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதி சான் சுந்தரம்,

''அமெரிக்கர்கள் இவ்வாறு இலங்கை தொடர்பில் அணிதிரள்வதும், குறிப்பாக மாணவ சமூகம் இலங்கையின் விவகாரத்தை கையிலெடுத்திருப்பதும் நம்பிக்கையினைத் தருவதாக உள்ளது'' என்று தெரிவித்தார்.

இலங்கையின் முள்வேலிக்குள் அகப்பட்ட தமிழர்கள் மற்றும் வெள்ளைக் கொடியேந்திய தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தமை ஆகியனவற்றை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருந்த ஓவியங்கள் இவ்விரு நிகழ்வுக்களிலும் முக்கிய இடத்தைப் பிடிந்திருந்தன. (வ)

### குருப்பெயர்ச்சி யாகம்

தென்மராட்சி, மே1

சாவகச்சேரி வாரி வளநாத சிவன் ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழ மாற்ற குருப்பெயர்ச்சி யாகம் நடத்தப்படவுள்ளது.எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 6.50 மணிக்கு குருபகவான் மேடராசியி லிருந்து இடப ராசிக்கு மாற்றமடை வதையிட்டு மறுநாள் குருப்பெயர்ச்சி யாகம் நடத்தப் படவுள்ளது.

'பாலகுருமணி' கிரியா வித்துவஜோதி' சிவம்- பிரம்மஸ்ரீ க. பரராஜ சேகரக் குருக்கள், 'சிவஞான சம்பந்தப் பிரியன்' சிவப்பிரம்மஸ்ரீ தியாக உமாசுதக் குருக்கள், சிவப் பிரம்மஸ்ரீ சிவபாலக் குருக்கள் ஆகியோர் தலைமையில் யாகம் இடம்பெறும். (வ-9)

### பெருந்திருவிழா

வடமராட்சி, மே1

பருத்தித்துறை, கோட்டு வாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 5 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த் தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (வ-8)

### வரவேற்பு....



புதிய உயர்கல்லூரி 2012 கலை, வர்த்தக முதல்தேர்வு மாணவர்களின் ஏற்பாட்டில் புகுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் புதிய உயர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட தமிழ் விரிவுரையாளர் எஸ். குழந்தைவேல் புதிய உயர் கல்லூரி நிர்வாகிகளான சண்முகநாதன், அருள்நங்கை சண்முகநாதன் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (ம-15)

# முடிவுக்கு வந்தது செங்கல்பட்டு அகதிகளின் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 13 நாள்களாக உண்ணாவிரதம் மேற்கொண்ட அகதிகள் நேற்று முன்தினம் தங்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

கியூ பிரிவுப் பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 32 பேர் செங்கல்பட்டு முகாமில் தங்க வைக்கபட்டுள்ளனர். தங்களை விடுவித்து திறந்தவெளி முகாமுக்கு மாற்றவேண்டும். குடும்பத்துடன் சேர்த்து வாழ வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இவர்களில் 10 பேர் கடந்த 16 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் இவர்களுக்கு ஆதரவாக மேலும் 7 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களில் 11 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். அதிகாரிகள் பலமுறை பேச்சு நடத்தியும் போட்டக்காரர்கள் போராட்டத்தைக் கை விடவில்லை

இந்த நிலையில் நேற்று முன்தினம்கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி டி.எஸ்.பி. பாண்டியன், செங்கல்பட்டு பொலிஸ் அதிகாரி எம்.எஸ். பாஸ்கர், செங்கல்பட்டு நகரத் தலைவர் செல்லப்பா, உட்பட பல அதிகாரிகள் பேச்சு நடத்தினர்.

இதில் எதிர்வரும் ஜூன் மாதம் மூப்பு அடிப்படையில் 15 பேரும், பின்னர் அடுத்தகட்டமாக மற்ற வர்களையும் விடுவிப்பதற்கு ஏற்படுகள் செய்வதாக உறுதி அளித்ததன் பேரில் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து உண்ணாவிரதம் இருந்த வர்களுக்கு அதிகாரிகள் குளிர் பானம் கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தனர். இதேபோல் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று 11 பேருக்கும் அந்தப் பகுதி நகரத்தலைவர், பொலிஸ் அதிகாரி ஆகியோர் இளநீர் கொடுத்து உண்ணா விரதப் போராட்டத்தை முடித்து வைத்தனர்.

இதேவேளை அகதிகள் முகாமில் சிறை வைக்கப் பட்டுள்ளவர்களில் 15 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)


# நவீன டைட்டானிக் கப்பலை உருவாக்க ஆஸி. கோடீஸ்வரர் திட்டம்

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பலின் வடிவமைப்புடன் நவீன வசதிகள் அடங்கிய புதிய கப்பல் ஒன்றை உருவாக்க ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒருவரான கிளைவ் பாமர் முயற்சிகள் எடுத்துள்ளார்.

இவ்வகையான கப்பலை உருவாக் குமாறு சீன அரசுக்குச் சொந்தமான கப்பல் தயாரிப்பு நிறுவனத்திடம் தான் கோரி யிருப்பதாக ஊடகங்களிடம் கிளைவ் பாமர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:

இந்தக் கப்பலை உருவாக்கும் பணி அடுத்த ஆண்டு இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கும் என்றும் 2016 ஆம் ஆண்டு இந்தக்கப்பல் உருவாக்கப்பட்டு கடல் பயணங்களுக்குத் தயாராகிவிடும்.



இந்தக் கப்பலை உருவாக்கும் பணி அடுத்த ஆண்டு இறுதிப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளது

வடிவமைப்பு, அளவுகள் ஆகிய வற்றைப் பொறுத்தவரையில் இது கூடிய அளவுக்கு சென்ற நூற்றாண்டின் டைட்டானிக் கப்பலை ஒத்ததாகவே உருவாக்கப்படும் ஆனால் நவீன தொழில்நுட்பங்கள் இதில் சேர்க்கப் பட்டிருக்கும் என்பதே எனது திட்டம்.

சி.எஸ்.சி. ஜின்லிங் கப்பல் [illegible] நிறுவனத்துடன் இந்தக் கப்பலை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் நான் கையொப்பமிட்டுள்ளேன்- என்றார் அவர்.

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் தனது முதல் பயணத்திலேயே பனிப் பாறையில் மோதி மூழ்கிய ஒரு கப்பல். இந்தக்கப்பல் மூழ்கியதன் நூற்றாண்டு நிறைவுதினம் கூட அண்மையில் கடந்த 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலுக்கு உலகத் தமிழர் பேரவை கண்டனம்

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலுக்கு, லண்டனை தலைமையகமாகக் கொண்ட உலக தமிழர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் இறைமைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். பெரும்பான்மையின பௌத்த பிக்குகளே தம்புள்ள பள்ளிவாசலை தாக்கினர்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, சர்வதிகார வழிகளை கையாள்கிறது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ணணியின் வழிகாட்டலிலேயே சிறுபான்மையினர் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இதற்கு உதாரணமாக ஆளும் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய, தம்புள்ள பள்ளிவாசல் தகர்க்கப்படவேண்டும் என்று கோரியிருந்தது. இதேவேளை, வடக்கு. கிழக்குப் பகுதி களில் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் இலங்கை அரசு, பௌத்த விஹாரை களை அமைத்து வருவதும் இந்து மற்றும் கிறிஸ்தவ கோயில்களை நிர்மாணிக்க மறுத்து வருவதும் இடம் பெறுகின்றன-என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இந்தக்குற்றச்சாட்டை மறுத்துள்ள இலங்கை அரசின் பேச்சாளர் ஒருவர், உலக தமிழர் பேரவை, தம்புள்ள பள்ளிவாசல் விடயத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முனைவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமரா குணநாயகம் பதவி விலகவுள்ளார்?

கொழும்பு, மே. 01

ஐ.நா. அமைப்பில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான தமரா குணநாயகம் தனது பதவியை விட்டு விலகத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாவில் இடம்பெற்ற 19 ஆவது மனித உரிமைகள் பேரவைத் தொடரில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையைத் தோற்கடிக்க தமரா கடுமையாகப் பாடுபட்டார். எனினும் அவரது முயற்சிகளையும் தாண்டி பிரேரணை வெற்றி பெற்றுவிட்டதால் அவர்மீது அரசின் ஒரு தரப்பினர் குறை கூறி வருகின்றனர்.

ஜெனிவாப் பிரேரணையை முறியடிக்க அங்கு சென்ற இலங்கை அரசு சார்பான குழு இரு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் வாஸ் குணவர்த்தன மற்றும் முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் ஒரு தரப்பாகவும், வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் தமரா குணநாயகம் ஆகியோர் இன்னொரு தரப்பாகவும் பிரிந்தே செயற்பட்டனர்.

இத்தகைய பிரிவே இலங்கை ஜெனிவாவில் தலைகுனிய நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்று அரசு தரப்பு கருதுகிறது. எனவே தன்னுடைய பதவியை உதறிவிட தமரா குணநாயகம் முடிவெடுத்துள்ளார்.

ஆயினும் தமரா குணநாயகத்தின் இந்தப் பதவி விலகல் முடிவை மீளாய்வு செய்யுமாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவரைக் கோரியுள்ளார், நிரந்தரப் பிரதிநிதிப் பதவியிலிருந்து அவர் விலகினால் கியூபாவுக்கான இலங்கையின் தூதுவராக மீண்டும் தமரா குணநாயம் நியமிக்கப்படுவாரென்றும் தெரிய வருகிறது. (ங-22)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



22.04.2012 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவி

**ஸ்ரீமதி. நாகேஸ்வரி பாலசுப்பிரமணியசர்மா**

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

சித்திரை 19 ஆம் நாள் 01.05.2012 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணி தசாகம்
சித்திரை 20 ஆம் நாள் 02.05.2012 புதன்கிழமை மு.ப. 10.00 மணி ஏகோதிஷ்டம், மாசிகம்
சித்திரை 21 ஆம் நாள் 03.05.2012 வியாழக்கிழமை மு.ப. 10.00 மணி சபிண்டீகரணம்
சித்திரை 22 ஆம் நாள் 04.05.2012 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி கிருஹயக்ஞம் நண்பகல் 12 மணி சமாராதனை

**அன்றைய துன்பகர நிகழ்வில் எமக்கு உறுதுணையாக நின்று உதவிகள் புரிந்த**

திக்கம் மத்திய சனசமூக நிலையம்
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்
திக்கம் மகளிர் அபிவிருத்திச்சங்கம்
திக்கம் கிராம அபிவிருத்திச்சங்கம்
திக்கம் கமக்காரர் அமைப்பினர்
திக்கம் பாலர்பாடசாலையைச் சேர்ந்தோர்
திக்கம் இந்து கலாமன்றம்

ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த அனைவருக்கும் அயலவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தனித்தனியே தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் மேற்படி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

துலாப்பிள்ளையார் கோவிலடி, அல்வாய் வடக்கு, திக்கம்

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறந்தோர்



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



### வீடு வாடகைக்கு

யாழ். நகர் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
முற்பணம் எதிர்பார்க்கப்படும்
209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு : T.P : 077 3086894

### வாகனம் விற்பனைக்கு

50 ஸ்ரீ ISSUZU DOUBLE CAB வாகனம் விற்பனைக்கு உண்டு
தொடர்பு 0779111638

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் உள்ள தங்கும் விடுதிக்கு றூம் Boy (அறைகள் பார்ப்பதற்கு), ஓட்டோ ஓடக்கூடிய லைசன்ஸ் உள்ளவர் விரும்பத்தக்கது. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 15000/= +
தொடர்பு:-
0773080318, 0777172039

### மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பாவம் 20 உடைய, செவ்வாய்க்குற்றமுள்ள 35 வயது நிரம்பிய லண்டன் P.R. உடைய மணமகனுக்கு "மணமகள்" தேவை.
28 வயதுடைய செவ்வாய்க்குற்றமுள்ள பாவம் 50 உடைய பட்டதாரி மணமகளுக்கு "மணமகன்" தேவை.
தொடர்பு:- 0752427088

### பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலநோன்பு கூட்டுறவுச் சங்கத்தின் 01.05.2012 இல் நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 05.08.2012 முற்பகல் 11.00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.
**கா.சிவஞானம்** தலைவர்.


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## அலுவலர்களுக்கான விண்ணப்பம் கோருதல்

ஆலயத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 05.05.2012 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை ஆலய நிர்வாகப் பணிமனையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ அல்லது இடதுபக்க கடித உறையின் மேல் மூலையில் எப்பதவிக்கெனக்குறிப்பிட்டு செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் என்ற முகவரிக்கோ பதிவுத்தபாலில் அனுப்ப முடியும். 06.05.2012 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

01 தொழில் நுட்ப உத்தியோகத்தர்
1 அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப அலுவலருக்கான சான்றிதழ்
2 வேலை அனுபவம் போன்றவற்றின் சான்றிதழின் நிழற்படப்பிரதி இணைக்கப்பட வேண்டும்
3 அரச திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்

02 நிறைவேற்று அலுவலர்
1 ஆலயத்தில் நிரந்தரப் பதவி இதுவாகும்
2 ஆலயத்தில் தங்கி இருந்து கடமையாற்ற வேண்டும்
3 பட்டதாரியாக இருக்க வேண்டும் BA, B.Com
அரச திணைக்களத்தில் கடமையாற்றிய பதவி நிலை உத்தியோகத்தரும் விண்ணப்பிக்க முடியும்.
4 விண்ணப்பங்கள் சுயமாகத் தயாரிக்க முடியும்

இரு பதவிகளுக்குமான சம்பளம் நேரில் கலந்து பேசித் தீர்மானிக்கப்படும்.

கா.ஆ.தியாகராசா (தலைவர்)
ந. மோகனருபன் (செயலாளர்)
அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
(6,7,10)

## நயினா தீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## திருப்பணி வேலைக்கான கூறு விலை கோருதல்

மேற்படி ஆலய உள் வீதி சுற்றுப்பிரகாரம் பூராகவும் கொங்கிறீற் இட்டு மாபிள் பதிப்பதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. வேலையை மேற்கொள்ள விரும்புபவர்கள் கூறு விலையினை 05.05.2012 ஆம் திகதிக்கு முன்னர் ஆலயத்தில் உள்ள நிர்வாகப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியிலோ அல்லது இடதுபக்க கடித உறையின் மேல் மூலையில் கூறு விலை எனக்குறிப்பிட்டு செயலாளர், நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் என்ற முகவரிக்கோ பதிவுத்தபாலில் அனுப்பமுடியும். 05.05.2012 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

01 வேலை விவரத்தை ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து பார்வையிடலாம்.
02 கொங்கிறீற் இடுவதற்கான கட்டுமானப் பொருள்கள் ஆலயத்தினால் வழங்கப்படும். தொழிலாளர் கூலிமட்டுமே கூறுவிலையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03 ஆலயத்தில் பதிப்பதற்கென வைக்கப்பட்டுள்ள மாதிரி மாபிள் மட்டுமே பதிக்கப்பட வேண்டும். மாபிள் கொள்வனவு பதித்தல் என்பன கூறுவிலை சமர்ப்பிப்பவரையே சார்ந்தது. மாபிள் ஆலயத்தினால் வழங்கப்படமாட்டாது.
04 நிர்வாக சபையினால் குறிக்கப்பட்ட காலத்திற்குள் வேலையை திருப்திகரமாக நிறைவேற்றி முடிக்க வேண்டும்.
05 இது இறை பணி என்பதால் நேர்மை, விசுவாசம் என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.
06 மேலதிக விவரம் தேவைப்படின் ஆலய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.
தொலைபேசி இலக்கம். 0213213024, 0213207785

அன்னையின் சேவையில்

கா.ஆ.தியாகராசா தலைவர்.
ந. மோகனருபன் செயலாளர்.
அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
(6,7,10)

## சாவகச்சேரி பிரதேசசபை
## 15.05.2012 முதல் 31.12.2012 வரை மீன் சந்தையை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2012

கள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 02.05.2012 - 08.05.2012 வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி' :- 10.05.2012 பி.ப 1.00மணி கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 10.05.2012 பி.ப 2.00மணி

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரங்கள் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (Vat,Nbt தவிர) | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat ,Nbt தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மீன் சந்தை | 702,300.00 | 5,000.00 | 500.00 |

*நிபந்தனைகள்*

கேள்வித்தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பவற்றுடன் 12% Vat, 2% Nbt சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் எந்தவித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.

தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவாரகாலத்தில் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.

கேள்விப் படிவத்தின் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.

மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமைப்பணிமனையில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சிற்றம்பலம் துரைராஜா**
**தவிசாளர்**
**சாவகச்சேரி பிரதேசசபை**
**கொடிகாமம்**
*02.05.2012.*

(C\1354) (6,7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வந்து போகும் மே நாள்கள் தந்த பெறுபேறுகள் தான் எவை?

இன்று மே நாள். உழைக்கும் வர்க்கத்தினரான தொழிலாளர்களை, பாட்டாளிகளை, அவர்களின் உழைப்பை முதலாளிகள் உட்பட அனைத்து மக்களும் மதிக்கும் சிறப்புறு நாளாக அது கொள்ளப்படுகிறது; கொண்டாடவும் படுகிறது.

முதலாளி வர்க்கத்தினரின் அடக்கு முறைக்கு எதிராக, உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டதன் மூலம், தங்களுக்கு உரித்தான உரிமைகளை நிலைநாட்டியதன் சிறப்பை நினைவுபடுத்தும் நாளாகவும் மே மாதம் முதலாம் திகதி அமைகிறது.

தேசங்கள், தேசியங்கள் மற்றும் பல வகையறாக்களுக்குள் அடங்கும் சமூக எல்லைகள் எல்லாவற்றையும் கடந்து இந்த நாள் - இன்றைய நாள் - உலகப் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

உலகின் உழைக்கும் சக்தி தொழிலாளியே ஆவான். அவனுடைய அந்தச் சக்தியே உற்பத்திகளாகி உலக மக்களின் வாழ்வியக்கத்திற்கு உறுதியாகவும் ஆதாரமாகவும் விளங்குகிறது. இது மிகைப்பட்ட கருத்தியல் கோட்பாடல்ல. மனித சமுதாயத்தின் மாற்றங்களுக்கும், பல வகைப்பட்ட அவர்தம் முன்னேற்றத்துக்கும் முதுகெலும்பாக விளங்குவது எனவும் இதனைக் கொள்ளலாம், சொல்லலாம்.

தொழிலாளர் பெருமக்களின், உடல், உள உழைப்புகளை, வசதி படைத்தவர்களான முதலாளிகள் தாம் உறுஞ்சிச் சுகபோகம் அனுபவித்ததனை குறிப்பிடத்தக்க அளவீக்கு மாற்றி அமைத்ததற்கான குறியீடே, ஆண்டுதோறும் அனைத்துலக மட்டத்தில் கொண்டாடப்படும் இன்றைய மே நாள்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆட்சிக் கட்டிலை அலங்கரிக்கும் அரசியல் கட்சிகள், தமது பிரதான மே தின விழாக்களைத் தலைநகரான கொழும்பில் நடத்துவதும் மாகாண நகரங்களில் இருந்து தமது கட்சி ஆதரவாளர்களை (பல சந்தர்ப்பங்களில் கூலிக்கும்) வாகனங்களில் கொண்டுவந்து இறக்குவதும் ஒரு வழமை. மக்களின் ஆதரவு மிகப் பெரிய அளவில் தமக்கே உண்டு என்று காட்டுவதற்கான, பிரசாரம் செய்வதற்கான உத்தி அது.

பிரதான எதிர்க் கட்சிகள் தமது வருடாந்த மே தின விழாக்களை மாகாணத் தலை நகரங்களில் நடத்துவது வழமை.

அந்தவகையில் முதன்முறையாக, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தனது மே தின விழாவை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவசிஹல உருமயக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து யாழ். நகரில் நடத்துகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதான மே தினக் கூட்டம் கினிஹத்தேனையிலும், ஜாதிக விமுக்தி பெரமுனவின் மே தினக் கூட்டம் கொழும்பிலும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

மே தின விழாக்கள் நாட்டில் எத்தனை நடைபெற்றாலும் கடனில் மூழ்கும் நாடு, கண்ணீரில் வாடும் மக்கள், காணாமற்போகும் பத்திரிகையாளர்கள், தற்கொலைக்குத் தூண்டப்படும் விவசாயிகள், பட்டினிக்குள் தள்ளப்படும் தொழிலாளர்கள், கடத்தப்படும் எதிரணி அரசியல் வாதிகள், சர்வதேசப் பகைமை, இந்திய எதிர்ப்பு, இன, மதவாத மோதல்கள் - என்ற கோலங்களுக்கு மத்தியிலேயே இன்றைய மே தினம் கொண்டாடப்படுகிறது.

தொழிலாளர் நாளான மே தினம் இலங்கையில் முழுமையாக அரசியல் மயமாக்கப்பட்டிருக்கிறது. அது ஆரோக்கியமற்ற நிலையாகும். அடக்குமுறை, அதிகார துஷ்பிரயோகம், ஊழல், விரயங்கள், நீதிக்கு விரோதச் செயல்கள், கடத்தல், கைது, காணாமற் போதல், பழிவாங்குதல் ஆகியவற்றுக்கு முடிவு கட்டப்படாத வரை மே தின விழாக்கள் அர்த்தமற்றவை, பெறுமதியற்றவை.

தேசிய ஒருமைப்பாட்டோடு மக்கள் சக்தியை ஒன்றிணைத்து, சகல இன மக்களுக்கும் உரித்தான சமாதான சுதந்திர இலங்கையை மீளக்கட்டி எழுப்ப அனைவரும் இன்றைய நாளில் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளுடன் இங்கு வாழ்வதற்கு வகை செய்யும் அரசியல் தீர்வு இதய சுத்தியுடன் விரைந்து காணப்படவேண்டும்.

அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் நாளாந்தம் உயர்கின்றன. பொருளாதாரச் சுமையில் சிக்கி சகல இன மக்களும் அன்றாட வாழ்வுக்கும் சீவனோபாயத்துக்கும் அல்லாடும் நிலைமை. தொழிலாளர்களும் விவசாயிகளும் உயிருக்குப் போராடும் வறுமை நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம், வாராந்தம் என்ற இடைவெளிகள் தப்பாது, மக்கள் மீது சுமைகளை ஏற்றிக்கொண்டு, மே தினக் கோலாகலம் காட்டி அவர்களை ஏய்க்காட்டுவது தப்பாத நடைமுறையாகிவிட்ட நாடாகி விட்டது இது!

நாட்டில் தேசிய நல்லுறவு சிதைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை ஆயுதமாக எடுத்துக்கொண்டு அரசியல் நடத்தும் அவலம் ஜெனிவா மாநாட்டுத் தீர்மானத்துக்குப் பின்பும் தொடர்கிறது. பௌத்த பேரினவாதம், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்கள் மீது சீறத் தொடங்கி உள்ளது. இவற்றைத் தடுத்து நிறுத் தும் பலம் தொழிலாளர் வர்க்கத்திடமும் உண்டு.

இலங்கையில் பல ஆண்டுகளாக, பல தரப்புகளாலும் மே தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனாலும் உழைக்கும் வர்க்கம் உரிமைகளை இழந்தே நிற்கிறது.

உழைக்கும் வர்க்கத்துக்காக நீண்டகாலமாகக் குரல் எழுப்பி வந்த டாக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீற்றர் கெனமன் போன்றோர், 1970 இல் சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்தும் உழைக்கும் வர்க்கத்துக்கு விடிவு ஏற் படவில்லை.

மறுபுறத்தில் 1972 அரசமைப்புச் சட்டம் சிறுபான்மை மக்களையும் உழைக்கும் வர்க்கத்தையும் மேன்மேலும் நசுக்குவதற்கு ஆரம்பித்தது. 1977 தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சி அமைத்ததற்கு பல இடதுசாரித் தலைவர்களுக்கும் பிரதான பங்கு உள்ளது.

மஹிந்த தலைமையிலான இன்றைய அரசும் மூன்றில் இரண்டு பலத்துடன் இருக்கிறது. நாட்டின் உழைக்கும் வர்க்கத்துக்கு இன்னும் விடிவு இல்லை. உழைக்கும் வர்க்கம் உரிமைபெற அவர்களுக்கு சரியான தலைமை வேண்டும். நீதியான அரசாட்சியும் அவசியம். வந்துபோகும் மே நாள்கள் அண்மைக் காலத்தில், இந்த ஆட்சிக் காலத்தில், மக்களுக்குத் தந்த ஆக்கபூர்வமான பெறுபேறுகள் தான் எவை? குறிப்பிட்டுக்கூற எதுவுமே இல்லை!



# முள்ளிவாய்க்கால் நினைவு லண்டன் மாநகர் மத்தியில்

லண்டன், மே 1

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டதை நினைவு கூரும் நாளான மே மாதம் 18 ஆம் நாளை வேற்றின மக்களும் ஒன்றுகூடும் லண்டன் நகரின் மையப்பகுதியில் நடத்தப் பிரிட்டன் தமிழர் பேரவை முடிவெடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

''ஓர் இனத்தின் அழிவை, குறிப்பிட்ட அந்த இன மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த முடியாது. தமிழர்கள் மட்டும் ஓர் இடத்தில் கூடிநின்று மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செய்வதால் என்ன பயன்?

தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட்ட இந்த இன அழிப்பு வேற்றின மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய ஒன்று'' என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

> ஓர் இனத்தின் அழிவை, குறிப்பிட்ட அந்த இன மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த முடியாது. இந்த இன அழிப்பு வேற்றின மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டிய ஒன்று.

தமிழர் அல்லாத பல்லின மக்கள் முள்ளிவாய்க்காலில் எம்மின மக்கள் கொல்லப்பட்டதை அறிய வேண்டும். துடிதுடித்து இறந்த தமிழ்க் கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் நிலை பற்றி அறிய வேண்டும். எனவே முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை வேற்றின மக்களும் அறியக்கூடிய வகையில் லண்டன் நகரில் மையப்பகுதியில் நடத்த வேண்டும் எனப் பிரிட்டன் தமிழர் பேரவை மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

யூதர்கள் தமது இனவழிப்பு நாளை 'ஹோலகாஸ்ட்' என்று பிரகடனப்படுத்தியது போன்று தமிழர்களின் இன அழிப்பு நாளாக 'முள்ளிவாய்க்கால் நாள்' பிரகடனப்படுத் தப்பட வேண்டும் எனப் பிரிட்டன் தமிழர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் என்ற இந்தச் சொல்லானது ஐக்கிய ராச்சிய ஆங்கில அகராதியில் சேர்க்கப்பட வேண்டிய சொல் என்ற பிரசாரத்தையும் தமிழ் மக்கள் முன்னெடுக்கவுள்ளனர். (த)

# இந்திய அரசின் வீட்டுத் திட்டத்துக்கு நிபந்தனையுடன் மேலும் பயனாளிகள்

## முன்னுரிமையில் பட்டியல்படுத்துமாறு தெரிவிப்பு

தென்மராட்சி,மே 1

இந்திய அரசின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 50 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்திற்கு மேலும் பயனாளிகளைத் தெரிவு செய்யுமாறு யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம் சகல பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கும் மீள நிர்மாணிப்பதற்கு தனியாகவும் திருத்தத்துக்குத் தனியாகவும் படிவங்களைப் பூர்த்தி செய்து முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் தயாரிக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

மேலதிகமாகத் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு மீள நிர்மாணத்துக்கும் திருத்தத்துக்கும் தனித் தனியாகப் படிவங்களை பூர்த்தி செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக தெரிவுசெய்யப்படுபவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊனமுற்ற குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம், ஒருவர் தலைமை தாங்கும் குடும்பம், அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம், வயோதிப வயதினை உடைய குடும்பம், தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பம், அனர்த்தத்தின் போது வீடு தரை மட்டமானது அல்லது சேதமடைந்த நிலை மற்றும் பிற தகுதியான காரணங்கள்.

பயனாளிக்கு நிரந்தரமாக வீடு ஒன்று இருந்தாலோ அல்லது குடும்ப அங்கத்தவருக்கு நிரந்தர வீடு இலங்கையில் எந்தப் பகுதியில் இருந்தாலோ அவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படல் வேண்டும்.

பயனாளி நேரடியாகவோ அல்லது தங்கி வாழும் குடும்ப அங்கத்தவராகவோ ஏதாவது நிரந்தர வீடமைப்பு உதவித்திட்டத்தின் கீழ் உதவி பெற்றிருக்கக் கூடாது.

நிரந்தரமாகச் சொந்தக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்தவராக இருத்தல், காணிக்குரிய உரிமை ஆவணம் இருத்தல் வேண்டும்.

கிராம சேவை பிரிவு ரீதியாக பயனாளிகள் தெரிவு செய்வதற்காக கிராம அலுவலர் தலைமையில் குழு அமைத்து குழுவில் பிரதேச பிரிவிலிருந்து ஒருவரும் கிராம பொது அமைப்புகளின் தலைவரும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ம-9)

## சாவகச்சேரி நீதிபதியாக லெலின்குமார் நியமனம்

தென்மராட்சி, மே1

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக எஸ்.லெலின்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் நீதிவான் மன்ற நீதிவானாகவும், குடும்ப நீதிமன்றம், சிறுவர் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாளை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரினால் இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கடமையாற்றிய அ.அ.ஆனந்தராஜா யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து அந்த இடத்துக்கு எஸ்.லெலின்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## தொழிலாளருக்கு இன்று விடுமுறை

தென்மராட்சி, மே 1

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைப் பரப்பில் உள்ள வணிக, தொழில் நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கருதி தொழிலாளர் தினமான இன்று அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக, தொழில் நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார். (ம-9)

### 3 மில்லியன் ரூபா வரை வழங்க முடிவு

# ஆயுள்வேத அபிவிருத்திக்கு இலங்கை வங்கி கடனுதவி

யாழ்ப்பாணம்,மே 1

சித்த ஆயுள்வேத வைத்தியர்களின் தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 3 மில்லியன் ரூபா வரையிலான நிதியை இலங்கை வங்கி கடனாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

வடமாகாணத்தில் சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தமது தொழில் அபிவிருத்தியை மேம்படுத்த நிதிப் பற்றாக்குறை ஒரு தடையாக இருந்தது. இது தொடர்பாக சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் வைத்த கோரிக்கைக்கு அமைவாக இலங்கை வங்கி இந்தக் கடனுதவியை வழங்க முன்வந்துள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த பாரம்பரிய சித்த வைத்தியர்கள் தாம் சார்ந்த சபையின் ஊடாகத் தேவைக்கேற்ப 30 மில்லியன் ரூபா வரையிலான நிதியைக் கடனாக குறைந்த வட்டியுடன் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிதி மூலம் மூலிகைத் தோட்டங்களை அமைத்து ஆயுள்வேத மருந்துகளைத் தயாரிப்படுத்தி சித்த ஆயுள்வேத வைத்தியத்தில் எதிர்கொண்டுள்ள மருந்துத் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## பத்திரிகை சுதந்திர தின கருத்தரங்கு

கொழும்பு, மே 1

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் 3 ஆம் திகதி கருத்தரங்கொன்றை நடத்தவிருக்கின்றது.

'சமூகத்தை மாற்றி அமைப்பதற்கு உதவும் ஊடகமும் அதன் சுதந்திரமும்' என்ற தொனிப் பொருளில் இந்தக் கருத்தரங்கம் நடைபெறும்.

கொழும்பு கிருல வீதியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை காலையில் இந்த நிகழ்வு இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் மேதினக் கூட்டம்

மன்னார்,மே 1

மன்னாரில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மேதினக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

தொழிலாளர்களின் உரிமைக்காக ஒன்றிணைந்து குரல் கொடுக்கும் வகையிலும், அவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அனைவரையும் அணிதிரண்டு வருமாறும் மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(க-12)

# நியமனங்களுக்கு எதிர்ப்பு

## செல்வம் எம்.பி. அறிவிப்பு

மன்னார், மே 1

வன்னி மாவட்ட வைத்தியசாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறையற்ற சிற்றூழியர்கள் நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதமும், ஆர்ப்பாட்டமும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

**முறையற்ற நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொடர் ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதத்தையும் மேற்கொள்ளவிருப்பதாக அவர் தெரிவித்தார்.**

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சிற்றூழியர்களை நியமிக்கும் பொருட்டு நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன. ஆனால் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களை ஒதுக்கி வைத்து விட்டு அரசியல்வாதிகள் சிலரின் ஆதரவாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தற்காலிக அடிப்படையில் பல வருடங்களாக கடமையாற்றியவர்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்தே இந்த முறையற்ற நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தொடர் ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதத்தையும் மேற்கொள்ள விருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே வவுனியாவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

(க-12)

## தனியாருக்கு சொந்தமான காணியில் திடீரென தகனம் செய்யப்பட்ட சடலம்

### வவுனியா தச்சன் குளத்தில் பரபரப்பு

வவுனியா, மே 1

வவுனியாவில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலம் அனுமதி ஏதும் இன்றித் திடீரெனத் தகனம் செய்யப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா தச்சன்குளம் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த இடத்துக்கு அருகிலேயே விமானப்படைத்தளம் அமைந்துள்ளது.

இது தொடர்பாக உடனடியாகவே வவுனியா நகர சபையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற நகர சபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையிலான குழுவினர் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இந்தப் பகுதியில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றமை கண்டிக்கத்தக்கது என்றும் இது தொடர்பாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதாகவும் நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா அரச அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(க-400)



முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனை ஆறுமுகத்தான் குளம் முன்பள்ளிச் சிறுவர்கள் கட்டடம் எதுவும் இல்லாத நிலையில் மரத்தின் கீழ் அமர்ந்திருந்து கற்கும் பரிதாப கோலம். (435)

## பயன்படுத்தப்படாத சமுர்த்திக் கட்டடங்கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுகின்றன

### வவுனியா பிரதேச செயலர் கவலை

நெடுக்குளம், மே 1

பயன்படுத்தப்படாத சமுர்த்திக் கட்டடங்களைச் சிலர் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் அவல நிலை காணப்படுகின்றது என்று கவலை தெரிவித்திருக்கிறார் வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன்.

வேப்பங்குளம் சமுர்த்திச் சங்கம் நடத்திய புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இந்தக் கட்டடங்களில் சிலவற்றைப் பொலிஸார் தமக்குத் தேவையெனக் கேட்கின்றனர். சில கட்டடங்கள் ஆடு, மாடுகளின் உறைவிடமாக மாறியுள்ளன.

கட்டடங்கள் பயன்படுத்தப்படாவிட்டால், அது சமூக விரோதமான செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக அமைந்துவிடும்.

இவ்வாறு வேப்பங்குளம் சமுர்த்திச் சங்கம் நடத்திய புத்தாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கி எதிர்காலத்தில் தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, சனச வங்கி போன்று ஒரு காலத்தில் வளர்ச்சி பெறும் வாய்ப்புக்கள் உள்ளன.

தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி போன்றன ஆரம்பகாலத்தில் இப்போது சமுர்த்தி வங்கி எவ்வாறு இருக்கின்றதோ அவ்வாறே இருந்துள்ளன. எதிர்காலத்தில் நுண்கடன் திட்டம், குழுச் செயற்பாடுகள் என்பவற்றுக்கு சமுர்த்தி வங்கிகளால் கடன்கள் வழங்கப்படும்.

வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சமுர்த்தி வங்கிகள் உதவிகளை வழங்கவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-402)

# மணல் கடத்திய நபர் மீது கடற்படை கடும் தாக்குதல்

### படுகாயங்களுடன் எம்.பியின் சகோதரர் வைத்தியசாலையில் சேர்ப்பு

மன்னார், மே 1

அரச தரப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார் என்று கூறப்பட்டு மன்னார் பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குறித்த நபர் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நீண்ட காலமாக முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மணல் மற்றும் மண் விற்பனையில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை வேளையில் சிலாவத்துறைக் காட்டுப் பகுதியில் வழமை போன்று மண்ணை ஏற்றிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கடற்படையினர் இது தொடர்பாக விசாரித்துள்ளனர். இதன் போது கடற்படையினருக்கும், இந்த நபருக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற கடற்படையினர் இந்த நபரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதல்களால் கடுமையான காயங்களுக்குள்ளாகிய நபர் ஏனையோரின் உதவியுடன் இரவு 7 மணியளவில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அரச தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் தாக்கப்பட்ட சம்பவம் என்பதால் இது மன்னாரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-12)

## தனியார் பஸ்களில் வெவ்வேறு கட்டணங்கள்

வவுனியா, மே 1

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ்களில் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, ஆனையிறவு, புதுக்காடு, பளை, கொடிகாமம் ஆகிய இடங்களுக்குச் செல்வோரிடமும் யாழ்ப்பாணத்துக்கான கட்டணமே அறவிடப்படுவதாக பயணிகள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

மேலும் யாழ்ப்பாணம் செல்வதற்கு இந்த பஸ்கள் 5 மணித்தியாலயங்கள் எடுப்பதால் பயணிகள் பல்வேறு பாதிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

கட்டண விவரம், புறப்படும் நேரம், சென்றடையும் நேரம் போன்ற விவரங்களை பஸ்களிலும் பஸ்தரிப்பு இடங்களிலும் தனியார் பஸ் சங்கம் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-402)

## தாலிக்குளத்தில் மருத்துவ முகாமால் அதிகபயன்

வவுனியா, மே 1

வவுனியா தாலிக்குளம் பகுதியில் இலவச மருத்துவ முகாம் ஒன்று வவுனியா போதனா வைத்தியசாலை மருத்துவர்களால் நடத்தப்பட்டது.

மிகவும் பின்தங்கிய கிராமமாகிய தாலிக்குளத்தில் அதிகளவிலானோர் விசேட தேவையுள்ளோராகக் காணப்படுவதால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நீக்கும் முகமாகவே இந்த இலவச மருத்துவ முகாம் இங்கு நடத்தப்பட்டதாக இதன் ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

குழந்தை மருத்துவ நிபுணர், மகப்பேற்று வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர் உட்படப் பல மருத்துவ நிபுணர்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

(க-400)

# அதிகளவு நில வாடகை மன்னார் விவசாயிகள் கவலை

மன்னார்,மே 1

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் விவசாயம் மேற்கொள்ளப்படும் நிலங்களுக்கு இந்தமுறை அதிகளவில் நில வாடகை அறவிடப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் மாந்தை மேற்கு, நானாட்டான் ஆகிய பகுதிகளிலுள்ள புலவுக் காணிகளில் ஆண்டுதோறும் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படுவது நீண்ட காலமாகவே வழக்கத்தில் உள்ளது.

**இந்த முறை ஒரு ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்வதற்கு 8 ஆயிரம் ரூபா குத்தகையாக நிலச்சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.**

இலங்கையிலேயே மன்னார் மாவட்டத்தில் மாத்திரமே புலவுக் காணிகள் உள்ளன.

இந்த முறை காலபோகத்தில் 5 ஏக்கரில் செய்கை பண்ணியவர்களுக்கு ஒரு ஏக்கர் சிறுபோகப் பங்கு வழங்கப்படுகின்றது. ஆனால் இந்த முறை ஒரு ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்வதற்கு 8 ஆயிரம் ரூபா குத்தகையாக நிலச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

புலவுக் காணியில் சிறுபோகச்செய்கை மேற்கொள்ளும்போது குத்தகை வழங்க வேண்டிய தேவையில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிறுவனங்களில் அடிப்படை வசதி ஏற்படுத்த அவகாசம்

## சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை விதித்தது

**மாணவர்களுக்கு உடல் உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளவதுடன் கல்வி நிலையத்தில் சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்படல் வேண்டும்**

தென்மராட்சி, மே 1

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் ஒரு மாத காலத்தினுள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்வதுடன் மாணவர்களுக்கான அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவுறுத்தியுள்ளனர்.

ஒரு மாத காலத்தினுள் பின்வரும் விடயங்களை பூர்த்தி செய்யாத தனியார் கல்வி நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

* பிரதேச செயலகத்தில் தனியார் கல்வி நிறுவனம் பெயர்ப்பதிவு செய்யப்படல் வேண்டும்.

* கல்வி நிலைய பெயர்ப் பலகை நிலையத்தின் முன்பாக நிரந்தரமாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்,

உள்ளூராட்சி மன்றத்தின் வருடாந்த வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்,

* சுற்றாடல் சுத்தமாகப் பராமரிக்கப்படல் வேண்டும்.

* திண்மக்கழிவு அகற்றப்பட குப்பைக் கூடைகள் வைக்கப்படுவதுடன் பொருத்தமான முறையில் இறுதி அகற்றல் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

* மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான அளவு மலசல கூட வசதிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்,

* போதிய பாதுகாப்பான குடிதண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

* முதலுதவிப் பெட்டி எப்போதும் பாவிக்கக் கூடிய நிலையில் பேணப்படல் வேண்டும், மாணவருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய காரணிகள் கல்வி நிலைய வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு உடல் உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளல், கல்வி நிலையத்தில் சம்பவத்திரட்டுப் புத்தகம் பேணப்படல் வேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-9)

# ஹெரோயின் வலையமைப்பு: சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 1

ஹெரோயின் விநியோகிக்கும் வலையமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட 5 பேரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நொருக்கினர். இதில் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். ஐந்து சந்தியைச் சேர்ந்த பேபியன் என்று அழைக்கப்படும் எஸ்.கரிகரன் (வயது- 26), இரட்ணசிங்கம் வசீகரன் (வயது-24), பாலராஜா சிறிகாந் (வயது-23), இரட்ணசபாபதி பிரியந்தன் (வயது-24), சேகரன் சிறிகரன் (வயது - 24) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

பிரதான சந்தேகநபரான பேபியனிடமிருந்து 50 சிறிய ஹெரோயின் பைக்கட்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன. இந்தப் பிரதான சந்தேகநபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையும் ஏனையவர்களை எதிர்வரும் 4ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, 4.8 கிராம் ஹெரோயின் வைத்திருந்த மற்றொரு சந்தேக நபரை பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு நேற்று முன்தினம் கைது செய்தது. யாழ்.மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திப் பகுதியில் வைத்து அதே இடத்தைச் சேர்ந்த ஜெயராஜ் சுரேஸ்குமார் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் அவரைப் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க பொலிஸார் அனுமதி கோரினர்.

பதில் நீதிவான் அதற்கு அனுமதி வழங்கியதோடு எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் முற்படுத்தவும் உத்தரவிட்டார். (ம-4)

### திராட்சையில் உடுவில் விவசாயிகள் ஆர்வம்

உடுவில் பிரதேச விவசாயிகள் திராட்சைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயத் திணைக்கள புள்ளி விவரங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் இந்தப் பகுதிகளில் 5ஹெக்ரெயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட போதிலும் இந்த ஆண்டு 10 ஹெக்ரெயர்நிலப் பரப்பில் திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற நெருக்கடி நிலைகளால் திராட்சையைச் சந்தைப்படுத்த முடியாத நிலைமை இருந்தது. தற்போது சந்தை வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில் விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

# வெள்ளம் தேங்கும் இடங்களை திருத்தியமைக்க கோரிக்கை

வடமராட்சி, மே 1

அல்வாய் கிழக்கு தெருமூடி மடத்தடி- தம்பசிட்டி வீதியில் இரு இடங்களில் மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் குறித்த இடங்களில் மதகுகளை அமைத்து வெள்ளம் ஓடுவதற்கு வழி செய்யுமாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புலோலி, அல்வாய் ஆகிய கிராமங்களை இணைக்கும் வீதியிலேயே இந்த நிலைமை உள்ளது.

இந்த வீதியில் தெருமூடி மடத்தடிச் சந்தியிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் மழைகாலங்களில் வெள்ளம் ஓடுவதற்கு ஏற்ப வீதி அமைக்கப்பட்டுள்ள போதிலும் மழை காலங்களில் வெள்ளம் ஓடாமல் தேங்கி நிற்கிறது.

வெள்ளம் தேங்கி நிற்பதால் இதனூடாக மாணவர்கள், பொதுமக்கள் பயணிப்பதில் பெரும் இடர்களை மழை காலங்களில் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் தம்பசிட்டி நோக்கிய வீதியில் வெள்ளுருவைச் சந்தியிலும் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# கடன் கொடுக்க மறுத்ததால் கணவன், மனைவி மீது தாக்கு

தென்மராட்சி, மே 1

கடன் கொடுக்க மறுத்த வணிக நிலைய உரிமையாளரையும் அவரது மனைவியையும் உடைத்த சோடாப் போத்தலால் குத்திக் காயப்படுத்தினார் எனக் கூறப்படும் நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு மீசாலையில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னத்துரை (வயது- 52), இவரது மனைவியான சின்னத்துரை கமலாதேவி (வயது- 48) ஆகியோரே உடைந்த போத்தலால் குத்தப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். சி.சின்னத்துரை வயிற்றிலும் கையிலும் காயமடைந்திருக்கின்றனர். அவரது மனைவியான சி.கமலாதேவி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று திரும்பினார்.

சந்தேகநபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-9)

# தனங்களப்பில் காலபோகத்தின்போது கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த வலியுறுத்து

## பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை

தென்மராட்சி, மே 1

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு வயல்களில் இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ள பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுமா என்று நெற்செய்கையாளர்கள் கேட்டுள்ளனர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இந்தப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலையில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் விவசாய சம்மேளனங்களால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.

கடந்த வருட காலபோக நெற்செய்கையின்போது மேலும் 600 ஏக்கர் வயல்களில் நெல் விதைக்க அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்து இந்தப் பகுதியில் வயல்கள் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டனர்.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் போது பாதுகாப்பு வேலி இல்லாததால் அவற்றை அமைத்துத் தருமாறு விவசாய சம்மேளனம், கமநல சேவைகள் நிலையம், விவசாயத் திணைக்களம், தென்மராட்சிப் பிரதேச செயலகம், யாழ். அரச அதிபர், சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்குப் பல தடவைகள் முறையிட்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபை கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்க ஏற்பாடுகள் மேற்கொண்ட போதிலும் கட்டாக்காலியாக அலையும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாடுகளையே பிடிக்க முடிந்திருந்தது.

விதைக்கப்பட்ட நெல் பயிராகி அறுவடைக் காலம் வரைக்கும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவில்லை. இதனால் அங்கு பயிரிடப்பட்ட நெற் செய்கையாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த வருடத்துக்குரிய காலபோக நெற்செய்கைப் பணிகள் ஆரம்பிக்க இன்னும் மூன்று மாதங்களே உள்ளன.

கடந்த வருட நெற்செய்கையின் இரண்டாம் கட்ட உரமானிய விநியோகத்தின்போது விவசாய சம்மேளனத்தால் அறவிடப்பட்ட நிதி உள்ள நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலிகளை பின்னகர்த்திப் புதிய வேலிகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெற் செய்கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். ஏற்கனவே போடப்பட்ட பாதுகாப்பு வேலியின் முட்கம்பிகள் பழுதடைந்த நிலையில் கட்டாக்காலி மாடுகளாலும் மாடுகள் பிடித்தோராலும் சேதமாக்கப்பட்டுள்ளன.

புதிய பாதுகாப்பு வேலிகள் அமைத்து இந்த வருட காலபோக நெற்செய்கைக்கு உத்தரவாதம் வழங்குமாறும் நெற்செய்கையாளர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

# முழுமையான பாடப்பரப்பு தேர்ச்சி ஆசிரியருக்கு அவசியம்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 1

பாடப்பரப்புகளில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களால் மாணவர்களுக்குக் கற்பித்தல் செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியாது. வலிகாம வலயத்தில் அண்மையில் வெளியான கணித பாடப் பெறுபேறுகள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

குறித்த பாடப்பரப்புகள் கடினம் என்ற எண்ணம் தரம் 6 இல் இருந்தே ஆசிரியர்களால் மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுவிடுகிறது.

இதனால் மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 2010 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழ நேற்று முன்தினம் பாடசாலையில் நடைபெற்றது. இதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலிகாமம் வலயத்தில் கடந்த சாதாரண தரப் பரீட்சையில் நூறு வீதம் சித்தியடைந்த பாடசாலைகள் இல்லையா எனக் கேட்கின்றனர். அது சாத்தியமில்லை. நடுத்தர மாணவர் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி நகர்கின்றனர் என்ற பதிலே ஆசிரியர்களிடம் இருந்து கிடைக்கிறது.

2011ஆம்ஆண்டுசாதாரண தரப் பரீட்சையில் வலயம் ஒன்றைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலை ஒன்று 100 வீதம் சித்தியடைந்துள்ளது.

நிச்சயமாக ஒருநாள் உழைப்பில் அந்தப் பாடசாலைகள் இருக்கவில்லை. கடந்த ஒரு தசாப்தகாலமாக படிப்படியாக உருவாக்கப்பட்ட கல்வி முறையிலேயே அவ்வாறான வெற்றி கிடைத்துள்ளது.

பெரும்பாலான பாடசாலைகளில் அண்மையில் வெளியான சாதாரணதரப் பெறுபேறில் பிரதான 6 பாடங்களைத் தேர்ந்தெடுத்து சித்திகளை அடிப்படையாகக் கொண்டு வரிசைப்படுத்தினர். அதில் ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கணித பாடத்தில் ஒரு புள்ளியைக் கூடப் பெற்றிருக்கவில்லை.

அந்த வினாக்களை எடுத்து ஆய்வு செய்ததன் மூலம் சில வினாக்களை எந்த மாணவனும் தெரிவு செய்யவில்லை. அந்தப் பகுதிகள் கடினம் என்ற எண்ணம் தரம் 6 இல் இருந்தே மாணவர்களுக்கு ஊட்டப்பட்டுள்ளது.

கருத்தமர்வு ஒன்றில் 250 கணித ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். 217 ஆசிரியர்கள் சென்றிருந்தனர். அவர்களுக்கு அதேவினாக்கள் அடங்கிய கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. எந்தெந்த வினாக்களை மாணவர்கள் கைவிட்டனரோ அதே வினாக்களை ஆசிரியர்களும் கைவிட்டிருந்தனர்.

அந்தப் பாடப்பரப்புத் தொடர்பாக ஆசிரியர்கள் தேர்ச்சி பெறாமல் இருந்துள்ளனர். அதனைச் சரியாகக் கற்பிக்கக் கூடிய மிகச் சரியாக அறிவு அவர்களிடம் இருந்திருக்கவில்லை. இது நிச்சயமாக மாணவர்களுக்கு பலவீனமான நிலையையே ஏற்படுத்தும். இதனை பாடத்துறை சார் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங். கூட்டணியிலிருந்து விலகவே ஈழம் குறித்து பேசுகிறார் கருணாநிதி

## பழ.நெடுமாறன் காட்டம்



பெங்களூர், மே.1

காங்கிரஸ் கூட்டணியிலிருந்து விலகுவதற்காகவே தமிழ் ஈழம் குறித்து கருணாநிதி பேசத் தொடங்கியிருக்கிறார் என்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

இது குறித்து பெங்களூரில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் 1977ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்களுக்கே தமிழர்கள் வாக்களித்துள்ளனர். அங்கு 1997இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் ஈழத்தை முன்வைத்து போட்டியிட்டபோது ஒரு தொகுதியைத் தவிர ஏனைய தொகுதிகளில் தமிழர் கள்தான் வெற்றி பெற்றனர். தமிழ் ஈழத்துக்கு 35 ஆண்டுகளாக அங்குள்ள தமிழர்கள் ஆதரவளித்து வருகின்றனர்.

**2009ஆம் ஆண்டு ஒரு லட்சம் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டபோது, அதைத் தடுக்க எதையும் செய்யாததால் கருணாநிதி மீது உலகத் தமிழர்கள் கோபத்தில் உள்ளனர்.**

தமிழ் ஈழத்துக்காக மீண்டும் பொதுவாக் கெடுப்பு நடத்துவதை நான் எதிர்க்கவில்லை. வெளிநாடுகளில் அதிகளாக உள்ள தமிழர்களை மீண்டும் தாயகத்தில் குடியேற்றிவிட்டு சுதந்திரமான முறையில் ஐ.நா. பார்வையாளர்களின் நேரடிக் கண் காணிப்பில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். அப்போதுதான் மக்களின் உண்மையான உணர்வுகள் வெளிப்படும்.

1983இல் கருணாநிதி, வீரமணி மற்றும் நானும் சேர்ந்துதான் டெசோ அமைப்பை உருவாக்கினோம். ஆனால், எங்கள் யாரிடமும் ஆலோசிக்காமல் டெசோ இனி இயங்காது என்று கருணாநிதி அறிவித்தார். அதேபோல, இப்போதும் யாரிடமும் கேட்காமல் டெசோ மீண்டும் உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

2009ஆம் ஆண்டு ஒரு லட்சம் தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டபோது, அதைத் தடுக்க எதையும் செய்யாததால் கருணாநிதி மீது உலகத் தமிழர்கள் கோபத்தில் உள்ளனர். அதை மாற்ற செம்மொழி மாநாடு ஆரம்பித்து டெசோ வரை அவருக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து பார்க்கிறார்.

காங்கிரஸ் கூட்டணியில் இருந்து கருணாநிதி விலக விரும்புவதால் தமிழ் ஈழக் கோரிக்கையை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார் - என்றார் அவர். (வ)

## அகிலேஷ் பெயரில் புதிய வகை மாம்பழம் அறிமுகம்

லக்னோ,மே.1

உத்தரப் பிரதேசத்தில் இந்த வருடம் அறிமுகமாகும் புதிய வகை மாம்பழத்துக்கு அந்த மாநில இளம் முதலமைச்சர் அகிலேஷ் யாதவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தோட்டக்கலை நிபுணரான பத்மஸ்ரீ ஹாஜி கலிமுல்லாகான், இதற்கு முன் உருவாக்கிய மாம்பழங்களுக்கு சச்சின் டெண்டுல்கர், ஐஸ்வர்யா ராய், சோனியா காந்தி ஆகியோரின பெயர்களை வைத்துள்ளார். தற்போது புதிய முறையில் உருவாகி வரும் மாம்பழத்துக்கு மாநில முதல்வர் அகிலேஷ் யாதவின் பெயரை வைத்திருக்கிறார். இந்த புதிய வகை மாம்பழத்தின் ஒவ்வொரு காயும் ஒரு கிலோ எடை உள்ளது. அவை பழுத்தவுடன் முதல்வருக்குப் பரிசளிக்க விரும்புகிறேன் என்று அவர் பெருமையுடன் குறிப்பிட்டார். (வ)

## சிறைவாசம் அனுபவித்த இந்தியச் சிறுவன் விடுவிப்பு

டில்லி, மே.1

இந்திய சிறுவன் ஒருவன் வங்கதேச எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந் ததற்காக தனது தாத்தா, பாட்டியுடன் கைது செய்யப்பட்டு, ஒரு வருடம் சிறைத் தண்டனை பெற்று நேற்று விடுதலையாகியுள்ளான்.

மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த அரிபூல் (வயது 5) என்ற சிறுவன் கடந்த ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி உறவினர்களைப் பார்ப்பதற்காக அரிபூல், தாத்தா ஹச்சி முதீன்ஷேக், பாட்டி மப்ரோசாகாத்தூன் ஆகியோர் பங்களாதேஷ் எல்லைக்குள் சட்டவிரோதமாக ஊடுருவ முயன்றதாக அந்நாட்டு எல்லைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது குஷ்தியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதில் தாத்தா-பாட்டிக்கு இரு மாதமும், சிறுவனுக்கு ஒரு வருடமும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து சட்ட விரோதமாக இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று இந்தியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்திய மனித உரிமை அமைப்புகள் சிறுவனை விடுவிக்கக் கோரின.

இந்தநிலையில் கடந்த 15 ஆம் திகதி பங்களாதேஷ் உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ஒரு வருட சிறை தண்டனைக்குபின் சிறுவன் அரிபூல் நேற்று விடுதலையானான். (வ)

## நாசா விண்வெளி மையத்துக்கு சென்னை மாணவர்கள்



அமெரிக்காவில் இருக்கும் நாசா விண்வெளி மையத்தை பார்வையிட சென்னையில் உள்ள செட்டிநாடு வித்யாஸ்ரம் பாடசாலை மாணவர்கள் 100 பேர் அமெரிக்கா செல்லவுள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த 'ஸ்பேஸ் கிட்ஸ்' இந்தியா என்ற அமைப்பு இந்திய மாணவர்களிடையே விண் வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை அதிகரிக்க ஆண்டு தோறும் மாணவர் களை அமெரிக்காவில் இருக்கும் நாசா விண்வெளி ஆய்வு மையத்துக்கு அழைத்துச் செல்கிறது. இந்த ஆண்டு சென்னையில் உள்ள செட்டிநாடு வித்யாஸ்ரம் பாடசாலை மாணவர்கள் 100 பேர் மற்றும் அவர்களுக்குத் துணையாக ஆசிரியர்கள் 5 பேரை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல வுள்ளது.

அவர்கள் இன்று சென்னையில் இருந்து அமெரிக்காவுக்குப் புறப்படுகிறார்கள். அமெரிக்கா செல்லும் அவர்கள் நாசா விண்வெளி மையம், கனடாவில் உள்ள விண்கல் மையம் ஆகியவற்றை பார்வையிட்டு அங்குள்ள விஞ்ஞானிகளையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

நாசா செல்லும் மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்ச்சி சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அமெரிக்கத் தூதரக அதிகாரி ஜெனிபர் மெக்ன்டையர், கனடா தூதரக முதுநிலை வர்த்தக ஆணையாளர் சாஹூன் வேடிக், விண்வெளி வீராங்கனை மார்ஷா ஐவின்ஸ், ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா திட்ட இயக்குனர் ஸ்ரீமதி கேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மார்ஷா ஐவின்ஸ் நாசா குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். இன்று அமெரிக்கா செல்லும் மாணவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி சென்னை திரும்புகிறார்கள். (வ)

## பஸ் விபத்தில் 20பேர் சாவு

கோரக்பூர், மே.1

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் அருகே, 2 பஸ்கள் நேருக்குநேர் மோதி பள்ளத்தில் விழுந்ததில், 20 பேர் உயிரிழந் தனர். 25 பேர் காயம் அடைந்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் தெரிவித்ததாவது:-

உத்தரப் பிரதேச மாநிலம் கோரக்பூரி லிருந்து 20 கிலோ மீற்றர், தொலைவில் உள்ள மணிராம் பாலம் அருகே, தனியார் பஸ் ஒன்றும், அரச பஸ் ஒன்றும், நேருக்கு நேர் மோதி, பள்ளத்தில் கவிழ்ந்தன. இந்த விபத்தில், 15 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர்; 5 பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தனர். மேலும் 25 பேர் காயம் அடைந் தனர்-என்றனர். (வ)

## மின்னல் தாக்கி 27 பேர் சாவு

ஆந்திரா மற்றும் மேற்கு வங்கத்தில் மின்னல் தாக்கி 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் மேற்கு வங்கத்தில் மழை அவ்வப்போது பெய்து வருகிறது. ஆந்திராவில், பரவலாக பல மாவட்டங்களில் கனமழை பெய்தது. மின்னல் தாக்கமும் தீவிரமாக இருந்தது. இதில் 17 பேர் இறந்தனர்.

அதிகபட்சமாக, குண்டூர் மாவட் டத்தில் 10 பேர் உயிரிழந்தனர். கம்மம், வாரங்கல் மற்றும் பிரகாசம் மாவட் டங்களில் தலா இருவர் என, மொத்தமாக 17 பேர் உயிரிழந்தனர்.

அதேபோல் மேற்குவங்க மாநிலம், உதயநாராயண புரம் கிராமத்தில், நேற்று கனமழை பெய்தது. அப்பகுதியைச் சேர்ந்த சிலர் மரத்தின் கீழ் தஞ்சமடைந்தனர்.

அப்போது, திடீரென மின்னல் தாக்கி யதில், இரண்டு பெண்கள் உட்பட 10 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும், 16 பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. (வ)

## விமானப்படையில் விரைவில் இலகு போர்விமானம் 'தேஜஸ்'



ஹைதராபாத், மே.1

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமான மான 'தேஜஸ்' இந்த ஆண்டு விமானப்படையில் சேர்க்கப்படும் என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டி.ஆர்.டி.ஓ.) தலைவர் வி.கே. சாரஸ்வத் தெரிவித்தார்.

ஹைதராபாதில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற விமானத் தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கில் அவர் பேசினார். இதன்போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

1,855 மணி நேரம் பறந்து 'தேஜஸ்' விமானம் சோதிக்கப் பட்டது. சோதனையின் போது கண்டறியப்பட்ட அனைத்து குறை பாடுகளும் வெற்றிகரமாக நிவர்த்தி செய்யப்பட்டன. 'தேஜஸ்' இப்போது இறுதிச் சோதனை ஓட்டத்தில் நுழைந்துள்ளது.

'தேஜஸ்' விமானங்களைத் தயாரிக்கும் பணியை ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் ஆரம்பித்து விட்டது. இந்த ஆண்டே இந்திய விமானப் படையில் 'தேஜஸ்' சேர்க்கப்படும்.

கடற்படைக்குத் தகுந்த வகையில் வடிவமைக்கப்பட்ட 'தேஜஸ்' விமானம் முதல்முறையாகச் சோதித்துப் பார்க்கப் பட்டது. 'தேஜஸ்' கடற்படை ரகத்தால் சிறப்பான முறையில் விமானம் தாங்கிக் கப்பல்களில் தரையிறங்கவும், புறப்படவும் முடிந்தது. நிச்சயமாக இது இந்தியக் கடற்படையின் பலத்தை கூட்டும்-என்றார் அவர். (வ)

## சுயசரிதை எழுதுவதில் பிரதீபாவுக்கு ஆர்வம்

டில்லி, மே.1

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனது சுயசரிதையை எழுத பிரதீபா பாட்டீல் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக 2007ஆம் ஆண்டு பதவியேற்ற பிரதீபா பாட்டீலின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதம் நிறைவடைகிறது.

தற்போது புதிய ஜனாதிபதிக்கான வேட்பாளராக யாரை நிறுத்துவது என தனது கூட்டணிக் கட்சிகளை வளைக்கக் காங்கிரஸ், பா.ஜ. வலை வீசி வருகின்றன.

இந்த நிலையில் ஓய்வு பெற உள்ள ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், தனது 50 ஆண்டு கால அரசியல் பொது வாழ்க்கை மற்றும் ஜனாதிபதி பதவிக்காலம் குறித்து சுயசரிதை எழுதத் திட்டமிட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 1962ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம் ஜல்கோவான் தொகுதிக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டு தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார் பிரதீபா.

தொடர்ந்து 1985ஆம் ஆண்டு முதல் நான்கு முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், 1985-1990 வரை ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற 10ஆவது லோக்சபா பொதுத் தேர்தலில் அமராவதி தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதைத்தொடர்ந்து ராஜஸ்தான் மாநில ஆளுநராக இருந்தார். கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமை பெற்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க

# 1,000 பேர் போதாது

டமஸ்கஸ்,மே1.

வெறுமனே 1,000 கண்காணிப்பாளர்களைக் கொண்டு, சிரியாவில் இடம்பெறுகின்ற வன்முறைகளை நிறுத்திவிட முடியாது என, சிரியாவில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சிரிய அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள் கட்டுக்கடங்காது செல்வதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரச தரப்பும், போராளிகள் தரப்பிலும் மோதல் தவிர்ப்பினை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிரிய அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள் கட்டுக்கடங்காது செல்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

நேற்றுமுன்தினம் டமாஸ்கஸ் சென்ற கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொபர்ட் மூட் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாள்களில் மேலும் 30 சமாதான கண்காணிப்பாளர்கள் சிரியாவுக்கு செல்லவுள்ளனர்.

300 மேலதிக கண்காணிப்பாளர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை அனுமதி வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றைய தினம் இடம்பெற்ற வன்முறைகளில் 25 பேர் கொல்லப்பட்டனர் என்று தொண்டு நிறுவனங்கள் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 8.3 மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க கே.எப்.சிக்கு உத்தரவு



அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரைச் சேர்ந்தவர் மோனிகா சமான். 2005ஆம் ஆண்டு 7வயது சிறுமியாக இருந்தபோது தனது குடும்பத்தினருடன் அங்கு கே.எப்.சி. என்ற துரித கோழி இறைச்சி உணவுக் கடைக்கு சென்றாள். அங்கு ஏற்கனவே பொரித்துப் பேப்பரினால் சுற்றப்பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த கோழிஇறைச்சியை சாப்பிட்டாள்.

அவருடன் குடும்பத்தினரும் சாப்பிட்டனர். அதை சாப்பிட்ட அவர்களுக்கு சல்மோனல்லா என்ற நச்சு தாக்கியது. இதனால் சிறுமி மோனிகா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு மூளை பாதிக்கப்பட்டது. அதில், மிகவும் பாதிக்கப்பட்ட மோனிகா நடக்க முடியாமலும், பேச முடியாமலும் படுக்கையில் விழுந்தாள். எனவே அவளது வாழ்க்கை சக்கர நாற்காலியில் முடங்கியது.

இதைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் நியூ சவுத்வேல்ஸ் மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம்சாட்டப்பட்ட கே.எப்.சி. நிறுவனம் பாதிக்கப்பட்ட சிறுமி மோனிகா குடும்பத்துக்கு 8.3 மில்லியன் டொலர் நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டது. இந்த நிறுவனம் தனது பணியில் கவனமின்றி செயல்பட்டு சிறுமிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உடல் நலக் கேட்டை விளைவித்ததாக குற்றம் சாட்டியுள்ளது.

இந்தத் தீர்ப்பு தங்களுக்கு ஏமாற்றத்தை அளித்து இருப்பதாகவும் எனவே, இது குறித்து மேல்முறையீடு செய்ய இருப்பதாகவும் கே.எப்.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணமொன்றை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மியன்மாரை வந்தடைந்துள்ளார்.

ஜனநாயகச் செயற்பாட்டாளர் ஆங் சாங் சூகியை சந்திக்கவுள்ள பான் கீ மூன் மேலும் ஜனநாயக மறுசீரமைப்பை ஏற்படுத்துமாறு மியன்மார் அரசை வலியுறுத்தவுள்ளார்.

இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சிவில் அரச அதிகாரிகளை பான் கீ மூன் முதல் முறையாக சந்திக்கவுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரி கத்தரின் அஷ்டனின் பயணத்தை தொடர்ந்து ஐ.நா செயலாளர் நாயகம் மியன்மாருக்குச் சென்றுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதரக மட்ட அலுவலகத்தை மியன்மாரில் நிறுவவுள்ளதாக கத்தரின் அஸ்டன் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதனிடையே மியன்மாரில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் வலுவற்ற ஒன்றாக தற்போதும் காணப்படுவதாக நியூயோர்க்கில் வைத்து பான் கீ மூன் கூறியிருந்தார்.

முன்னாள் இராணுவ ஜெனரல் தான் சுவோவின் அழைப்பிபை ஏற்று கடந்த 2009 ஆம் ஆண்டு மியன்மாருக்கு பயணம் செய்த பான் கீ மூன் கருத்து வேறுபாடுகளுடன் அந்தப் பயணத்தை நிறைவு செய்திருந்தார்.

## தன்னாட்சியையே திபெத்தியர்கள் கேட்கின்றனர்



சீனாவிடமிருந்து திபெத்தியர்கள் முழு சுதந்திரத்தைக் கேட்கவில்லை; மாறாக, தங்களின் கலாசாரத்தைப் பாதுகாக்க ''போதுமான தன்னாட்சி'' வேண்டுமென்றுதான் அவர்கள் கோருகின்றனர் என திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா கூறினார்.

ஒட்டாவாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தலாய்லாமா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

தங்களின் தனித்துவம் மிக்க கலாசாரத்தைப் பேண திபெத்தியர்கள் தன்னாட்சி உரிமை கோருகின்றனர். சீனாவிடமிருந்து சுதந்திரம் பெற வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. நான் கனடா நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பரைப் பாராட்ட விரும்புகிறேன்.

அவர் திபெத்தியர்களின் மனித உரிமைக்கும் சீனாவுடன் வளர்ந்து வரும் வர்த்தக உறவுக்கும் இடையே ஒரு தெளிவான சமநிலையை மேற்கொண்டு வருகிறார்.

இந்த சிக்கலான விஷயத்தை அவர் சிறப்பாகக் கையாளுகிறார். அவர் சீனாவுடன் நெருக்கமான உறவு கொண்டிருக்கிறார். அதே நேரம் தனது ஜனநாயக மதிப்பீடுகளிலும் அவர் திடமாக நிற்கிறார்.

அதனால்தான் அவருக்கு என்னைச் சந்திக்கும் துணிவு இருக்கிறது என்றார் தலாய் லாமா.

## இஸ்ரேலியர்கள் பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள்

ஈரான் மீது இராணுவத் தாக்குதல் உத்தேசம் தொடர்பில் இஸ்ரேலின் தலைவர்கள் அந்த நாட்டு மக்களை பிழையாக வழிநடத்துகின்றனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது


இஸ்ரேலின் உள்ளூர் புலனாய்வுப் பிரிவு முன்னாள் தலைவரான யுவல் டிஸ்கின் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் இகுட்பாரக் ஆகியோர், ஈரானின் அணு ஆயுதத்திட்டத்தை தடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

எனினும் இஸ்ரேலியின் பாதுகாப்புப் படை தளபதிகள் ஈரான் மீதான தாக்குதல்களுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஈரான் இன்னும் அணுவாயுத உற்பத்திகளுக்குத் தயாராகவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே இஸ்ரேலின் தலைவர்கள் நாட்டு மக்களைப் பிழையாக வழிநடத்துகின்றனர் என்று இஸ்ரேலின் உள்ளூர் புலனாய்வுப் பிரிவு முன்னாள் தலைவரான யுவல் டிஸ்கின் குற்றம் சுமத்தியுள்ளார்.



மலேசியாவில் சட்டசீர்திருத்தத்திற்கு ஆதரவுகோரிய ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் கோலாலம்பூர் விமானநிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது...

## பொலிஸைத் திரும்பப் பெறும் தென்சூடான்

சர்ச்சைக்குரிய அபேய் பிராந்தியத்தில் இருந்து தமது அனைத்து பொலிஸாரையும் திருப்பப் பெறவுள்ளதாக தென்சூடான் அறிவித்துள்ளது.


இது தொடர்பான கடிதமொன்றை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவைக்கு தென் சூடான் அனுப்பியுள்ளது.

அதிபர் சல்வா கீர் தலைமையிலான அமைச்சர் சந்திப்பில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

சர்ச்சைக்குரிய அபேய் பிராந்தியத்தில் இருந்து துருப்பினர் மற்றும் பொலிஸாரைத் திருப்பப் பெற வேண்டுமென சூடான் மற்றும் தென் சூடான் ஆகிய நாடுகளை ஐ.நா. வலியுறுத்தியிருந்தது.

சூடானில் இருந்து கடந்த ஆண்டு தென் சூடான் சுதந்திரம் பெற்ற பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் நீடிக்கின்றன.

## ஆயுதக் கப்பல் மாட்டியது



சிரியாவின் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை விநியோகித்ததாகத் தெரிவிக்கப்படும் கப்பல் ஒன்றை லெபனான் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சியாரா லியோனில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தக் கப்பலில் கனரக ஆயுதங்கள் பல இருந்ததாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கப்பலில் இருந்த 11 கப்பல் பணியாளர்களும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை லிபியாவுக்குச் சொந்தமானவை என்று தகவல்கள் கூறுகின்றன.

சிரியாவின் கிளர்ச்சியாளர்களுக்கு லிபியா ஆயுதங்களை வழங்குவதாக ஏற்கனவே ரஷ்யா குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் தற்போது போர் நிறுத்தம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 35 ஆயிரம் கைதிகள் விடுவிப்பு

தென் ஆபிரிக்காவில் சுதந்திரமாக நடந்த தேர்தல் தினத்தையொட்டி, 35 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்கா வெள்ளையர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, கடந்த, 1994ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. இதில் நெல்சன் மண்டேலா போட்டியிட்டு அதிபரானார். இந்த நாளை கொண்டாடும் விதமாக அந்த நாட்டில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இதற்கிடையே இந்தத் தினத்தையொட்டி பல்வேறு சிறைகளில் சிறு குற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருந்த, 35 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

பாலியல் பலாத்காரம், போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்களால் தாக்குதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்த நடவடிக்கையால் சிறைகளில் கைதிகளின் நெரிசல் குறைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டுகள் 9 பங்களாதேஷில் வெடிப்பு



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன் தினம் தொடர்ச்சியாக 9 குண்டுவெடிப்புகள் இடம் பெற்றன.

பங்களாதேஷில் வேலை நிறுத்தப் போராட்டம் இடம் பெற்றுவரும் நிலையில் சம்பவதினத்தன்று இரவு எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதையடுத்து இந்தக் குண்டுவெடிப்புகள் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 9 சிறு குண்டுகள் வெடித்ததாகவும் இந்தச் சம்பவங்களில் யாரும் காயமடையவில்லை எனவும் பங்களாதேஷ் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி பிரமுகர்களில் ஒருவரான இலியாஸ் அலி கடந்த 17 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

இதை அடுத்து பங்களாதேஷ் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டங்களையும் பணிப் பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தென் பகுதி நகரான லக்மிபூரில் ஆளும் அவாமி லீக் கட்சி ஆதரவாளர்களுடனான மோதலொன்றின்போது, பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பல்கலைக்கழகத்துக்குள் கரடியின் அட்டகாசம்

அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழக வளாகமொன்றுக்குள் புகுந்து மரமொன்றில் ஏறிக்கொண்ட 200 கிலோ நிறையுடைய கரடியை பலர் இணைந்து பல்வேறு முயற்சிகளின் பின் பிடித்து காட்டில் விட்டுள்ளனர்.

அமெரிக்காவின் கொலரடா பல்கலைக் கழகத்திலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கரடியைப் பார்ப்பதற்கு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் திரண்டனர்.

அங்கு விரைந்த வனவிலங்கு ஊழியர்கள் கரடியைப் பிடித்து காட்டில் விடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

மரத்தில் ஏறியிருந்த இந்தக் கரடியை அம்பெய்து மயக்கமடையச் செய்தனர். சில நிமிடங்களின் பின் குறித்த கரடியானது 15அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தது.

பல்கலைக்கழக மற்றும் பொலிஸ் திணைக்கள அலுவலர்கள் தரையில் மெத்தையொன்றை விரித்து குறித்த கரடியைப் பிடித்துள்ளனர்.

அந்தக் கரடி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் மரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது என பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## லிபியாவின் முன்னாள் பிரதமர் மறைந்தார்



லிபியாவின் முன்னாள் பிரதமர் சுக்ரி கானெம், ஆஸ்திரியாவிலுள்ள ஆறொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 69 வயதான சுக்ரி கானெம், 2003 முதல் 2006 ஆம் ஆண்டு வரை லிபியாவின் பிரதமராக பணியாற்றியவர்.

அதன்பின் எண்ணெய் வளத்துறை அமைச்சராகப் பணியாற்றிய அவர், கேணல் கடாபிக்கு எதிரான கிளர்ச்சியைத் தொடர்ந்து கடந்த வருடம் மே மாதம் லிபியாவிலிருந்து தப்பிச் சென்றார்.

பின்னர் வியன்னாவைத் தளமாகக் கொண்ட நிறுவனமொன்றில் ஆலோசகராகப் பணியாற்றி வந்தார். அவரின் சடலம் டனுபே நதியிலிருந்து மீட்கப்பட்டதாக ஆஸ்திரிய பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறை இடம்பெற்றதற்கானத் தடயங்கள் எவையும் தென்படவில்லை எனவும் பிரேதப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லிபியாவை கிளர்ச்சிப் படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து கடாபி மற்றும் அவரது மகன்கள், அமைச்சர்கள் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

## இரசாயன ஆயுதங்களை அழித்தது ரஷ்யா

ரஷ்யா தன்வசம் வைத்திருந்த சுமார் 25 ஆயிரம் மெட்ரிக்தொன் இரசாயனஆயுதங்களை அழித்துள்ளது என அந்த நாட்டு வெளியுறவுத் தூதரகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

உலகம் முழுவதும் இரசாயனஆயுதங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ரஷ்யா கடந்த 15 ஆண்டுகளாக தன் வசம் வைத்திருந்த இரசாயன ஆயுதங்களைச் சிறிது சிறிதாக அழித்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி சுமார் 62 சதவீத அளவிற்கு ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும் மீதமுள்ளவைகளை 2015ஆம் ஆண்டிற்குள் 100சதவீதமும் அழித்து விட முடிவு செய்துள்ளதாகவும் கூறியுள்ளது.

அதே சமயம் அமெரிக்கா தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களை அழித்து விட்ட போதிலும் மீதமுள்ள 2 ஆயிரம் மெட்ரிக் தொன் ஆயுதங்களை வரும் 2021- முதல் 2023க்குள் முற்றிலுமாக அழித்து விட முடிவு செய்துள்ளது.

## சவூதியில் பெண்கள் விளையாட்டுக்கழகத்துக்கு அனுமதி

சவுதி அரேபியாவில்பெண்கள் விளையாட்டுக் கழகம் நடத்த அனுமதி வழங்குவது குறித்துப் பரிசீலிக்க அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவில் பெண்கள் தனியாக வெளியில் செல்ல கூடாது, கார் செலுத்தக் கூடாது, தேர்தலில் போட்டியிடக் கூடாது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதை எதிர்த்துப் பெண் உரிமை அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன. மேலும், சவுதி அரசு பாடசாலைகளில் மாணவிகள் விளையாட்டுகளில் ஈடுபடவும் தடை விதித்துள்ளது. விளையாட்டு வகுப்புகளும் இங்கு இல்லை. ஆனால், தனியார் பாடசாலைகளில் விளையாட்டுக்கென சிறப்பு வகுப்புகள் உள்ளன.

லண்டனில்வரும்ஜூலையில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டிகளில், ஓட்ட பந்தயங்களில் பங்கேற்கவும் சவுதி பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பெண்கள் விளையாட்டுக் கழகத்துகு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்துப் பரிசீலிக்க அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சவுதி விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை தலைவர் அப்துல்லா அல்ஜமீல் கூறுகையில், ''பெண்கள் விளையாட்டுக் கழகம் தொடர்பாக நிலவும் குழப்பத்தைப் போக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, பெண்கள் கழகம் நடத்தும் வழிமுறைகள் குறித்து ஆராயும்'' என்றார். எனினும், பெண்கள் விளையாட்டில் ஈடுபடக் கூடாது, ஜிம்களில் உடற்பயிற்சி செய்ய கூடாது. அப்படிச் செய்தால், அவர்களுடைய கன்னித் தன்மை பாதிக்கும் என்று ஒரு தரப்பினர் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

## அமெரிக்காவில் சூறாவளி

அமெரிக்காவின் சிகாகோ மாகாணத்தில் உள்ள செயின்ட் லூயி நகரில் திடீரென வீசிய சூறாவளியில் ஒருவர் இறந்தார். 5 பேர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 100 பேர் முதலுதவி சிகிச்சைப் பெற்றனர்.

இதுகுறித்துபொதுமக்கள் பாதுகாப்புத் துறை இயக்குநர் எட்டி ரோத் தெரிவிக்கையில்,

மணிக்கு 81 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளியால் கில்ரோய் ஸ்போர்ட்ஸ் மதுபான விடுதிக்கு வெளியே போடப்பட்டிருந்த பந்தல் பறந்து ரயில் பாலம் அருகே விழுந்தது.

பந்தலைத் தாங்கியிருந்த அலுமினியகம்பங்கள் அங்குமிங்குமாகச் சிதறின.

இந்தச் சம்பவத்தில் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் இறந்துவிட்டார். அவரது அடையாளம் இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை.

மதுபான விடுதிக்கு அருகிலிருந்த புஷ் மைதானத்தில் விளையாட்டுப் போட்டியொன்று நடைபெற்றது. அவ்வேளையே சூறாவளி தாக்கியது.


செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் திருக்கோயில்,

புளியங்கூடல், ஊர்காவற்றுறை

சப்ததள ராஜகோபுர சத்துபுனராவர்த்தன

சுவர்ணபந்தன, அஸ்ட பந்தன பிரதிஸ்டா

திருமஞ்சன குடமுழுக்கு பெரும் சாந்தி விழா

மஹாகும்பாபிஷேகம்



யாழ்ப்பாணத் தீபகற்பத்தை அணித்தாயுள்ள தீவுகளில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தலைத் தீவான வேலணைத் தீவின் தலைநகரான ஊர்காவற்றுறையின் தென் கிழக்குத் திசையில் மருதமும் நெய்தலும் ஒன்று சேரும் கிராமம் புளியங்கூடல். விவசாயப் பெருங்குடி மக்களின் அயராத உழைப்பினால் செழிப்புற்று பல்திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்ட கிராமத்தில் புண்ணிய பதியாம் செருத்தனைப் பதியில் கேட்ட வரம் அளிக்கும் கீர்த்தி தெய்வமாம் கத்திருப்மான சக்தியாம் ஸ்ரீ மகாமாரி அம்மனுக்குப் புதிய அதிசுந்தர கருங்கல் சிற்பங்களுடன் கூடிய துவிதள விமானக் கருவறை, பிள்ளையார், முருகன் மற்றும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் திருமஞ்சன குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா (மஹாகும்பாபிஷேகம்)

எண்ணெய்க்காப்பு/பால்காப்பு- 01.05.2012 சித்திரை 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் சித்திரை 21 ஆம் நாள் (03.05.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை.

மஹா கும்பாபிஷேகம்:-
சித்திரை மாதம் 22 ஆம் நாள் (04.05.2012)
வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 9.10 மணிவரை.

இணைய முகவரி:-
www.tamilosaii.com, www.mahamary.net

செருத்தனைப்பதி
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

ஆலய அறங்காவலர்
து.சிவஞானச்செல்வம்.



35 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பூமியில் பிறந்தது 05 ★ 07 ★ 1950

விண்ணில் புகுந்தது 01 ★ 05 ★ 1977

அமரர் குமரையா தேவராஜன்

பூவான உனது நினைவுகள்
பனித்துளி போல்
எம்மை விட்டு விலகிச் செல்லாமல்
காலமெல்லாம் உனைக் கண்ணுக்குள் வைத்து
காத்திடுவோம்

இல. 28, றக்கா லேன்,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(17626)(7-9-8)

இனிய நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.



19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 - 05 - 1925

மறைவு 01 - 05 - 1993

அமரர்
சிவகுரு பொன்னம்பலம்
(Retd. Railway Head Guard)

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் இவ்வுலகை நீங்கி பொன்னுலகம் சென்று
ஆண்டுகள் பத்தொன்பது கடந்துவிட்டன.
நாம் வாழும்வரை எம் இதயங்களில்
நீங்களும் வாழ்ந்திருப்பீர்கள்.

'ராணிபவன்',
பெரியதம்பிரான் கோயிலடி,
கம்பர்மலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(17632) (7,9,10)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(8)

**விமர்சனம் நல்லது செய்யுமா?**

'எல்லோரையும் எப்போதும் திருப்திப்படுத்த முடியாது' என்பார்கள், அது மிகவும் சரி. அடுத்தவர்களுடைய எதிர்பார்ப்புகளை எம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்று கவலைப்படாதீர்கள். மற்றவர்களுடைய திருப்திக்காக நாம் எதையும் செய்து கொண்டிருக்க முடியாது. காரணம் அளவீடுகள் வேறுபடும்.

அவர்கள் என்ன நினைப்பார்களோ, இவர்கள் என்ன சொல்வார்களோ, என்றெல்லாம் கவலைப்படுவது அறிவீனம். விமர்சனங்கள் எந்தத் திக்கில் இருந்தும், எவரிடம் இருந்தும் வரலாம். சொல்லப்படுவதில் உள்ள உண்மைத் தன்மையைப் பார்க்க வேண்டும். சொல்வது யார் சொல்லப்படுவதன் நோக்கம் என்ன என்பதை ஆராய வேண்டும். விமர்சனம் நம்முடைய வளர்ச்சிக்கு உதவக் கூடியதா, அல்லது வீழ்ச்சிக்காக ஏவப்பட்டதா என்பதை அறிந்து தெளிவது அவசியம். அப்போது தான் அந்த விமர்சனத்தைப் பொருட்படுத்துவதா, புறந்தள்ளுவதா என்று தீர்மானிக்க முடியும்.

**நாலு பேர் சொன்னால் நல்லதாகி விடுமா?**

முல்லா நஸ்ருத்தீன் கதையொன்று

முல்லாவும், அவருடைய மகனும் தங்கள் கழுதையோடு சந்தைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியோடு போகிற ஒருத்தன் 'என்ன ஐயா நீர் சிறுவனைக் கால் நோக நடத்திச் செல்கிறீரே கழுதை மீது அமர்த்தி அழைத்துப் போகலாமே' என்றான். முல்லாவும் அப்படியே செய்தார்.

கொஞ்ச தூரம் போயிருப்பார்கள். எதிரே வந்து கொண்டிருந்த ஒருவன், 'இளைஞனே, உன்னால் நடக்க முடியாதா? பாவம் இந்த வயதான மனிதரை இப்படி நடக்க விட்டு, நீ ஜாலியாக சவாரி பண்ணுகிறாயே' என்றான். உடனே பையன் கழுதையை விட்டு இறங்கிக் கொண்டான். முல்லா கழுதையின் மீது ஏறியமர்ந்தார்.

இன்னும் கொஞ்ச தூரம் போயிருப்பார்கள். "பார் இந்தப் பெரிய மனிதர் செய்கிற காரியத்தை பதைபதைக்கிற வெய்யிலில் பையனை நடக்க விட்டு இவர் பாட்டுக்கு சொகுசா சவாரி செய்கிறார், பேசாம பையனையும் கழுதை மீது ஏற்றிக் கொள்ளலாமே" என்று இருவர் பேசிக் கொண்டனர்.

முல்லா தன் மகனையும் கழுதை மீது அமர்த்திக் கொண்டார்.

அவர்கள் கொஞ்ச தூரம் போனதும் ஒரு வம்புக்காரன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். 'முட்டாள்களே! உங்கள் இருவர் எடையையும் இந்த நோஞ்சான் கழுதையால் சுமக்க முடியுமா?' என்று அதட்டினான். அவர்கள் பதட்டத்துடன் கழுதையைவிட்டு இறங்கிக் கொண்டனர். அந்தக் கழுதையைச் சந்தையில் விற்பதற்காகத் தானே அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

முல்லா மகனிடம் சொன்னார், 'உண்மையிலேயே கழுதை பரிதாபமான நிலையில் இருக்கு, நம்மைப் போல் அதுவும் ஒரு ஜீவன். இவ்வளவு தூரம் நம்மைச் சுமந்த கழுதையை கொஞ்சத் தூரம் நாமும் சுமந்து செல்லலாம்' என்றார்.

"நீங்கள் சொல்வது சரிதான் தந்தையே" என்றான் மகன்.

அவர்கள் விறகுக் கடைக்காரனிடம் கேட்டு ஒரு கம்பை வாங்கினர். கழுதையின் கால்களைக் கம்புடன் பிணைத்து, இருவரும் சுமந்தனர். வழியில் ஆற்றைக் கடப்பதற்காக ஒரு பாலம் இருந்தது. அவர்கள் பாலத்தில் நடந்த போது சிலர் ஓவென்று கூச்சலிட்டனர். 'பாருடா கூத்தை, இவங்க கழுதையைச் சுமந்து கொண்டு போறாங்க' என்று கை கொட்டிச் சிரித்தனர்.

கழுதை மிரண்டது. கால்களை உதைத்துக் கொண்டு துள்ளியது. அந்த வேகத்தில் கட்டுகள் அவிழ்ந்து கொள்ளவும் கழுதை ஆற்றில் விழுந்தது. எல்லாம் ஒரு கணப்பொழுதில் நடந்து விட்டது. கழுதையை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. அடுத்தவர்களுடைய் விமர்சனங்களைப் பொருட்படுத்தியதால் அல்லவா அப்படியொரு மன உளைச்சலும், இழப்பும் அவர்களுக்கு நேரிட்டது.

உங்களைக் கவலைக்குள்ளாக்கக் கூடிய எதையும் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள். விமர்சனங்களைப் பின் தள்ளி முன்னேறுங்கள்.

**கடுகை மலையாக்கிப் பார்க்கிறவர்கள்**

'பேனாவைத் தொலைத்தது தெரிந்தால் அப்பா என்ன செய்வாரோ..'

'வீட்டுப் பாடம் செய்யவில்லையே, டீச்சர் என்ன தண்டனை கொடுப்பாரோ..'

'பரீட்சைப் பயத்தில் காய்ச்சல் வந்து விடப்போகிறது' என்றெல்லாம் சிறுவயதிலேயே கவலைப்படுகிறவர்கள், பெரியவர்களானதும். 'நேரத்துக்கு அலுவலகம் போய்ச்சேர முடியாது போலிருக்கே அறிக்கை தயார் செய்யல்ல முதலாளி திட்டித் தீர்த்து விடுவார் என்று கவலைப்படுவார்கள்.

'அவர் இந்த நேரத்துக்கு வீட்டில் இருக்க வேண்டியவர், இன்னும் வரக்காணோமே. வண்டி பழுதாகி இருக்குமோ, வழியில் விபத்து ஏதாவது..' என்று கவலைப்படுகிறார்கள். எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுவார்கள்.

மனிதர்கள் எந்த வயதிலும் கவலைப்படுகிறார்கள், எந்த நிலையிலும் கவலைப்படுகிறார்கள், எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுகிறார்கள்.

சிலர் மலை போன்ற பிரச்சினைகளை எளிதாய் தீர்த்து விடுவார்கள். ஆனால், கடுகை மலையாக்கிக் கலக்கமடைவது வாடிக்கையாக இருக்கும். பாம்பு கடித்தும் பிழைத்தவன் கல் தடுக்கி மாண்ட கதைதான்.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)



# குற்றங்கள் இடம்பெறுவதற்கு சமூகமே முக்கியமான காரணி

## யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1

"குற்றங்கள் இடம்பெறுவதற்கு சமூகமே முக்கிய காரணியாகிறது. குடாநாட்டில் குற்றச் செயல்கள் தற்போது அதிகரித்து வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்."

இவ்வாறு தெரிவித்தார் யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா. யாழ்.சிறைச்சாலையில் புத்தாண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலைகளில் இருந்து வெளியேறும் ஒவ்வொரு நபர்களும் மீண்டும் இவ்வாறான நிலைக்கு ஆளாகக்கூடாது.

சிறைச்சாலைகளில் இருந்து வெளியேறும் கைதிகளிடையே மாற்றங்கள் ஏற்படவேணடும்.

சிறுதவறுகள் புரிந்து கைதிகளாகி சிறையிலிருந்து வெளி வரும் நிலையில் அவர்கள் சமூகத்தில் இணைக்கப்படும்போது பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

சிறைச்சாலைகள் தண்டனைக்கு உரிய இடம் இல்லை. அவை சீர்திருத்தப் பள்ளிகள் என்ற எண்ணம் உருவாக வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் கைதிகளிடையே பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் சிறைச்சாலைகள் நலன் புரிச் சங்கத் தலைவியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்ன சிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ம-13)



சிறைச்சாலைகள் தண்டனைக்கு உரிய இடம் இல்லை. அவை சீர்திருத்தப் பள்ளிகள் என்ற எண்ணம் உருவாக வேண்டும்.

# பிரதேச பாடசாலைகளை வளப்படுத்த பெற்றோர்களும் முன்வரவேண்டும்

## வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

சுன்னாகம், மே 1

நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதை விடுத்து பிரதேசப் பாடசாலைகளை வளப்படுத்துவதற்கு பெற்றோரும் பழைய மாணவர்களும் முன்வரவேண்டும் என வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ் மாறன் தெரிவித்தார்.

மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் நிறுவுநர் நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார் அவர்.

அதிபர் த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் பகுதியில் இருந்து பல மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் செல்வதை அவதானிக்க முடிகிறது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அனேகமானோர் நகர்ப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர். இதனால் க.பொ.த. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளில் நகர்ப்புறப் பாடசாலைகளைவிட, பிரதேசப் பாடசாலைகள் குறைவான பெறுபேறுகளைப் பெறும் நிலை காணப்படுகின்றது.

பிரதேச பாடசாலைகளில் திறமையும், ஆளுமையும், அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். போதிய பௌதிக வளங்களும் உள்ளன. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பிரதேச பாடசாலைகளில் இணைக்க முன்வர வேண்டும். அவ்வாறு முன்வந்தால் பிரதேச பாடசாலைகளால் பெறுபேற்றில் சாதனையை நிலைநாட்ட முடியும் - என்றார்.

மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

(எ-38)

# விளையாட்டு உடல் வளர்ச்சியையும் ஆளுமை சமநிலையையும் ஏற்படுத்துகிறது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

அச்சுவேலி, மே 1

விளையாட்டு, உடல் உளவளர்ச்சிக்கு வளம் சேர்ப்பதோடு ஆளுமைச் சமநிலையையும் ஏற்படுத்துகின்றது. எனவே விளையாட்டுத்துறையில் வயது வேறுபாடுகள் இன்றி சகலரும் ஆர்வம் கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேசசெயலக விளையாட்டு விழா அண்மையில் அச்சுவேலி யூனியன் விளையாட்டு மைதானத்தில் வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

அரச [illegible] தேவை அறிந்து சேவையாற்ற வேண்டும். மக்களை நாடிச் சென்று சேவையாற்ற வேண்டும். அரச ஊழியர்கள் மக்களின் சேவகர்களே.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு யாழ்.மாவட்டத்தில் ஆகக் கூடுதலான மக்கள் தொகையைக் கொண்ட பிரிவு. வலி.கிழக்கை இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும்.

அச்சுவேலி பிரதேச செயலர் பிரிவு என புதிய பிரிவு ஒன்றை உருவாக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இது நியாயமான கோரிக்கையாக இருந்த போதிலும் அதனை நிறைவு செய்வதில் அரச சுற்றறிக்கை நிபந்தனைகள் தடையாக உள்ளன.

அந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

விளையாட்டு உடல், உள்ளம் இரண்டின் சமநிலையான வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் உதவுவதோடு ஆளுமை வளர்ச்சிக்கும் உதவுகின்றது. சமநிலை ஆளுமையை வளர்த்துச் செல்கின்றது. எனவே சகல தரப்பினரும் விளையாட்டில் ஆர்வம் கொள்ளவேண்டும்.

விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் வெற்றி தோல்வியைச் சமமாக மதித்து முன்னேறி வருவதை அவதானிக்க முடிகின்றது. தோல்வியை வெற்றியின் முதற்படியாகக் கொள்ள வேண்டும். ஆர்வத்தோடு பயிற்சி செய்வதன் மூலம் வெற்றிபெறலாம். சாதனை படைக்கலாம்.

விளையாட்டில் சாதனை படைப்பதற்கு உடல் குறைபாடுகள் கூடத் தடையாக இல்லை. முயற்சியும் ஆர்வமும் இருந்தால் முன்னேற முடியும். இதனைக் கருத்தில் கொண்டு அனைவரும் முன்னேற வேண்டும்- என்றார்.

(எ-11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# மீண்டும் தமிழீழம்

மூன்று வருடங்களின் முன்னர் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டபோது, ''தமிழீழம்'' என்ற கனவு அத்துடன் முடிவுக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் எல்லாத் தமிழர்களிடமும் எழுந்தது. அதன் பின்னர் வந்த கடந்த 3 ஆண்டுகளிலும்கூட அந்த மந்திரச் சொல்லின் மகிமை கடும் தூசுக்குள் புதைந்து கிடந்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு நிரந்தமான, நியாயமான ஓர் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியே பேசப்பட்டு வந்தது. அதனைச் செய்யத் தவறும்பட்சத்தில் மீண்டும் ஒரு ஆயுதக் கிளர்ச்சி ஏற்படும் என்று மேற்கு நாடுகள் கருத்துத் தெரிவித்து வந்தனவே தவிர, அவைகூட தமிழீழக் கோரிக்கை எழும் என்று தெரிவிக்கவில்லை.

ஆனால், வாழ்க்கை ஒரு வட்டம் என்பதைக் காலம் மீண்டும் நிரூபித்துக்கொண்டிருக்கிறது. இப்போது ''தமிழீழம்'' என்ற சொல் மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்பட ஆரம்பித்திருக்கிறது. 6 மாதங்களுக்கு முன்னர்கூட இப்படி ஒரு நிலை வரும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். எனினும் தமிழீழத்தைக் காலம் மீண்டும் பேசுபொருளாக்கியிருக்கிறது.

தமிழீழ ஆதரவாளர் அமைப்பு [டெசோ] நேற்றுத் தனது செயற்பாட்டை, தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.கருணாநிதி தலைமையில் மீளமைத்திருக்கிறது.

தமிழீழம் காணாமல் தான் உயிர் துறக்கப் போவதில்லை என்றும் தமிழீழத்துக்காக திமுக தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் என்று கருணாநிதி மேலும் அறிவித்திருக்கிறார்.

1980களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேராதரவும் கரிசனையும் எழுவதற்கும் இளைஞர்கள் வீதிகளில் இறங்கி ஈழத்துக்காகக் குரல் கொடுப்பதற்கும் காரணமாக இருந்தவற்றில் ஒன்று டெசோ. தமிழ் நாட்டின் மாவட்டங்கள் தோறும் கிராமங்களில் அன்று ஈழத் தமிழனுக்கு ஆதரவும் ஈழ எழுச்சியும் இருந்தது. பின்னால் பல காரணங்களால் அது மங்கிப் போய்விட்டது. கடந்த 20 வருடங்களாக முக்கிய தமிழகக் கட்சிகளான திமுகவும் அதிமுகவும் ஈழ விடயத்தை அரசியல் பேசுபொருளுக்கு அப்பால் செயல் நிலைக்குக் கொண்டு செல்லாமல் போனமையும் அந்தக் காரணங்களில் ஒன்று.

இப்போது மீண்டும் காலம் வட்டத்தின் ஆரம்பப் புள்ளிக்கு வந்திருக்கிறது. கடந்த சில வருடங்களாக தமிழகத்தில் ஈழத் தமிழர் எழுச்சி நிலை மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது. படித்த, நடுத்தர வர்க்கத்து இளைஞர்கள் ஈழத்தைப் பேசுபொருளாக்கியிருக்கிறார்கள். அதற்காகச் செயற்படவும் தொடங்கியிருக்கிறார்கள். மே-17 இயக்கம், பல்தேசிய தகவல்தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றும் இளைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் என்று இத்தகைய இளைஞர் அமைப்புக்களை அடையாளப்படுத்தலாம்.

இந்த நீரோட்டத்தில் இப்போது தமிழகத்தின் பிரதான கட்சியான திமுகவும் சேர்ந்திருப்பது நீரோட்டத்தை காட்டாற்று வெள்ளமாக்கும் சாத்தியங்களை அதிகம் கொண்டிருக்கிறது. வன்முறையற்ற வழியில் தமிமீழம் காண்போம் என்றிருக்கிறார் கருணாநிதி. எப்படியிருந்தாலும் தமிழீழம் மீண்டும் பேசுபொருளாகியிருக்கிறது. தமிழீழம் குறித்து இலங்கைத் தமிழ் மக்களிடம் கருத்து அறிய ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் டெசோவின் பணி தொடங்கியிருக்கிறது.

இந்த நிலை வருவதற்கு இலங்கை அரசே மூல காரணம். அதனை மறுக்க அரசுக்கு எந்த முகாந்திரமும் இல்லை.

# அடுத்த பொறியாகும் வெள்ளை வான் கடத்தல்

இலங்கை அரசை விமர்சிப்பவர்களை கடத்திக் காணாமல் போகச் செய்யும் செயல்திட்டமொன்றை அரச படைகள் வைத்திருப்பதாக ஏ.எவ்.பி செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக விடயங்கள் தரப்படுகின்றன.

தன்னை வெள்ளை வான் ஒன்றில் வந்த கும்பல் கடத்திச் சென்றதாக, அண்மையில் இலங்கையில் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் அரசியல் அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்ட அரசியற் செயற்பாட்டாளரான பிறேமகுமார் குணரத்னம் கூறுகின்றார்.

ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் கொழும்பில் தான் தனது வீட்டுக்கு வெளியில் நின்றபோது ஆறு தொடக்கம் எட்டு வரையான ஆயுததாரிகள் தன்னைக் கடத்திச் சென்றதாகவும், அதன் பின்னர் தான் நான்கு நாட்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, கடத்திச் சென்றவர்கள் 'பாலியல் ரீதியாக'தன்னை சித்திரவதைப்படுத்தியதாகவும் இலங்கையில் பிறந்த, ஆஸ்திரேலியக் குடிமகனான பிறேமகுமார் குணரட்னம் விபரிக்கின்றார்.

இவரது கூட்டாளியும், இடதுசாரி மாக்சியவாதியுமான திமுது ஆட்டிக்கலவும் இவ்வாறு கடத்தப்பட்டு மிக மோசமான முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக குணரத்னம் தெரிவிக்கின்றார்.


இலங்கையில் தமிழீழ விடு புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தம் மே 2009இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், காணாமற்போன, கடத்தப்பட்ட பலரைப் போலல்லாது இவ்விருவரும் ஆஸ்திரேலிய அரசினால் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர ரீதியான அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டதால்; தற்போது தமக்கு நடந்த சம்பவத்தைக் கூறமுடிகின்றது.

இலங்கையில் தொடரப்பட்ட இனப் போர் கால கட்டத்தில் இலங்கை அரசை எதிர்த்துச் செயற்பட்டவர்களைக் கடத்துவதற்கான ஆயுதமாகவே பாதுகாப்புப் படையினர் 'வெள்ளை வானை' பயன்படுத்துகின்றனர். இலங்கையில் 'வெள்ளை வான்' என்பது ஆள்கடத்தலின் குறியீடாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 50 இற்கு மேற்பட்ட மக்கள் கடத்தப்பட்டதாக ஆசிய மனித உரிமைகள் சபை போன்ற பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

''துப்பாக்கி முனையில் நான் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் என்னைக் கொலை செய்யப் போகின்றார்கள் என்று தான் நினைத்தேன். அவர்கள் எனது கண்கள் இரண்டையும் இறுகக் கட்டிக் கொண்டார்கள். அத்துடன் எனது மணிக்கட்டுக்கள், கால்கள் ஆகியவற்றை சேர்த்துக் கட்டினார்கள். அதன் பின்னர் என்னைப் பாலியல் ரீதியாக சித்திரவதைப்படுத்தினார்கள்" என 47 வயதான குணரத்னம், இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டு ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்த பின்னர் இவ்வாறு தெரிவித்தார்.

''இலங்கைப் பாதுகாப்பு படையினரால் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் மிகச் சொற்பமானவர்களே தற்போது உயிர் வாழ்கின்றனர். இந்த வகையில் நான் நல்வாய்ப்பாளனாக உள்ளேன். இது என் தொடர்பான விடயம் மட்டுமல்ல.




இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் எவ்வாறு சீரழிந்து உள்ளன என்பதையே இவ்வாறான ஆள்கடத்தல்கள் சுட்டிநிற்கின்றன'' என குணரத்னம் மேலும் தெரிவித்தார்.

"இலங்கையில் தொடரப்பட்ட ஆயுதப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டதாக உத்தியோகபூர்வ அறிவிப்பை மேற்கொண்ட பின்னரும் கூட அங்கே ஆள்கடத்தல்கள் முடிவுக்குவரவில்லை" என கொங்கொங்கைத் தளமாகக் கொண்டியங்கும் ஆசிய மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது.

''இலங்கையில் அண்மைக் காலங்களில் ஆட்சிக்கு வரும் எந்த அரசுளும் தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக மட்டுமல்ல, தமக்கு எதிராக எழும் அடக்குமுறைகளைக் கூட முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஆள்கடத்தலைப் பயன்படுத்துவது ஒரு மூலோபாயக் கோட்பாடாகக் காணப்படுகின்றது'' என ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

ஆள்கடத்தல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான 'நம்பகமான நடவடிக்கையை' இலங்கை அரசு முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே 'வெள்ளை வான் கடத்தல்கள்' தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க முடியும் எனவும் அந்த ஆணையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதஉரிமை மீறல்கள் தொடர் பாக இலங்கை அரசு மீது அண்மையில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரு வாரங்களின் பின்னர் குணரட்னம் மற்றும் ஆட்டிக்கல ஆகிய இருவரும் கடத்தப்பட்டனர்.

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கையில் தொடரப்படும் வெள்ளை வான் கடத்தல்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான கட்டளைப் பிறப்பிக்கப்பட்டபோதும், இலங்கை அரசானது தொடர்ந்தும் தனது நாட்டில் ஆள்கடத்தல்கள் இடம்பெறுவதைத் தடுக்காது உள்ளது'' என தென்னாசிய ஆய்வாளர் குழுவைச் சேர்ந்த குமார் டேவிட் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆள்கடத்தல்களில் தாம் ஈடுபடவில்லை என அரசு அறிவித்து வருகின்றது. அத்துடன் இவ்வாறான ஆள்கடத்தல்களை மேற்கொள்ளும் குற்றவாளிகளை இலங்கை காவற்துறையினரால் தடுக்க முடியும் எனவும் எதிர்பார்க்க முடியாது என அரசு தெரிவித்துள்ளது.

''கிட்டத்தட்ட நான்கு பத்தாண்டுகளாக போர் தொடரப்பட்ட தேசமாக இலங்கை உள்ளது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்'' என இலங்கையின் பதில் ஊடக அமைச்சரும் பேச்சாளருமான லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

போர் முடிவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது பெப்ரவரி 2009இல் கொழும்பில் தனது நண்பர் ஒருவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டபோது, தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான 52 வயதான என்.வித்தியாதரன் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். இவருடன் ஒப்பிடுகையில் தற்போது கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட குணரத்னம் மற்றும் ஆட்டிகல ஆகிய இருவரும் நல்ல வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

வித்தியாதரன் வெள்ளை வான் ஒன்றில் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு பின்னர், குணரத்னம் ஒப்படைக்கப்பட்ட அதே காவற்துறைப் பிரிவில் கடத்திச் சென்ற ஆயுததாரிகளால் ஒப்படைக்கப்பட்டார். குற்றங்கள் எதுவும் முன்வைக்கப்படாது, வித்தியாதரன் இரு மாத காலம் வரை அதே காவற்துறைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

''நான் கடத்தப்பட்ட சம்பவத்தை அறிந்தபோது, பல உலக நாடுகள் இலங்கை மீது அழுத்தம் கொடுத்தன. அவர்கள் என்னை விடுதலை செய்வார்கள் என நான் ஒருபோதும் நினைக்கவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில், அவர்கள் என்னை தாக்கும் போது நான் விரைவில் சாக வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்வேன்'' என வித்தியாதரன் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்திருந்தார்.

வித்தியாதரன் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர் தனது ஊடகப் பணியைக் கைவிட்டுவிட்டார்.

இதேபோன்று ஜூன் 2009இல் பத்திரிகையாளரான பொட்டல ஜெயந்த என்பவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட பின்னர், வீதி ஒன்றில் இறக்கிவிடப்பட்டதுடன், ஊடக செயற்பாட்டிலிருந்து தூர விலகி இருக்குமாறும் எச்சரிக்கை செய்யப்பட்டார். ஜனவரி 2009இல் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் கொல்லப்பட்ட, இலங்கை அரசை விமர்சித்த பத்திரிகை ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் மரணச் சடங்கை முன்னின்று ஒழுங்குபடுத்தி நடத்தியவர்களில் தானும் ஒருவர் என பொட்டல ஜெயந்த தெரிவித்திருந்தார்.


இலங்கை காவற்துறையினர் இதுவரையில் உயர் மட்டத்தில் செயற்பட்டு கடத்தப்பட்டவர்களுடன் தொடர்புபட்ட எவரையும் கைது செய்யவில்லை. அத்துடன் படுகொலை செய்யப்பட்ட, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை விசாரணை தொடர்பிலும் எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.

**நன்றி. புதினப்பலகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ முல்லைக்குயில்

# கேள்விக்குறியாகும் கல்வி



"முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா வடக்கு, மன்னார் போன்ற பகுதிப் பாடசாலைகளில் 700 வரையிலான தொண்டர் ஆசிரியர்கள் பல வருடங்கள் நியமனத்தை எதிர்பார்த்துக் கற்பித்து வருகின்றார்கள். தற்போது வருமானம் ஏதுமற்ற நிலையில் இவர்களது நிலை பெரும் துன்பம் நிறைந்ததாகவும் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையிலும் அவல வாழ்க்கையை எதிர்கொண்டுள்ளனர்.

வன்னிப் பாடசாலைகளில் காணப்படும் கற்றல், கற்பித்தல் சார் குறைபாடுகள் இந்தப் பகுதி மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் தொடர்ந்தும் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை, வகுப்பறை வசதியின்மை, ஆசிரியர் தங்குமிடமின்மை, தளபாட பிரச்சினைகளால் குறித்த பகுதிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்படியே இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் கல்வியறிவால் குறைவிருத்தியான சமூகமே வன்னியில் இருக்குமென எதிர்வு கூறப்படுகின்றது.

வன்னிப் பகுதியில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அதிக மாணவர்கள் செல்கின்ற போதும் அங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமையால், பாடசாலை சென்று என்ன, செல்லாமல் விட்டு என்ன என்ற மனநிலையில் கல்வி பாதிக்கப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

இங்கே பெரும்பாலான பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களைக்கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், முன்பள்ளிக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. சில பாடசாலைகளில் வருடக் கணக்காக இந்த நிலைமை நீடிக்கின்றது.

போருக்கு முன்னரும் வன்னியில் இதே ஆசிரியர் பற்றாக்குறை நிலவத்தான் செய்தது. அப்போது விடுதலைப் புலிகள் தமது கல்விக் கழகத்தின் மூலம் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்ததுடன் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளையும் வழங்கி வந்தனர். அதுபோல் சில மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் ஆசிரியப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் பணிகளில் ஈடுபட்டன.

இறுதிப் போரின் அனைத்து வடுக்களையும் தாங்கிக் கொண்டு தகரக் கொட்டகைகளிலும், தறப்பாள் கூடாரங்களிலும் வாழ்ந்துவரும் வன்னி மாணவர்கள் தொடர்ந்தும் கற்பதற்கு ஏற்ற சூழலை இழந்து வருகின்றனர்.

இந்தப் பகுதிப் பாடசாலைகளில் கற்பித்து வரும் வெளிமாவட்ட ஆசிரியர்களில் பலர் எப்போது தமக்கு இடமாற்றம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் தான் சேவையாற்றி வருகின்றார்கள். இதற்கும் காரணங்கள் உண்டு. வன்னியில் உள்ள பாடசாலைகளில் சீரான ஆசிரியர் விடுதிகளோ, பாதுகாப்புக்களோ, போக்குவரத்து வசதிகளோ இல்லை. பல ஆசிரியர்கள் கால்நடையாகச் சென்று கற்பிக்கும் நிலையில்தான் மனம் நொந்து கொள்கிறார்கள்.

ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க பெற்றோர்களும், மாணவர்களும், நலன் விரும்பிகளும் உரிய தரப்பினரிடம் கோரிக்கைகளை முன்வைத்தும் அது செல்லுபடியானதாகத் தெரியவில்லை. கடந்த 21 ஆம் திகதி கூட கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு முன்பாக ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை, வேரவில் இந்து மகா வித்தியாலயம், கிராஞ்சி அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் திரண்டிருந்ததுடன், அதிகாரிகளுடனும் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவது தொடர்பாகக் கலந்துரையாடினார்கள். ஆனால் இதனால் எந்த விளைவுகளும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வெளிமாவட்ட ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பிக்கத் தயக்கம் காட்டி வரும் நிலையில், வன்னியை நிரந்தர இடமாகக் கொண்ட தொண்டராசிரியர்கள் குறைந்தளவான ஊதியத்துடன் பத்து வருடங்களுக்கும் மேலாகக் கற்பித்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நியமனம் வழங்குவதற்கான இழுத்தடிப்புக்கள் மட்டும் நீடித்து வருகின்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா வடக்கு, மன்னார் போன்ற பகுதிப் பாடசாலைகளில் 700 வரையிலான தொண்டர் ஆசிரியர்கள் பல வருடங்கள் நியமனத்தை எதிர்பார்த்துக் கற்பித்து வருகின்றார்கள். தற்போது வருமானம் ஏதுமற்ற நிலையில் இவர்களது நிலை பெரும் துன்பம் நிறைந்ததாகவும் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையிலும் அவல வாழ்க்கை வாழ்கின்றார்கள். 2009 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட போது கூட வன்னிப்பகுதித் தொண்டர் ஆசிரியர்கள் எவருக்குமே நியமனம் வழங்கப்படாது புறக்கணித்து ஒதுக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நீண்ட காலமாகக் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதனூடாகவே ஆசிரிய வளப் பற்றாக்குறையைத் தவிர்க்க முடியும் எனப் பல கல்வியியலாளர்களும் கருதுகின்றனர்.

இப்படியே வன்னியில் ஆசிரியப் பற்றாக்குறை தொடர்ந்தும் நீடிக்குமானால் இனி வரும் காலங்களில் குறைவிருத்தியான சமூகமொன்றே அங்கு உருவாகும் என்பதை மறுக்கவியலாது. ✱

■ பஞ்சவர்ணன்

# தாண்டவமாடும் போலித்தனங்கள்



"யாழ்ப்பாணத்தில் இப்படியான பல வேடிக்கை விநோத நிகழ்ச்சிகள் மருத்துவத்துறையிலும் அரங்கேறி வந்திருக்கின்றமைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பதுங்கி இருந்து பார்வையாளராகி இருந்தமை எதற்காக என்ற வினா மக்கள் மனங்களில் எழாமல் இல்லை. அவர்களது 'பொக்கற்று'களை சம்பந்தப்பட்டவர்களின் பாவப் பணங்கள் நிரப்பியதால் வாயடைத்தார்களா!

தற்போது யாழ்ப்பாணத்தில் போலிகளுக்குக் குறைவில்லை. அனைத்திலும் போலித்தனங்கள் தலைவிரித்தாடுகின்றன. போலிச் சாமியார்களில் இருந்து போலி வைத்தியர்கள் வரை யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றார்கள். கடவுளுக்கு அடுத்ததாக மனிதர்கள் நம்பும் வைத்தியத் துறையிலும் போலித்தனங்கள் நிலவுவதுதான் வேதனை தரும் விடயமாக மாறியிருக்கின்றது.

தகுதியற்ற பற்சிகிச்சை நிலையங்கள் பல யாழ்ப்பாணத்தின் நகர்ப்பகுதியிலும் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் "பல் வைத்தியர்கள்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சில பிரபலமாக கவர்ச்சிகரமான விளம்பர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதையும் காணக் கூடியதாக இருந்தது. இவற்றையெல்லாம் நம்பி ஏமாந்த நோயாளர்கள் ஏராளம். ஏமாந்தது கூட தெரியாமல் இருக்கும் நோயாளர்கள் ஏராளம். இதுவும் ஒருவகைத் திருட்டுத்தான்.

இந்தப் போலி பல்வைத்திய நிலையங்களில் பல்வைத்தியர்களாக செயற்பட்டவர்கள் பலர் பற்சிகிச்சையாளர்களாகவோ, பற்சிகிச்சை ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகவோ, அல்லது பற்சிகிச்சை ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரின் உதவியாளராகவோ கூடப் பணியாற்றத் தகுதியற்றவர்களாவும் இருந்தமை வேடிக்கைக்குரியது. இதில் வேடிக்கை என்ன வென்றால் பற்சிகிச்சை ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளரின் உதவியாளராகக் கூட கடமையாற்றத் தகுதியற்றவர் மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளராகவும் தொழில்பட்டு பற்சிகிச்சை நிலையத்துடன் மருத்துவ ஆய்வுகூடத்தையும் பல ஆண்டு காலமாக நடத்தி வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இப்படியான பல வேடிக்கை விநோத நிகழ்ச்சிகள் மருத்துவத்துறையிலும் அரங்கேறி வந்திருக்கின்றமைக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பதுங்கி இருந்து பார்வையாளராகி இருந்தமை எதற்காக என்ற வினா மக்கள் மனங்களில் எழாமல் இல்லை. அவர்களது 'பொக்கற்று'களை சம்பந்தப்பட்டவர்களின் பாவப் பணங்கள் நிரப்பியதால் வாயடைத்தார்களா!

அண்மையில் இவ்வாறு போலி வைத்தியரினால் பிடுங்கப்பட்ட பற்களால் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளியால் போலிகளின் செயற்பாடுகள் ஊடக வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் "பொறுப்பு வாய்ந்தவர்கள்" பதறியடித்து அறிக்கைகளை விட்டு செய்வதறியாது கூட்டங்களைப் போட, அதற்குள் பொலிஸாரின் வலைக்குள் போலிகள் கையும் மெய்யுமாகச் சிக்குண்டு நீதித்துறையின் பார்வை வீச்சில் அடையாளப் படுத்தப்பட்டார்கள்.

வழக்கோடு வழக்காக சுகாதாரத்துறையினரும், விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டிற்குள் தள்ளப்பட, அதற்கிடையில் சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயசுந்தர பண்டார யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதில் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்யப்படவில்லை (மருத்துவத் துறை சார்ந்தவர்கள் தொழில் செய்யும் போது இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்து பதிவிலக்கம் வைத்திருப்பார்கள்) பேராதெனிய பல்கலைக்கழகப் பல்விஞ்ஞான அலகு தகுதி வாய்ந்தவர்களைப் பதிவு செய்து வருகிறது. இவர்கள் தகுதி வாய்ந்த பற்சிகிச்சையாளர்களினால் அறிவுறுத்தப்பட்டவற்றை ஆயத்தப்படுத்தி வழங்குவார்கள். கிளினிக்குகள் நடத்தவோ நோயாளர்களைப் பார்ப்பது போன்ற செயல்பாடுகளுக்கோ இவர்கள் அனுமதிக்கப்படவில்லை என கடுமையாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் கையும் களவுமாகப் பிடிபட்ட பின்னரே மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுகின்றது. ஆனால் விரைவாகவே வேறொரு போலியிடம் விரைவிலேயே தம்மை ஒப்படைத்து விடுகின்றனர். பல்கிப் பெருகி வரும் போலித் துறைகள் நோக்கிப் பொலிஸாரின் தீவிர கண்காணிப்பு செலுத்தப்படும் வரை அதைத் தடுத்து நிறுத்தவியலாது. திருடனாகத் திருட்டைக் கைவிடுவான் என்று இக்காலத்திலும் எதிர்பார்த்திருக்கவும் முடியாது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் கூட்டம் நடத்துவது உண்டா?

வெற்றிகரமான நிறுவனங்களில் எல்லாம், தினம் தோறும் காலையும், மாலையும் நிர்வாகக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். செய்ய வேண்டியவை பற்றி காலையிலும், எப்படி வேலை நடந்திருக்கிறது என்பது பற்றி மாலையிலும் கூடிப் பொறுப்பாளர்கள் கலந்து பேசி அவ்வப் போது பிரச்சினைகளைத் தீர்த்து விடுவார்கள். அப்படி குடும்பத்தில் பிரச்சினை வராமல் இருக்க குடும்ப சந்திப்பு நடத்துவது உண்டா? உண்டு என்றால் நீங்கள் நல்ல குடும்பம் பற்றிய பிரக்ஞை உடையவர்.

பிள்ளைகள் பல பெற்றோருக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பதற்குக் காரணமே கூடிக்கலந்து பேசாமையே. முற்காலத்தில் படித்த பிள்ளைகளின் பிரச்சினைகளைப் போல பத்து, இருபது மடங்கு சிக்கல்கள் இன்றைய பிள்ளைகளுக்கு இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளை அவர்கள் யாரிடம் சொல்லி என்ன ஆறுதல் பெற முடியும்? வகுப்பில் பத்துப் பேர் ஒன்று சேர்ந்துகொண்டு நம் வீட்டுப் பிள்ளையை ஒதுக்கி வைத்திருப்பார்கள். அல்லது வகுப்பறையில் பேசிய மாணவனைத் தண்டிக்காமல் முட்டாள் ஆசிரியர் பேசாத பிள்ளையைத் தண்டித்திருப்பார். நம் வீட்டுப் பிள்ளையின் ருசியான உணவு அடிக்கடி பிறரால் திருடப்பட்டு பட்டினி பரிசளிக்கப்பட்டிருக்கும்.

இந்த வருத்தங்களைப் பிள்ளைகள் மனதில் இருந்து அப்புறப்படுத்த பெற்றோர்கள் பேச வேண்டும். ஆரம்பத்தில் நீங்கள் அவர்கள் விடயத்தில் தலையிடுவதாக நினைத்து எரிந்து விழுவார்கள். ஆனால் போகப் போக தங்கள் சுமைகளைத் தாங்கும் சுகமான சுமை தாங்கி பெற்றோரே என்று நேசிப்பார்கள். நம்புவார்கள்.

இதற்கு மாறாக மனதிலேயே தங்கள் குழப்பமான துயரங்களைப் புதைக்கும் பிள்ளைகள் தோல் நோய், ஆஸ்துமா, திக்குவாய் போன்ற நோயற்ற நோய்களால் பாதிக்கப்படுவார்கள். பிள்ளைகளுடன் பேசுவதன் மூலமே பிரச்சினைகள் குறையும். அதற்குப் பொறுமை, திறமை இரண்டும் உள்ள பெற்றோர்களே அவசியம் சில வேளைகளில் பிள்ளைகள் பேசவந்தால் தன் பள்ளிக்கூடம், ஆசிரியர், சகமாணவர்கள் பற்றிப் பேசும் போது பொறுமை இழந்து சிலர் ''சனியனே .. வாயை மூடு தொண தொண என்று பேசிக்கொள்'' என்று எரிந்து விடுவார்கள். இவர்கள் மலடுகளாக மரித்திருக்கலாம்.

குடும்பக் கூட்டம் அடிக்கடி நடத்தி மனம் விட்டுப் பேசி பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பது சிறந்த குடும்ப அமைப்பு. வாய்ப்புள்ள வீடுகளில் குறைந்த பட்சம் இரவு உணவையாவது சேர்ந்து சாப்பிடுவது உத்தமம். அப்படிச் சாப்பிடும் போதும் தொலைக் காட்சியை ஓட விட்டால் சேர்ந்து சாப்பிடும் நோக்கம் கெட்டுவிடும். எனவே தற்காலிகமாகத் தொலைக்காட்சியை நிறுத்தி சாப்பிடுங்கள். அல்லது உங்களைத் தொலைக்காட்சி கொன்று விடும்.

கடவுள் நம்பிக்கை உள்ள வீடுகளில் இறைவழிபாட்டை குடும்பமே சேர்ந்து செய்வது மிகமிக அவசியம். சேர்ந்து ஜெபித்தால், பாடினால், மந்திரங்கள் சொன்னால் ஒருவகையான பிரிக்க முடியாத அன்பு அந்தக் குழுவுக்கே உண்டாகும். எனவே ஒரு குடும்பம் சேர்ந்து கண்டிப்பாகக் குடும்ப உறவுகளை நன்கு பலப்படுத்தும். ஒருவருக்கு வீட்டில் உடன் நலமில்லாத போது அவருக்காக எல்லோரும் பிரார்த்தனை செய்தால் பாசம், பந்தம், பலப்படும். பிறந்த நாள், திருமண நாள் இவற்றைத் தனித் தனியாகக் கொண்டாடுவதைக் கூடத் தவிர்த்து விட்டு குடும்ப நாளன்று வசதியான ஒரு நாளை தேர்ந்தெடுத்துக் கொண்டாடுவது ஒற்றுமையை வளர்க்கும்.

குழந்தைகளுக்கு சில விடயங்கள் நூறு நூறு தடவை சொன்னாலும் பதியாது. ஆனாலும் சில விஷயங்களை நாம் சொல்லிக் கொடுக்காமலேயே சட்டென்று விளங்கிக் கொள்ளும். எனவே பெற்றோர் எதையும் சொல்லிக் கொடுப்பதை விட நடந்து காட்டுவது சரியான வழி.

''பொய் சொல்லக்கூடாது'' என்று பிள்ளைகளுக்கு போதித்தார் அப்பா. சிறிது நேரத்தில் தொலைபேசி அழைப்பில் வேண்டாத நபர் அழைத்தார். பிள்ளை தொலைபேசியை எடுத்து ''அப்பா'' என்று தொலைபேசியை நீட்டினால் ''நான் இல்லை என்று சொல்'' என்று அப்பா ஜாடை காட்டினார். பிள்ளை குழம்பி விடாதா?, பொய் சொல்லக் கூடாது என்று அப்பா போதித்தார். ஆனால் தனக்கு வேண்டும் என்றால் பொய் சொல்லலாம் என்று அப்பா நடந்து காண்பித்தார். குழந்தை என்ன கற்றுக் கொள்ளும் பொய் சொல்லக் கூடாது என்று பிறருக்கு போதிக்க வேண்டும். ஆனால் நாம் சொல்லலாம் என்றே மனதில் பதித்துக் கொள்ளும்.

''குழந்தைகள் கற்றுக் கொள்ள விரும்புவார்கள். ஆனால் பிறர் கற்பிப்பதை விரும்புவதில்லை'' என்ற முரண்பாடான செய்தி உங்களுக்குத் தெரியுமா? அவர்களாக நிறையக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் நீங்களாகக் கற்பிக்க நினைத்தால் தோற்றுப் போவீர்கள். எதை எப்படி யாரிடமிருந்து கற்றுக் கொள்வார்கள் என்பது சொல்ல முடியாத விடயம்.

ஒரு பணக்கார வீட்டில் பாட்டுவாத்தியார் நாள்தோறும் வந்து ஒரு பிள்ளைக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பார். அதன் மரமண்டையில் ஒரு ஸ்வரம் கூட ஏறவே இல்லை. ஆனால் அந்த வீட்டு வேலைக்காரியின் மகள் கேட்டுக் கொண்டே இருந்தவள் பாடத் தொடங்கி விட்டாள். இது தான் குழந்தைப் பருவத்தின் சிறப்பு.

தொலைக்காட்சியில் மூன்று வயது குழந்தை ஒன்றைப் பேட்டி கண்டார்கள். பல நாட்டுக் கொடிகளை அடையாளம் காட்டியது. தலைநகரைச் சொன்னால் நாட்டைச் சொன்னது, நாடுகள் பெயரைச் சொன்னால் தலைநகரைச் சொன்னது, உள்வாங்கும் திறன் மிக அதிகம் இருக்கும் பருவம் குழந்தைப் பருவம். பிறந்த சில மாதங்களிலேயே பெரிய எழுத்துக்களில் எழுதி மீண்டும் மீண்டும் காட்டிக் காட்டி பெயரை உச்சரித்தால் எழுத்தும் ஒலியும் நன்றாகக் குழந்தைகளுக்கு பதிகிறது என்று கண்டுபிடிக்கிறார்கள். முயற்சி, பயிற்சி, தொடர்ச்சி மூலம் எந்தப் பிள்ளையையும் பெரிய திறமைசாலியாக உருவாக்க முடியும். இதற்கு நேரமே இல்லை என்கின்ற பெற்றோர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்.



சுகி.சிவம்

# கைவிடப்பட்டோரின் பாதுகாவலர் அரியாலை புனித யூதாததேயு



எஸ்.யேசுதாஸ்

அதிகரித்து வரும்குடிசனப்பெருக்கத்தின் காரணமாக ஏற்படும் இடப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய குடிமனைகளற்ற பிரதேசங்களையும், தரிசு நிலங்களையும், பற்றைக் காடுகளையும் நோக்கி குடிப்பரம்பல் நகர்ந்து செல்வது நியதியாகும்.

இதன் அடிப்படையில் யாழ்.நகரின்கிழக்கு எல்லையில் கண்டி வீதியிலிருந்து பிரிந்து செல்லும் அரியாலை முள்ளிவீதிப் பகுதியில் இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் யூதா நகர் என்னும் புதிய கிராமம் உதயமானது.

முற்றிலும் இந்து மத நெறிமுறைகளையும், கலாசாரங்களையும் கடைப்பிடிக்கும் மக்கள் வாழ்ந்து வந்த சூழலில் உருவான இந்த கத்தோலிக்க கிராமத்தில் புனித யூதாததேயு ஆலயம் அமைந்தமை இறைவன் மக்களுக்கு விடுத்த திருமறை அழைப்பாகவும், ஆசீர் அளிக்கும் கொடையாகவும் கருதப்படுகிறது.

கைவிடப்பட்டோரின் காவலரென்று போற்றப்படும் புனித யூதாததேயு இயேசுவின் 12 சீடர்களில் ஒருவராக விளங்கியவர். இவர் யாழ்.நகரின் வரவேற்பு பகுதியாகிய அரியாலையில் கோயில் கொண்டு யாழ்.நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தம்மை நாடி வரும் கத்தோலிக்கர், பிற சமய அன்பர்கள் அனைவருக்கும் சமய வேறுபாடின்றி கருணை மழை பொழிந்து வருகிறார். இது ஒரு யாத்திரைத் தலமாக விளங்குகிறது.

தேவனின் திருச்சித்தப்படி இந்த ஆலயம் அமை வதற்கு அவர் தெரிந்தெடுத்த வழி மிகவும் விசித்திரமானது. இந்தப் பகுதியில் வயல் நிலமாக இருந்து பின்னர் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட யாழ். பிரதான வீதியைச் சேர்ந்த திருச்செல்வம் என்பவரிடம் நீண்டு பரந்து கிடந்த காணியை குடியிருப்புத் தேவைக்காக 10 பேர் இணைந்து விலைக்கு வாங்கி பிரித்தெடுத்தனர்.

1971 ஆம் ஆண்டு சித்திரை மாதம் யாழ். பேராலயத்தைச் சேர்ந்த பே.செபஸ்தியாம்பிள்ளை, சே.றொசாறியோ, பிரான்சிஸ், திருமதி ஹெலன் பிரான்சிஸ், அம்புறோஸ், ஜே.குலசிங்கம், சுண்டுக்குளியைச் சேர்ந்த பிரான்சிஸ், சென்றோச், சி.சீவரத்தினம், திருமதி றோசலின் துரையப்பா, கிளிநொச்சியைச் சேர்ந்த ச.அந்தோனிப்பிள்ளை, அ.எட் வேட் ஆகியோர் இந்த காணியை கொள்வனவு செய்து அதைப் பிரிவிடுதல் செய்யும் போது தாங்கள் வழிபட ஆலயமொன்று அமைப்பதற்காக ஒரு துண்டு காணியை ஒதுக்கினார்கள்.

> யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட முத லாவது யூதா ஆலயம் இது வென்பதாலும் புனிதரின் பக்தி விரைவாகப் பரவியமையாலும் யாழ்.நகரப் பகுதி, கரையோரப் பகுதிகளிலிருந்து பெருமளவு பக்தர்கள் மாதத்தின் முதல் வெள்ளிகளில் இங்கே வந்து வழிபட்டு யூதாவின் பரிந் துரையால் தமது தேவைகள், வேண்டுதல்களைப் பெற்றுச் செல்லத் தொடங்கினர்.

தாங்கள் குடியிருக்க வரு முன்னர் தம்மைப் பாது காக்கவும் வழிபடவும் சீரியா மொழியில் கபடமற்றவர் சாந்தமும் அன்பும் நிறைந்த வர் எனப் பொருள்படும் ததேயு என்னும் சிறப்புப் பெயர் பெற்ற புனித யூதா ததேயுவின் பெயர் கொண்ட ஆலயம் அமைக்கத் தீர் மானித்தார்கள்.

இதனை அறிந்த யாழ். மாட்டீன் வீதியைச் சேர்ந்த யோ.எட்வேட் இராசநாயம் அழகிய யூதாவின் திருச் சொரூபத்தை அன்பளிப்புச் செய்தார். ஏற்கனவே அங்கு வசிக்கத் தொடங்கிய குல சிங்கத்தின் வீட்டில் ஓர் அறையை ஒதுக்கி அங்கே திருச்சொரூபம் வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வரலா யிற்று.

புனித யூதாததேயு திருமறையின் சாட்சியாக இரத்தம் சிந்தி மரித்த தினமான ஒக்ரோபர் 22 ஆம் திகதியில் இந்த புதிய குடியிருப்புப் பகுதியில் முதலாவது திருநாளைக் கொண்டாடவும், சிற்றாலயம் அமைப்பதற்கான அடிக் கல்லை நடவும் அப்போது யாழ்.பேராலய பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு ஜோய் கிறிசோஸ்தம் அடிகளாருக்கு உதவி யாழ்.ஆயராக கடமையாற்றிய எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை அனுமதி கொடுத்தார்.

திருச்சொரூபம் வைக்கப்பட்டிருந்த பிரத்தியேக அறையில் 28.10.1972 இல் அருட்திரு அ.பேணாட் அடி களாரினால் முதலாவது திருநாள் திருப்பலி நிறைவேற்றப்பட்டு சிற்றாலயத்துக்கான அடிக் கல்லும் நடப்பட்டது.

இலங்கை நாடாளுமன்றத்தில் 1973 ஆம் ஆண்டு மே மாதத்தில் வழிபாட்டு ஸ்தலங்கள் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையினால் தனியார் வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தை அதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

எனவே செபஸ்தியாம்பிள்ளை அருள் மரியதாஸின் பங்களிப்புடன் சிறு ஓலைக் குடிசையில் ஆலயம் அமைத்து புனிதரின் திருச்சொரூபத்தை வைத்து 02.05.1973 இல் முதல் வெள்ளியன்று அருட்திரு எட்வின் சௌந்தரநாயகம் அடிகளாரினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட முதலாவது யூதா ஆலயம் இது வென்பதாலும் புனிதரின் பக்தி விரைவாகப் பரவியமையாலும் யாழ்.நகரப் பகுதி, கரையோரப் பகுதிகளிலிருந்து பெருமளவு பக்தர்கள் மாதத்தின் முதல் வெள்ளிகளில் இங்கே வந்து வழிபட்டு யூதாவின் பரிந் துரையால் தமது தேவைகள், வேண்டுதல்களைப் பெற்றுச் செல்லத் தொடங்கினர்.

இதேவேளை ஆலயத்தின் தோற்றுகையும், வளர்ச்சியும் இந்தப் பகுதியில் மக்கள் குடியேறும் நிலைக்கு சாதகமாயிருந்தமையால் பல புதிய குடிமனைகள் காலப் போக்கில் ஏற்பட்டு மக்கள் நடமாட்டம் மிக்க பகுதியாக முன்னேறலாயிற்று.

ஆலயம் நாடி வரும் பக்தர்களின் தொகையைக் கருத்திற் கொண்டு நிரந்தர சிற்றாலயம் அமைக்கும் யோசனை கைவிடப்பட்டு பெரிய அளவிலான ஆலயத்தை கட்டும் திட்டம் ஆராயப்பட்டது. ஆலயத்துக் குப் பின்பக்கமாக இருந்த காணியை வாங்கி தேவையான பகுதி எடுத்துக் கொள்ளப்பட்டு மிகுதிக் காணி சிலருக்கு விற்கப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட காணியு டன் ஏற்கனவே இருந்த காணிப் பகுதியையும் இணைத்து புதிய ஆலயம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அருட் திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் ஆசீர்வதிக்க ப.சின்னப்பு திருச்செல்வம் அடிக்கல்லை நட்டார். சிறுகச் சிறுக கிடைத்த உதவிகளைக் கொண்டு கட்டடப் பணிகள் நடை பெற்ற போதிலும் 1974 ஆம் ஆண்டு யாழ்.பேராலய பங்குத் தந்தை அருட்திரு ஜே.பி.ஈ.செல்வராசா அடிகளாரின் அனுசரணையுடன் ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை திருநாள் திருப்பலியை நிறைவேற்றினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மே தினத்தில் கூட்டமைப்பின் கிழக்கு எம்.பிக்கள் பங்கேற்கார்

மட்டக்களப்பு,மே1

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையில் நடைபெறும் எதிர்க்கட்சிகளின் கூட்டு மே தினத்தில் கூட்டமைப்பின் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று தெரிகிறது.

வடக்கு, கிழக்கு அரச உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் மே தினக் கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்ற மாட்டார்கள் என்று பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரச உத்தியோகத்தர் சங்கத்தின் கிழக்கு மாகாண அமைப்பாளர் எம்.சுரேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், திருமலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜா, திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேசசபைத் தவிசாளர் இரா. விஜேந்திரன், வவுனியா நகர்சபை உபத்லைவர் எம். எம்.ரதன், வடக்கு,. கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் வட பிராந்தியத் தலைவர் க.கம்சநாதன், மட்டக்களப்பு முன்னாள் உதவி அரச அதிபர் அ.தர்ம குலசேகரம் உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ச)

## வரதர் வரமாட்டார்

மட்டக்களப்பு,மே1

அரசின் ஆதரவுடன் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தேர்தலில் குதிக்கவுள்ளார் என்று வெளிவந்துள்ள செய்தியானது முற்றிலும் ஆதாரமற்ற, அடிப்படையற்ற செய்தி என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

வரதராஜப்பெருமாள் அரசின் ஆதரவுடன் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் குதிக்கவுள்ளார். அதற்காக இலங்கையிலிருந்து சென்ற குழு பேச்சில் ஈடுபட்டுள்ளது என்று வெளியான செய்தி தொடர்பில் மாகாண சபை உறுப்பினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச)

## படகிலிருந்து தவறி வீழ்ந்து மீனவர் சாவு

மட்டக்களப்பு,மே1

மட்டக்களப்பு, வாழைச்சேனை துறைமுகத்தில் மீனவர் ஒருவர் படகில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. மாத்தறை வெலிகமயைச் சேர்ந்த எம்.ஏ. சாந்தகுமார வயது (38) என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

இவரது சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுவாழைச்சேனைமாவட்டவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புதையல் தோண்டிய நால்வர் கைது

மொறவக்க,மே1

மொறவக்க - றுவான் கந்த விகாரைக்கு அண்மையில் புதையல் தோண்டிய சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொறவக்க பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மொறவக்க நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)



மண்டூர் - தம்பலவத்தை பாடசாலை வீதியை அமைக்கும் ஆரம்ப வேலைகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

## கல்முனையில் தொடரும் திருட்டுக்களால் அச்சம்

### குழப்பத்தில் மக்கள்

நாவிதன்வெளி, மே1

கல்முனை மாநகரப் பிரதேசத்தில்அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் பாண்டிருப்பு எல்லை வீதி, கல்முனை குவாரி வீதி, மருதமுனை ஆகிய இடங்களில் வீடுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்து நகைகள், பணம் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை, வீடுகள், பொது இடங்களில் நிறுத்தி வைக்கப்படும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், தலைக்கவசங்கள் ஆகியனவும் திருடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்களால் கல்முனைப் பிரதேச மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்கின்றனர். திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அறுகம்பைக்கு உல்லாசிகள் வருகை அதிகரிப்பு



பொத்துவில்,மே1

பொத்துவில், அறுகம்பைப் பிரதேசத்துக்கு தற்போது வெளிநாட்டு மற்றும் உள்ளூர் உல்லாசப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றமையைக் காணக் கூடியதாகவுள்ளது என்று அறுகம்பே சுற்றுலா சபைத் தலைவர் தெரிவித்தார்.

ஏப்ரல் முதல் ஒக்டோபர் மாதம் வரையிலான காலப் பகுதியில் இங்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.

அந்த வகையில் வருடமொன்றுக்கு 7 ஆயிரம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அறுகம்பை பிரதேசத்துக்கு வருகை தருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன், ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளே அறுகம்பைப் பிரதேசத்துக்கு அதிகளவில் வருகை தருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## முஸ்லிம் மக்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்

### உலமா சபையின் கிளைத் தலைவர் கோருகிறார்

சம்மாந்துறை,மே1

முஸ்லிம்கள் தொடர்பான எந்த விடயத்தையும் வைத்துக்கொண்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் லாபம் அடைய வேண்டாம் என்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கொழும்பு மாவட்ட கிளைத் தலைவர் அஷ்ஷெய் யூஸுப் முப்தி தெரிவித்தார்.

சம்மாந்துறை இஸ்லாமிய ஷரீஆ கற்கை நிலையத்தில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலைக் கண்டித்து முஸ்லிம் அரசியல்வாதிகளினால் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் அரசியல் லாபத்திற்கே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தம்புள்ள பள்ளிவாசல் சம்பந்தமான விடயத்தில் இந்த நாட்டில் 99 சத வீதமான முஸ்லிம்கள் உலமாக்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடந்தார்கள். ஆனால் அரசியல் வாதிகள் அரசியல் லாப நோக்குடன் நடந்துள்ளனர்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் செல்வது அவர்களின் சொந்த விருப்புக்கல்ல. அங்கு போய் முஸ்லிம்களைப் பற்றி பேச வேண்டுமே தவிர உங்களைப் பற்றி பேசக்கூடாது- என்றார். (ச)

## திண்மக் கழிவுகளை அகற்ற நடவடிக்கை

மட்டக்களப்பு,மே1

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளிலிருந்து மக்களின் பங்களிப்புடன் திண்மக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றும் செயற்றிட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக் களப்பு மாநகரசபை ஆரம் பித்துள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் பங்களிப்புடன் இதன் ஆரம்ப செயற்றிட்டம் சின்ன உப்போடையில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் திண்மக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுதல், அவற்றினை மீள்சுழற்சி மூலம் பசளையாக மாற்றுவதற்கு பொது மக்கள் வழங்கவேண்டிய பங்களிப்பு, கழிவுகளை அகற்றவேண்டிய முறை தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டன.

சின்ன உப்போடை, பெரிய உப்போடை மக்களின் பங்களிப்புடன் அப்பகுதியிலுள்ள திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக திண்மக் கழிவுகள் அகற்றும் இரண்டு வாகனங்கள் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன், மட்டக்களப்பு ஆணையாளர் கே.சிவநாதன், யுனிசெப் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம அதிகாரி அசாதூர் ரஹ்மான், மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் ஜோர்ஜ்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

## அரசின் வரி விதிப்பால் தொழிலாளருக்கே பாதிப்பு

கொழும்பு,மே1

அரசின் வரி விதிப்புக் கொள்கையின் பின்னணியில் ஏற்பட்டுள்ள கோதுமை மா விலை அதிகரிப்பானது தோட்டத் தொழிலாளர்களை பாதிப்புக்குள்ளாக்கியிருப்பதாக லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தெரிவித்துள்ளது.

அரசின் செயற்பாடுகளால் தோட்டத் தொழிலாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தெரிவித்ததாவது:-

அண்மைக் காலமாக எண்ணெய் விலை மூன்று முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, டீசல் விலை ஏற்றத்தின் காரணமாக நாணயத்தின் மதிப்புக் குறைக்கப்பட்டதன் காரணமாக மக்கள்பாவனைக்குரிய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை வழங்காது சுரண்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அரசின் இவ்வாறான நிதானமற்ற பொருளாதாரச் செயற்பாடுகள் தோட்டத் தொழிலாளர்களை வறுமையின் எல்லைக்கே இட்டுச் செல்கின்றது- என்று தெரிவித்துள்ளது. (ச)

## கோணாவத்தை ஆறு புனரமைப்பு

எருவில்,மே1

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள கோணாவத்தை ஆறு எவ்வித அபிவிருத்தியும் இன்றி பாராமுகமாக இருந்த நிலையில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பையின் முயற்சியின் காரணமாக புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கோணாவத்தை ஆற்றுக்கு அண்மையிலுள்ள மக்களின் பூரண ஆதரவுடன் நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைகள் முடிவுற்றதும் இப்பிரதேசம் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதுடன் பொழுதுபோக்குக்குரிய இடமாகவும் மாறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீரியல் விமான இறங்குதுறையாகவும் இதனைப்பயன்படுத்த அமைச்சர் உதுமாலெப்பை நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

நாளை

சித்திரை 20 புதன்கிழமை 02.05.2012
திதி: ஏகாதசி மா.06.41 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப 12.05 வரை
சுபநேரம்: 04.26- 05.56 வரை
ராகு காலம்: 11.56- 01.26 வரை

**மேடம்:** பணிகளை விரைவாகச் செய்து முடிக்க முயற்சிப்பீர்கள். இருப்பினும், சில காரணங்களால் மனநிலையில் சற்று உற்சாகம் குறைந்தே காணப்படும். பணத்தை எதிர்பார்த்து எந்த ஒரு காரியத்தையும் திட்டமிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் போட்டிகள் கூடும் கவனம்.

**இடபம்:** குடும்பக் கவலைகள் நீங்கி மகிழ்ச்சி பெறும் நாள். சொந்த வீடு, வீடு மாற்றம் பற்றிய சிந்தனைகள் மனதில் எழும். ஒரு முக்கியமான பணிக்காக விரைந்து செயற்பட்டபோதும், பணி சம்பந்தப்பட்ட சில கோப்புகளை மறந்து சென்று விடுவீர்கள். அதற்காக அலைச்சல் இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த விற்பனை இருக்கும்.

**மிதுனம்:** காலைப்பொழுதில் தேவையற்ற கவலைகள் உங்கள் மனதை அதிகமாக ஆக்கிரமிக்கலாம். பணியில் உங்கள் கவனம் கவலைகளைக் குறைக்கும், வருமானத்தையும் அதிகப்படுத்த உதவும். குடும்பத்தில் சிலரின் வருகைகள் சந்தோஷம் கொடுத்தபோதும், கூடவே செலவுகளும் இருக்கும். வீட்டு வகையில் பராமரிப்புக்காகச் செலவு ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடகம்:** ஒவ்வொரு பணிகளிலும் அவசரப்பட்டு, அவசரப்பட்டுச் செயற்படுவீர்கள். ஆனால், அதற்கேற்ற பலன் உங்களுக்கு தாமதமாகவே கிடைக்கும். சில காரணங்களுக்காக நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைதி வெற்றி பெறும். குழந்தைகள் வழிச்செலவுகள் குறையும். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும்

**சிங்கம்:** எதிர்கால சிந்தனை சற்று கூடுதலாகக் காணப்படும். அதற்கேற்ற செயற்பாடுகளையும் மேற்கொள்வீர்கள். தொழில் ரீதியான நெருக்கடிகளை சாதுர்யமாக எதிர்கொள்வீர்கள். வாகன வகையில் செலவுகள் கூடும். இல்லறத்துணையின் கோபங்கள், சற்று அதிகமாக யோசிக்க வைக்கும். நீங்கள் நிதானம் இழக்காதீர்கள். .

**கன்னி:** திட்டமிட்ட வேலைகளில் மாற்றம் ஏற்படும். பணம் வருவதற்கு முன் ஒரு திட்டமும், பணம் வந்ததற்கு பின் ஒருதிட்டத்தோடு செயற்படுவீர்கள். சில காரியங்களில் ஏற்படும் தாமதங்கள் மனக் கஷ்டத்தை ஏற்படுத்தும். அலுவலகத்தில் சக ஊழியர்களோடு கருத்து வேற்றுமைகள் வேண்டாம். தெய்வ தரிசனங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எந்த ஒரு விவகாரங்களிலும் பொறுப்புடனும், பொறுமையுடனும் செயற்படுதல் அவசியம். எதிர்பார்த்த பணவரவு சற்று தாமதத்துக்குப் பின் கைக்குக் கிடைக்கும். உடல் ரீதியாக சிறு தொந்தரவுகள் ஏற்படும். அலுவலகப் பணிகளில் வேலைப்பளு கூடும். கூட்டுத் தொழிலில் சாதகமான நிலைமை காணப்படும்.

**விருச்சிகம்:** மன மகிழ்ச்சியான சந்திப்புகளும் தொடர்புகளும் ஏற்படும். நீண்டநாள் சந்திக்க விரும்பிய நண்பர் ஒருவரை எதிர்பாராத விதமாக இன்று சந்திப்பீர்கள். புதிய சொத்துக்கள் வாங்குவது பற்றிய சிந்தனைகள் மேலோங்கும். கலைத்துறையினருக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றங்கள் அகன்று அதிர்ஷ்ட வாய்ப்புகளைச் சந்திக்கலாம்.

**தனுசு:** திட்டமிட்ட செயற்பாடுகள் மற்றும் பேச்சுக்கள் என்று இருக்கும். இந்த மாற்றமான அணுகுமுறையால் உங்களைச் சுற்றியுள்ளோர் பாராட்டுவார்கள். வெளியூர் பயண காரியங்களில் வெற்றிகரமாக நடந்தேறும். எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் செய்ய நினைத்த காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

**மகரம்:** மாற்றமான மனநிலையோடு காணப்படுவீர்கள். சில காரணங்களுக்காக செலவுகள் கூடும். உறவினர்களால் உதவிகள் கிடைக்கப்பெறும். அரச பணியாளர்கள் கோரிக்கை நிறைவேறும். தொழில் ரீதியாக சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். பொதுவாழ்வினர் சாதகமான பலன்களைக் காண்பர்.

**கும்பம்:** சத்தமில்லாமல் ஒரு காரியத்தை முடித்து ஆதாயம் தேடிக்கொள்வீர்கள். குதர்க்கமான பேச்சுக்களைக் குறைக்க வேண்டும். நெருங்கிய நபர்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் வேலைப் பளு அதிகமாக இருக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

**மீனம்:** நீங்கள் என்னதான் சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை முடித்தபோதும், கடந்த கால ஏமாற்றங்கள் மனதில் கவலை கொள்ளச் செய்யும். பண வரவுகள் மகிழ்ச்சி தரும். உறவினர் ஒருவருக்காக பணி ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அலுவலகப் பணிகளில் சில சலுகைகள் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 8 | | 7 | | |
| | | 3 | 6 | 5 | | 8 | | 1 |
| | 9 | 2 | | | | 3 | | 5 |
| 4 | | 5 | 7 | | | | 8 | 6 |
| | | | | 4 | | | | |
| 3 | 8 | | | | 1 | 5 | | 7 |
| 2 | | 8 | | | | 9 | 7 | |
| 1 | | 7 | | 9 | 6 | 4 | | |
| | | 4 | | 2 | | 6 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 8 | 2 | 1 | 4 | 6 | 5 | 9 |
| 5 | 6 | 1 | 8 | 9 | 7 | 2 | 4 | 3 |
| 9 | 4 | 2 | 3 | 5 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 1 | 6 | 4 | 3 | 9 | 7 | 8 | 5 |
| 7 | 9 | 3 | 6 | 8 | 5 | 4 | 2 | 1 |
| 8 | 5 | 4 | 7 | 2 | 1 | 9 | 3 | 6 |
| 4 | 2 | 9 | 5 | 6 | 8 | 3 | 1 | 7 |
| 6 | 3 | 5 | 1 | 7 | 2 | 8 | 9 | 4 |
| 1 | 8 | 7 | 9 | 4 | 3 | 5 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**27.04.1942**

**மறைவு**
**30.04.2008**

## திருமதி
## துரைராஜா தேவகி

(ஓய்வுபெற்ற தொலைக்கல்விப் போதனாசிரியையும் யாழ்ப்பாணம்
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயப் பிரதி அதிபரும்)

**நீண்டகாலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்**
**என எண்ணிய எமக்குச் சிலமணி நேரத்தில்**
**சென்று வருகிறேன் என்றாய் அம்மா தாயே!**
**பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்**
**ஆண்டுகள் நான்குதான் சென்றாலும் அருகிருக்கிறாய்**
**தேவா தேவா எனப் பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா**
**நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா**
**எத்தனைபேர் உன்னை மறந்தாலும்**
**உன் நாமம் உன் பண்பு உன் உபசரணை**
**அறிவூட்டிய திறமை அரவணைத்து ஆறுதல்**
**சொல்ல எத்தனை ஆயிரம்பேர் அம்மா**
**தாங்கள் வாழ்ந்த காலம் எம்மை அடிமைப்**
**படுத்திய காலம் அம்மா நினைக்கின்றோம்**
**உன் நாமம் நிலைக்குமம்மா**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**புறாடி லேன், அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

– பிரிவால் துயருறும்
**கணவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்த சில்வா தகுதியற்ற சாட்சி

கொழும்பு,மே1

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரன் கொலை வழக்கின் பிரதான குற்றவாளியான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை தகுதியற்ற சாட்சியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துமிந்த சில்வா கேள்விகளைக் கிரகித்துக் கொள்வதற்கோ, பதிலளிப்பதற்கோ முடியாத நிலையிலுள்ளார். அவர் மன ரீதியாகப் பாதித்த நிலையில் இருப்பதுடன் ஞாபக மறதியும் உள்ளது என்று நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளனர்.

**துமிந்த சில்வாவுக்கு ஞாபகமறதி உள்ளதால் அவரை தகுதியற்ற சாட்சியாகவே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தலாம்.**

அவரிடம் சம்பவமொன்று குறித்து வாக்குமூலத்தைப் பெறுவது கடினம் என்பதால், இவரைத் தொடர்ந்து விசாரணை செய்ய முடியாது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

எனவே துமிந்த சில்வாவை தகுதியற்ற சாட்சியாகக் கருத வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (ச)

## செயலமர்வு...




பொதுநலவாய பிராந்திய உள்ளூராட்சி மன்றங்களுக்கான இருநாள் செயலமர்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க, பொதுநலவாய உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயலாளர் கார்ல் ரைட் , அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தனியார் பஸ் ஊழியர்களும் இனிமேல் சேமலாப நிதியில்

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு,மே1

தனியார் பஸ் ஊழியர்களை காப்புறுதித் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கும் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வீதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும்போது நிபந்தனையாக இந்தத் தீர்மானத்தை முன்வைக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய திட்டத்தை இந்த மாதக் கடைசி முதல் செயற்படுத்த எண்ணியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**புதிய சட்டத்தை எதிர்ஜவரும் 30ஆம் திகதி நடைமுறைக்கு கொண்டு வருவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இந்தத் தீர்மானம் தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

தனியார் பஸ் ஊழியர்களை காப்புறுதி செய்யும் திட்டத்தை வரவேற்பதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தமது சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அதன் செயலாளர் அஞ்சன பிரியன் ஜித் தெரிவித்தார்.

இலங்கைதனியார்பஸ் உரிமையாளர் சங்கம் உத்தேச திட்டத்தை நிராகரித்துள்ளது.

பஸ் ஊழியர்களை காப்புறுதி செய்து அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை பஸ் உரிமையாளர்களுக்கு இல்லை என்று சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பஸ் சங்கங்களை கட்டாயப்படுத்துவதற்கான அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# கடலில் நீராடிய இளைஞன் சாவு

கொழும்பு,மே1

கொழும்பில் பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு முன்பாகவுள்ள காலிமுகத்திடல் கடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை குளித்துக்கொண்டிருந்த போது இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த புவனேஸ்வரன் சந்திரபோஸ் (வயது 21) என்ற இளைஞனே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடற்படையினரின் உதவியுடன் சடலத்தை தேடுவதற்கான நடவடிக்கையை பொலிஸார் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டபோதும் அவரது சடலம் நேற்று திங்கட்கிழமையே மீட்கப்பட்டது.

இந்த நபரது சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# நிரந்தர அரசியல் தீர்வைப் பெறும்வரை மக்கள் பொறுமை காக்க வேண்டும்

### யோகேஸ்வரன் எம்.பி. கோருகிறார்

எருவில்,மே1

தமிழ் மக்கள் நிரந்தர அரசியல் தீர்வைப் பெறும்வரை பொறுமை காக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேசத்தில் உள்ள கதிரவெளிக் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்று கூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக எங்களது உரிமைக்காக, எமது மக்கள் பல உயிர்த் தியாகங்களை புரிந்துள்ளார்கள். இரண்டு லட்சத்துக்கும் மேல் உயிர்களை இழந்துள்ளோம். ஆனால் எமக்கு அடிப்படை உரிமைகள்கூட இந்த நாட்டில் இல்லை.

ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், விதவைகளாகவும், அநாதைகளாகவும் மாறியுள்ளனர். அத்துடன் இருப்பிடங்கள், சொத்துக்கள், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் உட்பட பலவற்றை இழந்துள்ளோம். இந்த இழப்புகளை அனுபவித்த எமது இனம், தான் எதிர்பார்த்த இலக்கை அடைந்தே ஆக வேண்டும்.

இதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் எதிர்பார்த்த இலக்கை நோக்கி, வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒரு சிறந்த அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் எமக்கு வழங்க வேண்டிய சகல அதிகாரங்களையும் கொண்ட நிரந்தர அரசியல் தீர்வை பெறும் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. எங்களது செயற்பாட்டுக்கு ஆதரவு தரவேண்டிய கடமை வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆகவே பொறுமை காத்து எங்களது நோக்கத்தை நிறைவேற்ற எங்களுடன் என்றும் துணையாக அனைவரும் நிற்க வேண்டும்.- என்றார். (ச-31)

# இரத்த அழுத்த கணிப்பீட்டுக் கருவி பொருத்தப்படுகிறது

கொழும்பு,மே1

கொழும்பு நகரில் மின்னியல் இரத்த அழுத்த கணிப்பீட்டுக் கருவிகளை பொருத்தும் சுகாதார அமைச்சின் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதிக இரத்த அழுத்தம் காரணமாக பெரும்பாலானவர்கள் நாளாந்தம் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வாரத்துக்கு ஒருமுறை பொதுமக்கள் தமது இரத்த அழுத்தத்தை பரிசோதித்துக் கொள்ள வென முதல் கட்டமாக கொழும்பு நகரில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. (ச)

### பஸ் கட்டண உயர்வு தொடர்பான

# ஜே.வி.பி.யின் மனுவை நீதிமன்றம் நிராகரிப்பு

கொழும்பு,மே1

பஸ் கட்டண உயர்வை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதம நீதிவான் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு குறித்த மனுவை நேற்று நிராகரித்தது.

பஸ் கட்டண உயர்வு சட்டத்தின்படி 15.8 வீத பஸ் கட்டண உயர்வே செயற்படுத்த முடியும் என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு அரசு 20% பஸ் கட்டண உயர்வை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவு என்பவற்றை கருத்திற் கொண்டு அரசு 20% பஸ் கட்டண உயர்வை நடைமுறைப்படுத்தியதாக அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார். அது தேசிய பஸ் கட்டணக் கொள்கையை மீறும் செயல் அல்ல என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம் மக்கள் விடுதலை முன்னணியின் மனுவை நிராகரித்துள்ளது. (ச)

# இது கறுப்புச் சந்தை அரசு

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,மே1

''தற்போது ஆட்சியிலிருக்கும் அரசே, நாட்டின் கறுப்புச் சந்தைக்குச் சொந்தக்காரர். இதனாலேயே இந்த நாடும் நாட்டு மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது'' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை அரசு கட்டுப்படுத்த முடியாதுள்ளது. எனவே அதனைக் கருத்தில் கொண்டு சகல தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சம் 7 ஆயிரம் ரூபா சம்பள உயர்வினையாவது பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அரசு பொருள்களை இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு வழங்குகின்றபோது கொள்வனவு செய்த விலையை விட பன்மடங்கு வரிகளை உள்ளடக்கியே வழங்குகிறது.

போர் முடிவடைந்தும் வடக்கில் இன்னும் சரியான சிவில் நிர்வாகம் தோற்றுவிக்கப்படவில்லை. அது மாத்திரமன்றி அவர்களால் சுயமாக தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது.

முப்பது வருட காலங்கள் ஆயுதங்களையும் ஆயுதக் குழுக்களையுமே சந்தித்து வந்த மக்களின் மனங்களில் இருந்து அந்தச் சிந்தனையை மாற்றவேண்டும். அவர்களது ஜனநாயக செயற்பாடுகளுக்கு மதிப்பளித்து அவர்களையும் அரசியல், சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே நாம் எமது மே தினத்தை யாழில் ஏற்பாடு செய்தோம்.

எமது கட்சியின் மே தினச் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் செய்வதை சிலர் அரசியல் இலாபங்களுக்காக வெவ்வேறு வகையில் விமர்சிப்பதுடன் எதிர் பரப்புரைகளிலும் ஈடுபடுகின்றனர்.- என்றார். (ச)

# இரட்டைக் கொலை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு,மே1

இரத்தினபுரி - கஹவத்தை இரட்டைக் கொலை வழக்கு நேற்று திங்கட்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொலையுடன் சம்பந்தப்பட்ட நான்கு சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையிலும் வழக்கு எதிர்வரும் 1[illegible] ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நயப்பும் பாராட்டும்



யா/நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாசாலை
பிரதி அதிபர்
திருமதி
**ஸ்ரீதேவி சண்முகதாசன்**
அவர்கள்
(B.A. டிப்ளோமா –
இந்துசமய விசேட பயிற்சி)

**சேவைக்கால விவரங்கள்**

நு / மறாயா தமிழ் வித்தியாலயம் 27.12.1984 – 30.04.1990
யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம். 01.05.1990 – 31.12.1994
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. 01.01.1995 – 01.05.2012

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் இந்து சமய பாட ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், அன்புடனும், பண்புடனும் அர்ப்பணிப்புடனும் பாடசாலை வளர்ச்சிக்குப் பணியாற்றி 01.05.2012 இல் இருந்து ஓய்வு பெறுகின்றார். ஓய்வுபெறும் இவரைச் சகல சௌபாக்கியமும் பெற்றுக் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல நயினை நாகபூசணியம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.**

## வெற்றிடங்கள்
## தேசிய பொலிஸ் ஆணைக்குழு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் கீழ்வரும் பதவிக்கு வடக்கு, கிழக்கு ஆகிய பிராந்தியங்களிலிருந்து தகைமை பெற்றுள்ள அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**பிரதேச பணிப்பாளர் பதவி - 02**

(1) நாடளாவிய சேவையில் 1 ஆம் தர சேவையாற்றி ஓய்வு பெற்ற 67 வயதைத் தாண்டாத அதிகாரியாக இருப்பதுடன் ஒருவருட கால ஒப்பந்த அடிப்படையில் பதவியில் சேர்த்துக்கொள்ளப்படும்
(2) பதவியில் அமர்த்தப்படுபவர்கள் அம் மாகாணத்தைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்
(3) தொடர்பாடல் மற்றும் விமர்சன விடயங்கள் பற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்
(4) தெரிவு செய்யப்படும் அதிகாரிகளிற்கு உறுதியான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

தமது விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் 2012.05.11 அல்லது அதற்கு முன் தலைவர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு இலக்கம்109, ரோட்டுண்டா கட்டடம், 3 ஆம் மாடி காலி வீதி, கொழும்பு 03. என்ற விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவேண்டும்

**தலைவர்**
**தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

## 31 ஆம் நாள் நினைவுடன்...

மண்ணில்
06.04.1939

விண்ணில்
01.04.2012



அமரர்
**திருமதி இரத்தினம் தங்கச்சியம்மா**

திதி வெண்பா

ஆண்டு கர பங்குனித் திங்கள்
பத்தொன்பதில் வளர்மதி நவமி திதியிலே - நீண்ட புகழ்
தங்கச்சியம்மா எனும் நாமம்
சிவனார் பொன்னடி தனையே

குடும்பத்தினர்.

(17636) (6,7,10)

### நேர்முகத்தேர்வு

வடமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சின் கீழான சேவைகளுக்கு விண்ணப்பித்த யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் நாளை புதன்கிழமை முதல் தொடர்ந்து 4 தினங்கள் தொடர்ச்சியாக வட மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு அலுவலகம், வடமாகாண விவசாயத் திணைக்களம், வட மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் ஆகிய இடங்களில் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது. (ம-14)

### விற்பனைக்கு

பாமசி, பான்சி கடைகளுக்குரிய கண்ணாடி பிற்றிங் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0777606016

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் பள்ளிக்கூடத்திற்கு அண்மையாக இராசேந்திரா வீதியில், 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : T.P : 077 6146434

### தவறிவிட்டது

கதிரவேலு விமலச்சந்திரன் இல.175, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் உழவு இயந்திர அனுமதிப் பத்திரம் (NP.RB 6547), உழவு இயந்திரப்பெட்டி அனுமதிப்பத்திரம் (NP.RW 0469) மற்றும் திறப்புக்கோர்வை என்பன புளியம்பொக்கணை சந்திக்கும், வட்டக்கச்சி ஆறுமுகம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கரடிப்போக்கு சந்தி மூத்தபிள்ளையார் பல்பொருள் விற்பனை நிலையத்தில் கொடுத்து உதவுமாறும் கண்டெடுத்துத் தருவோருக்கு சன்மானமும் வழங்கப்படும்.

தொடர்பு : 077 9531828, 077 9877994

விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

DMI COMPUTER EDUCATION

- ☑ Diploma in Microsoft Office
- ☑ Adv. Dip. in Hardware & Networking
- ☑ Dip. in Pre-Press Desktop Publishing
- ☑ Dip.in Web Designing & Development
- ☑ Dip. in Computerized Accounting
- ☑ Dip.in Video Production & Multimedia
- ☑ AutoCAD ☑ Java ☑ Veta Spoken English

75% OFF



☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, Tel.: 021-222 4403 | M.M.V. Tel. : 021-226 2470 | No.174, Tel. : 021-227 0243 | Tel. : 021-224 1970 |

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11★ 03★ 1972

மறைவு
26★ 04★ 2007

அமரர்
**தங்கராசா ரமணன்**

ஆண்டுகள் ஐந்தானாலும் ஆறாது எம் வேதனை
நீண்ட தூரம் போனதால் நீங்கவில்லை எம் வேதனை
மீண்டும் வருவாயென விழி வைத்து வேண்டுகின்றோம்
உன் அன்புருவம் எம் நெஞ்சினில் வாழும்

'தங்கநிலா', வதிரி. (16959) (2-6-9) - குடும்பத்தினர்.

## கொழும்பு நகர இடங்கள்
## அறிமுகம் இல்லாதவர்களுக்கு ஒரு நற்செய்தி

# சிறந்த வழிகாட்டல் சேவை
## Super Guidance Service at Colombo

யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு, மலையகம் உட்பட ஏனைய வெளி மாவட்டங்களில் இருந்து பல தேவைகள் கருதி (அரசநிறுவனங்கள், தனியார்நிறுவனங்கள், பாஸ்போட் அலுவலகம், சிறைச்சாலைகள், அமைச்சுகள், வைத்தியசாலைகள் தொடர்பான அலுவல்களுக்கு) கொழும்பு நகருக்கு புதிதாக வருபவர்களுக்கு நியாயமான சிறந்த வழிகாட்டல் சேவைகளை வழங்க நாம் தயாராக உள்ளோம்.

- மிகக்குறைந்த செலவில் பஸ் போக்குவரத்து மூலம் உரிய இடங்களுக்கு அனுபவம் வாய்ந்தவர்களால் அழைத்துச் செல்லப்படுவர்.
- உரிய அலுவலகத்தில் மொழிபெயர்ப்பு சேவைகளும் வழங்கப்படும்.
- உரிய அலுவலகங்களில் தேவையான படிவங்களும் பூர்த்தி செய்து தரப்படும்.
- தொடர்புபட்ட முகாமையாளர்களிடம் அழைத்துச் சென்று சிறந்த முறையில் தெளிவுபடுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய வழிசெய்யப்படும்.

**தேவை ஏற்படின் மிகக்குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.**

பெரும்பாலான மக்கள் உத்தரவாதமில்லாத நபர்களை நம்பி பெருமளவு பணத்தை இழந்து ஏமாற்றம் அடைந்து வருகின்றார்கள். இக்குறைபாட்டை கருத்தில் கொண்டு நியாயமான கட்டணத்தில் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இச்சேவை தேவைப்படுவோர் குறைந்தது ஒரு நாளைக்கு முன்பு எம்முடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பதிவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**நம்பிக்கையான - நியாயமான வழிகாட்டல் சேவைக்கு எம்மால் உத்தரவாதம் வழங்கப்படும்.**

**முகாமையாளர்**

தொடர்புகளுக்கு : சுப்பர் வழிகாட்டல் சேவை
No, 1/5 பெரக்கும்பா பிளேஸ்,
கொழும்பு 06

Tel : 0115737597, 0714273035, 0718724060, 0115737599, 0715357699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஈழத் தமிழர் அடையாளங்களை பாதுகாப்பது இளையோர் கடமை

### ஒன்றாரியோ மாகாணத் தலைவர் நீதன் ஷான் தெரிவிப்பு

இலங்கை அரசு எமது வரலாற்றையும் அடையாளங்களையும் அழித்து விடக் கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதனைப் பாதுகாத்து ஆவணப்படுத்தும் மிகப் பெரிய பொறுப்பும் திறனும் இளையோர் கைகளிலேயே தங்கியுள்ளன. அவர்கள் அவற்றைச் சரிவரச் செய்வார்கள் என்ற அசையாத நம்பிக்கை இருக்கின்றது என்று ஒன்றாரியோ மாகாணத் தலைவர் நீதன் ஷான் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ரொறன்ரோவில் அமைந்துள்ள சைனீஸ் கலாசார மண்டபத்தில் கனடா தமிழ் இளையோர் அமைப்பு நடத்திய 'இளந்தளிர்' எனும் நாடக நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.



இந்த இளந்தளிர் நிகழ்வில் ஈழத் தமிழர்களின் வரலாற்று அடையாளங்களையும் தமிழர்களின் பல்வேறு கலை வடிவங்களையும் எடுத்துக் கூறும் வகையில் பாடசாலை, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களால் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வடிவங்களும் வெளிக்காட்டப்பட்டிருந்தன. (ந)

# ஒலிம்பிக் அரங்கை சுற்றியுள்ள வீட்டுக் கூரைகளில் ஏவுகணை

லண்டனில் கோலாகலமாகத் தொடங்கவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு விளையாட்டு அரங்கைச் சுற்றி அமைந்துள்ள சாதாரண மற்றும் மாடி வீடுகளின் கூரையில் ஏவுகணைத் தளங்களை அமைக்க பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளது.

தீவிரவாத அச்சுறுத்தல் உள்ள உலகின் தலை நகரங்களில் லண்டன் முக்கியமானது. அதிலும் இந்த வருட தீவிரவாதிகளின் குறி, லண்டன் ஒலிம்பிக்காக இருக்கலாம் என்ற தீவிர அச்சம் நிலவுகிறது. வான் வழியாக நடத்தப்படக் கூடிய தாக்குதல்களைத் தரையிலிருந்தே தடுப்பதற்காகவே, அதிவேகமுடைய ஏவுகணைகளையும் அவற்றை இயக்கப் படை வீரர்களுக்கான தற்காலிக நிறுத்தங்களையும், லண்டனின் ஒலிம்பிக் விளையாட்டு அரங்குகளைச் சுற்றி அமைந்துள்ள சாதாரணமான மற்றும் மாடி வீடுகளின் கூரையில் அமைக்க பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளது.

**இந்த வருட தீவிரவாதிகளின் குறி, லண்டன் ஒலிம்பிக்காக இருக்கலாம் என்ற தீவிர அச்சம் நிலவுகிறது.**

இதையொட்டி தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் அரச சார்பற்ற பொது மக்கள் உட்பட சுமார் 700 மாடி வீடுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வீட்டு உரிமையாளர்களின் விருப்பு வெறுப்பை மீறி பிரிட்டிஷ் அரசு வலுக்கட்டாயமாக அனுமதி கோரியுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர் பிலிப் ஹம்மொன்ட், ''பாதுகாப்பு நடவடிக்கைகள் மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சில தினங்களுக்குள் ஏவுகணைகள் குறித்த இடங்களில் நிறுவப்பட உள்ளன. இதற்குப் பொதுமக்களின் அனுமதி பெறப்படும்'' -என்றார். (ந)

# மனித உரிமைகளை மீறியவர்கள் பிரிட்டனுக்குள் பிரவேசிக்கத் தடை

சித்திரவதை, கொலை உட்பட பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேராத நபர்கள் பிரிட்டனுக்கு வருகை தருவதைத் தடுப்பதற்குத் தேவைப்படும் கடுமையான குடிவரவு ஏற்பாடுகளை பிரிட்டிஷ் அரசு அறிவிக்கவுள்ளது.

பிரிட்டிஷ் அரசின் மனித உரிமைகள் அறிக்கையிலுள்ள நடவடிக்கைகளை அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு நேற்று திங்கட்கிழமை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கவுள்ளது என்று 'த கார்டியன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த கால அல்லது நிகழ் கால மனித உரிமைகள் மீறல் தொடர்பான நம்பகரமான ஆதாரங்கள் இருந்தால், சம்பந்தப்பட்டோர் லண்டனுக்குள் பிரவேசிப்பது தடுக்கப்படும்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகாரிகள் எவருக்குமே விசா வழங்காமல் மறுத்துவிடுவது என்பதை இந்தச் சட்ட ஏற்பாடுகள் கொண்டிருக்கவில்லை. தனிப்பட்டவர்கள் தொடர்பாக அமைச்சர்களே தீர்மானிக்க முடியும்.

இந்த மாற்றங்களை வெளி விவகார அலுவலக அமைச்சர்களும் பிரதிப் பிரதமர் நிக்கி ளெக்கும் முன்னெடுத்திருக்கின்றனர். (ந)

# போகா ஆள் கடத்தல் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபர்கள் சிக்கினர்

இலங்கையர் 269 பேரைக் கனடாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி டோகாவில் அநாதரவாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு முக்கிய சந்தேக நபர்களைக் கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களில் முக்கிய சந்தேகநபராகக் கருதப்படும் கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த கந்தையா ஜெயராஜன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து சந்தேகத்திற்குரியவரான கந்தையா பூபாலசிங்கம் எனப்படும் மோகன் ராஜ் என்பவர் வெள்ளவத்தைப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் அவர் வவுனியா கணேசபுரத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. கனடாவில் குடியுரிமை பெற்ற இவர், பமாகோ, மலேஷியா, டோகா, கினி, மாலி போன்ற நாடுகளுக்குச் செல்லும் இலங்கை அகதிகளைக் கப்பல் ஊடாகக் கனடாவுக்கு கொண்டு செல்வதற்கான வசதிகளை மேற்கொள்பவராகச் செயற்பட்டுள்ளார்.

ஏற்கனவே, டோகாவுக்குத் தமிழ் அகதிகளை அனுப்புவதற்கு முயற்சித்த போது கைது செய்யப்பட்ட ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் மூலமாகவே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முதலில் கைது செய்யப்பட்ட அருணகிரிநாதன் ஜெயரூபன் என்பவரே முழு தகவல்களையும் வழங்கியுள்ளார் என்று தெரிய வருகிறது. (ந)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

நெல்லிரசம் தயாரிப்பதற்கு அனுபவம் வாய்ந்த இரண்டு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு : 077 0782255

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள தகரங்களினாலும் அரி மரங்களினாலுமான கொட்டகை விற்பனைக்கு உண்டு. (ரியூசன் நடத்துபவர்களுக்கு உகந்தது)

தொடர்பு: 0752390967

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்.

தொடர்பு: 0773399927

**உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக் குழுவினரால் நடத்தப்படவுள்ள கட்டுரைப் போட்டி - 2012**

போட்டியின் வகை : திறந்த போட்டி

போட்டித் தலைப்பு : மதுபானம், புகையிலை மற்றும் போதைப்பொருள் பாவனையில் இன்றைய இளம் சமுதாயத்துக்கான அறைகூவல்களும் அவற்றை எதிர் கொள்வதற்கான அணுகுமுறைகளும்

சொற்களின் எண்ணிக்கை : 500 இற்கு குறையாமல்

பரிசில்கள்
★ 1 ஆம் பரிசு: ரூபா 5,000/=
★ 2 ஆம் பரிசு: ரூபா 3,000/=
★ 3 ஆம் பரிசு: ரூபா 2,000/=

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவர்கள் போட்டியாளரின் முழுப்பெயர் பதவி/தொழில், தொலைபேசி இலக்கம், வீட்டு முகவரி என்பன உள்ளடக்கி சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 11.05.2012 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இணைப்பாளர் மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கவும் கடிதத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கட்டுரைப்போட்டி (உலக புகைத்தல் ஒழிப்பு தினம் - 2012) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கட்டுரைப் போட்டி நடைபெறும் பரீட்சை நிலையம், திகதி, நேரம் என்பன பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 021 2222278, 077 3571047

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

**O⁺ சிறுநீரகம் தேவை**

**திருமதி வரதராசா சிவபாக்கியம்** (வயது 58) சிறுநீரக நோயால் அவதிப்படுகிறார். அவருக்கு சிறுநீரக மாற்றுச்சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதால் O⁺ சிறுநீரகம் தேவைப்படுகிறது. சிறுநீரகத்தானம் செய்ய விரும்புபவர்கள் கீழ்வரும் முகவரியுடனும் தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

உரிய சன்மானம் வழங்கப்படும்

முகவரி : 2 ஆம் ஒழுங்கை,
பத்தினியார் மகிழங்குளம், தாண்டிக்குளம்

தொலைபேசி : 077 3950169,
077 3595644, 024 3249658

**முதலாம் ஆண்டு நினைவு**



மண்மகிழ
25 ★ 08 ★ 1941

கண்நெகிழ
14 ★ 04 ★ 2011

**வேலுப்பிள்ளை வேதநாயகம்**

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை)

திதி : பூர்வபக்கதசமி 01.05.2012


ஆலம் விழுதுகள் போல்
உறவுகள் ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தீர்கள்
அதில் வீழ்ந்து விடாதிருந்தோம்
எம் புலன்கள் எம்மை உணரும்
இறுதிக்கணம் வரை
உங்கள் நினைவுகள் எம்முடன்....

இல. 98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
021 2228016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசலுக்கான விலை கட்டுப்பாடு நீக்கம்



பெற்றோல் விலையை போல் டீசல் விலையையும் சர்வதேச சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப பெற்றோலிய நிறுவனங்களே நிர்ணயித்து கொள்ள இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து மத்திய நிதித் துறை இணைய மைச்சர் நமோ நாராயணன் மீனா, சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை உயர்ந்த போதிலும், நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்கள் பாதிக்கக் கூடாது என்பதற்காக டீசல் விலையை உயர்த்த அரசு கட்டுப்பாடு விதித்திருந்தது என்றார்.

இருந்தும், 2012 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவதால் எண்ணெய் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மானியத் தொகை காரணமாக அரசின் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே சர்வதேசச் சந்தை நிலைவரத்துக்கேற்ப பெற்றோல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்துக் கொள்ள அனுமதித்தத்துபோல் டீசலுக்கும் அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.(த)

# அங்கர் பால்மா நடத்தும் சித்திரப் போட்டி- தேசிய ரீதியில் மாணவர்களுக்கு வாய்ப்பு




Fonterra நிறுவனத்தின் பிரதான வர்த்தக நாமமான அங்கர் தனது 125ஆவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடும் வகையில் 125 மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நாடளாவிய ரீதியிலான சித்திரப் போட்டியொன்றை அண்மையில் ஆரம்பித்தது.

'நினைத்தால் சாதிக்க முடியாதது என்று எதுவுமே கிடையாது' என்ற தொனிப் பொருளில் இடம்பெறுகின்ற இப்போட்டியில் பல்வேறு மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 125 பாடசாலைகளைச் சார்ந்த தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்கள் எவரும் பங்குபற்ற முடியும்.

நினைத்தால் சாதிக்க முடியாதது என்று எதுவுமே கிடையாது என்ற எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் ஊக்குவித்து ஆக்கபூர்வமான சித்திரப் படைப்பு வடிவங்களில் தங்களது எதிர்கால அபிலாஷைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குவதே இப்போட்டியின் நோக்கமாகும்.

மாணவர்கள் தாங்கள் எதிர்காலத்தில் எத்தொழிற்றுறையினுள் காலடியெடுத்து வைக்கவேண்டும் என்ற கனவை சித்திர வடிவில் வெளிப்படுத்தும் வகையில் சமர்ப்பித்துத் தமது பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்யவுள்ளனர்.

அன்னையரின் அன்பையும், மிகச் சிறந்த பால் போஷாக்கையும் ஒன்றுசேர வெளிப்படுத்தும் தலைசிறந்த வர்த்தக நாமமான அங்கர் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து இப்போட்டிக்கு ஆதரவளிக்கும். (த)

# GENIUS ACADEMY நடத்தும் ஆங்கில மொழி போட்டிப்பரீட்சை

முதலாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலமொழியில் போட்டிப்பரீட்சை 2 ஆவது முறையாகவும் GENIUS ACADEMY மூலம் இவ்வருடம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையை ஒரு போட்டியாக ஒழுங்குபடுத்திப் பரீட்சை முடிவில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பங்குபற்றிய அனைவருக்கும் அவர்களின் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கங்களோடு பங்குபற்றியதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தமிழ்நாடு, கேரளா, ஒரிசா, ஆந்திரா, மும்பாய் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பல வருடங்களாக நடைபெறும் இப்போட்டிப்பரீட்சை 2 ஆவது முறையாக GENIUS ACADEMY இனால் நடத்தப்படவுள்ளது.

தொடர்புக்கு: Genius Academy, 75, Galpotha St, Colombo - 13. Tel: 0779-914260, 0113-134067 Email: genius. roy2000@gmail.-com. (த)




தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் இலங்கை வங்கியின் கிளிநொச்சி, மாங்குளம் கிளைகளில் சேமிப்புக் கணக்கை வைத்துள்ள மாணவர்கள் அண்மையில் வங்கியால் கௌரவிக்கப்பட்டனர். (த-86)

## விமான நிலையக் கட்டணம் உயர்வு



இந்தியாவின் விமான ஒழுங்குபடுத்தும் பிரிவு டில்லி விமான நிலையத்திற்கான கட்டணத்தை 345 வீததத்தல் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி,மே மாதம் முதலாம் 15 ஆம் கட்டணங்கள் உயரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து டில்லிக்கான விமானக் கட்டணங்களும் உயர்த்தப்படும் என்று விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

டில்லி விமான நிலையத்தைத் தொடர்ந்து மும்பை விமான நிலையக் கட்டணமும் அதிகரிக்கப்படும் என்று விமான ஒழுங்குபடுத்தும் பிரிவு தெரிவித்துள்ளது.

## தேயிலை உற்பத்தி உலகில் 15 கோடி கிலோவாக வீழ்ச்சி

நடப்பாண்டில் இதுவரையில் சர்வதேச அளவில் கருப்புத் தேயிலை உற்பத்தி 15 கோடி கிலோவாகக் குறைந்துள்ளது. கடந்த பெப்ரவரி வரை கென்யாவின் தேயிலை உற்பத்தி 80 லட்சம் கிலோ குறைந்தது. இந்தியாவின் தேயிலை உற்பத்தி 20.24 லட்சம் கிலோ சரிவடைந்தது. இலங்கையின் தேயிலை உற்பத்தி 20.10 லட்சம் கிலோ உயர்ந்து 4.53 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. (த)

## உருக்கு உற்பத்தி அதிகரிப்பு

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் உலக அளவில் உருக்கு உற்பத்தி முந்தைய ஆண்டின் இதே காலத்தை காட்டிலும் 37.7 கோடி தொன்னாக அதிக ரித்துள்ளது என உலக உருக்கு உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (டபிள். எஸ்.ஏ) தெரிவித்துள்ளது.

உலக உருக்கு உற்பத்தியில் டபிள்.எஸ்.ஏ. அமைப்பில் இடம் பெற்றுள்ள நிறுவனங்களின் பங்கு 85 சதவீதமாக உள்ளது. ஆசிய நாடுகளின் பங்கு 56 சதவீதமாகும். ஆசியாவின் உற்பத்தி 24.17 கோடி தொன்னாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவின் உற்பத்தி 82.30 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

இருப்பினும், ஐரோப்பிய நாடுகளின் உற்பத்தி 4.39 கோடி தொன்னாகக் குறைந்துள்ளது. ஆசிய நாடுகளை பொறுத்தவரை சீனா 17.42 கோடி தொன் உருக்கு பொருள்களை உற்பத்தி செய்துள்ள நிலையில், இந்தியாவின் உற்பத்தி 1.80 கோடி தொன்னாக உள்ளது.

# வெற்றிப் பாதையில் வவுனியா சன் பிரிட்டிஷ்

வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள வவுனியா குதண British Business Management College கிராம மட்டங்களில் மாணவர்களுக்குப் பெரும் சேவையாற்றிவருகின்றது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியை வழங்கி வருகின்றது.

இக்கல்லூரியின் செயற்பாடு தொடர்பில் அதன் பணிப்பாளர் எஸ்.வி.சிவம் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் கல்லூரி 2006 ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி 10 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆவது ஆண்டில் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு பல்வேறுபட்ட கற்கைகளைக் கற்பித்து அவர்களைத் துறைசார் நிபுணர்களாக, கணக்காளர்களாக, ஆசிரியர்களாக, வங்கி அதிகாரிகளாக, கணக்காய்வாளர்களாக, கணினி இயக்குநர்களாக, வங்கி ஊழியர்களாக, மிகச்சிறந்த சுயதொழில் முயற்சியாளர் களாக ஆக்கியது.

எமது கல்லூரி குறிப்பாக சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், அரச ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கான கற்கைகள், சுயதொழில் கற்கைகள் போன்றவற்றைப் போதித்து வருகின்றது.

ஜீ.சீ.ஈ. (சா/த) வரை கற்றவர்கள் அதாவது, உயர்தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்கள் பல்வேறு வகையான கற்கைநெறிகளைக் கற்கமுடியும்.

வடமாகாணத்தில் எமது கல்லூரி குறிப்பாக, வவுனியா மாவட்டத்தில் (a.a.t.) SriLankan நிறுவனப் பதிவைக் கொண்டுள்ளது.

இலங்கைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அங்கீகாரத்துடன் சர்வதேச பல்கலைக்கழகப் பட்டப் படிப்பை ஓர் ஆயத்தக் கற்கைநெறி மூலமாகத் தொடரும் வாய்ப்பு உள்ளது.

தகவல் தொழில்நுட்பக் கற்கைகளைக்கூட எமது கல்லூரி அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களூடாகவும், சர்வதேச நாடுகளின் பிரபல கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஊடாகவும் வழங்கிவருகின்றது.

எமது கல்லூரி ஏழை மாணவர்களையும் அரவணைத்துச் செல்லும் நோக்கோடு பாடசாலைகள் ரீதியாக பொது அறிவுப் போட்டிப் பரீட்சைகளை நடத்தி திறமையான மாணவர்களுக்கும் ஏழை மாணவர்களுக்கும் 100 வீத கட்டணக் கழிவை வழங்கி வருகின்றது.

எமது கல்லூரி பொதுவாக கற்கைநெறிகளில் நிபுணத்துவம்பெற்ற - அனுபவம்கொண்ட விரிவுரையாளர்களை மட்டுமே கொண்டு கற்பித்தல் பணியை மேற்கொண்டு வருகின்றது.

நாம் சிறிய முதலீட்டில் அதிக இலாபமீட்டக்கூடிய சுயதொழில் கற்கைகளை அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக, கையடக்கத் தொலை பேசி திருத்துதல், கணினி பராமரிப்பு, கணினி திருத்துதல், விளம்பரம் தயாரித்தல், நிகழ்ச்சி அறிவிப்பாளர் பாடநெறி போன்றவற்றை வழங்கி வருகிறோம்.

இக்கல்லூரி எமது நாட்டின் பலம் பொருந்திய கல்விசார் நிறுவனங்கள், அரசுசார் நிறுவனங்கள், சர்வதேச கல்லூரிகள் மற்றும் சர்வதேசப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுகின்றது.

இது முறையாக அரச கம்பனிச் சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ளதுடன், மாவட்ட ரீதியில் பிரதேச செயலகத்திலும், கிராம மட்டத்திலும் அவசியமான பதிவைக் கொண்டுள்ளது.

மேலும், கணக்கீட்டுத் துறைசார் முன்னணி நிறுவனமான a.a.t, SriLankan இன் அங்கீகரிக்கப்பட்ட முகவராக Sun British கல்லூரி காணப்படுவதுடன் இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்படும் ICTA இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திலும் கிராமியப் பயிற்சி வழங்கும் திட்டத்திலும் அங்கத்துவம் பெற்றுள்ளது.

Genius Academy மற்றும் Greenwich College,ISS computer System(ISS நிறுவனம்)கண்டி Kings Technical College மற்றும் வவுனியா Exnora Marketing Company, Lanka Voica Advertising Company என்பனவும் எமது கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிகின்றன.

CSS Computer System நிறுவனத்தின் மாவட்டப் பயிற்சி வழங்குநராகவும் Sun British Business Management College காணப்படுவதுடன் Genius Academy உடன் இணைந்து தபால் மூலம் பட்டப்படிப்புகள், பட்டப்பின் படிப்புகளையும் நேரடி வகுப்புகளையும் ஒழுங்குசெய்து வருகின்றது.

ஜி.சீ.ஈ. சா/த 6 பாடச் சித்தி பெற்ற வர்கள் கூட பட்டப்படிப்புகளைத் தொடரக்கூடிய வசதிகள் எமது கல்லூரியிலே உள்ளது.

இந்தியாவின் தமிழ்நாடு காரைக் குடியில் அமைந்துள்ள அழகப்பா பல்கலைக்கழகம், இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம், மலேசியா நாட்டின் ஆசியா (அண்டிச்) பல்கலைக்கழகம், கர்நாடகா திறந்தநிலைப் பல்கலைக் கழகம் என்பவற்றுடன் இணைந்து பட்டப்படிப்புகளை வழங்கி வருகிறோம்.

இக்கல்லூரி இல: 26, புகையிரத வீதி, அப்பலோ வைத்தியசாலை மேல்மாடி, வவுனியா என்னும் முகவரியில் தலைமையகத்தையும், இல:40, கனகபுரம், பிரதான வீதி, உதயநகர், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கிளைகளையும் கொண்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதச் சாயத்தை மே தினம் மீது பூசுவதற்கு அரசு முயற்சிக்கிறது


## ஜனநாயக மக்கள் முன்னணி பிரசாரச் செயலாளர் குற்றச்சாட்டு

தொழிலாளர்களின் வாழ்வில் மே தினமானது புதிய திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் விலைவாசி ஏற்றம் மலை போல் அதிகரித்துச் செல்வதனால் தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். எனவே அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசார செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான ப. பாஸ்கரா விடுத்துள்ள மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றம் அனைவரது வயிற்றிலும் அடித்துள்ளது. எனவே இதிலிருந்து தொழிலாளர்களது குடும்பங்கள் மீட்சி பெறுவதற்கு சம்பளம் அதிகரிப்பானது அவசியமானதாகும். போர் முடிவடைந்து 3 வருடங்கள் ஆகின்ற போதிலும் இன்னமும் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் ஐக்கிய தேசியக்கட்சியுடனும் இணைந்து பொது மேதினத்தில் எமது கட்சியும் பங்கு கொள்கின்றது.

இந்த பொது மே தினத்தை புலிச் சாயம் பூசி இனவாதத்தை தூண்டுவதற்கு தென் பகுதியில் முயற்சி எடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் எதிரணியினர் ஒன்றிணைந்து அனுஷ்டிக்கும் மேதினமானது வெற்றி பெறுவதற்கு சகலரும் ஒத்துழைப்பது அவசியமானதாகும். இந்த மேதினத்தில் தமிழ் மக்களை அணிதிரளுமாறு எமது தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்திருந்தார். அதனை நானும் நினைவூட்ட விரும்புகின்றேன் - என்றார்.



யாழ்ப்பாணத்தில் மே தின நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்துவது என்ற இணக்கப்பாட்டுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வந்துள்ளனர். நேற்று மாலை இருவருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த முடிவெடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## வரப்பிரகாசம் திரவியராசா



மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தை சேர்ந்த வரப்பிரகாசம் திரவியராசா (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஸ்ரெலா(நேசமணி)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம்- சூசானம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அக்கினேசம்மா, செல்வநேசம் மற்றும் கிறிஸ்தோப்பர், யேசுரட்ணம், றோஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பெனடிக்ற், டென்சி, றாஜினி (பிரான்ஸ்), லோசினி, றஞ்சினி, சுதாஜினி, சுபாஜினி, றொசானி ஆகியோரின் அன்புத்தந்தையும் அருள்நேசன் (பாலா,பிரான்ஸ்), றஞ்சன், காலஞ்சென் ற அன்ரனி மற்றும் இளங்கீரன், றங்கன், பீற்றர்தாஸ் ஆகியோரின் மாமனாரும் யுஸ்ரெலா, கிறிஸ்ரெலா, நிக்ரெலா, ஜெனிஸ்ரெலா, றஜித் ஆகியோரின் பேரனும் அனுஸ்காவின் பூட்டனும் ஆவார்

அன்னாரின் இறுதி சடங்கு (02.05.2012) நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு*

*தகவல்*
*ஸ்ரெலா (நேசமணி)*
*மனைவி*

## சின்னையா கந்தையா



நீர்வேலி வடக்கு நீர்வேலி எனும் முகவரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தையா (30.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கலாறஞ்சினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஆச்சி முத்து மற்றும் சண்முகம், பொன்னம்பலம், கதிரவேலு, பிள்ளையம்மா, மகேஸ்வரி, சவுந்தலேஸ்வரி, சத்தியேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் திலீபன் (கனடா), கிரிசாந்தன், பிரசாந்தி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு தந்தையும் நிறஞ்சனின் (CDB Bank-வவுனியா) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்(01.05.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்கடவை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*இராச வீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

*தகவல்*
*குடும்பத்தினர்.*

## சின்னத்தம்பி கந்தசாமி

**(இளைப்பாறிய கிராம சேவகர்)**



கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சங்கானை முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்று (30.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*முருகமூர்த்தி வீதி,*
*சங்கானை கிழக்கு,*
*சங்கானை.*

*தகவல்*
*குடும்பத்தினர்*

## உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை

நாட்டில் அரசின் நாசகார செயற்பாடுகள் காரணமாக பொருள்களின் விலை அதிகரித்து விட்டது. ஆயினும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நியாயமான முறையில் வழங்க அரசு தவறி விட்டது. இதனால் தோட்டத் தொழிலாளர்களும், நாட்டு மக்களும் பெரும் அவலத்தை சந்தித்து வருகின்றனர்.

இத்தகைய சுரண்டல்களை இல்லாது ஒழித்து தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை வென்றெடுக்க வேண்டும் - என்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மேதின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பிரதேசத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.(தரகர் தேவையில்லை). தொடர்பு:-0777572905

## சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம் (வது) சுன்னாகம்

### அறிவித்தல்

தரமான முழு நெல்லிக்காய் எமது ஐசுபி பழரசத் தொழிற்சாலையால் கொள்வனவு செய்யப்படுகின்றன.

விலாசம் : மானிப்பாய் வீதி, ஆலடி, உடுவில்
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
021 3212813, 021 3212380

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை செல்வரட்ணம்

சங்கானை நிம்மதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் 29.04.2012 இறையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மா (பரிமளம்)வின் அன்புக் கணவரும் சத்தியவதி (தேவி -கனடா), திலகவதி (ராணி- கொழும்பு) காலஞ்சென்ற லலிதாதேவி (மலர்) செல்வதாஸ் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்-மகன், மகள்*

# துன்னாலை தெற்கு கலிகைக் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவ 6 ஆம் திருவிழா நிகழ்வுகள்

காலம்:-01.05.2012 (செவ்வாய்க்கிழமை) இரவு நிகழ்வாக தவில், நாதஸ்வரக் கச்சேரியும் தொடர்ந்து சண்டிலிப்பாய் ஆனந்தா இசைக்குழுவின் இன்னிசை ராகங்களும் தொடர்ந்து பிரபல தென்னிந்திய பின்னணிப்பாடகர் T.M சௌந்தரராஜனின் செல்வப்புதல்வன் செல்வகுமார் அவர்கள் ராகஸ்வரம் இசைக்குழுவினருடன் இணைந்து வழங்கும் இன்னிசை கானமும் இடம்பெறும்.



**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**6ஆம் திருவிழா உபயகாரர்கள்**
**கலிகை கந்தசுவாமி கோயில்.**

## காணிகள் விற்பனைக்கு உண்டு

129 பிரதானவீதி கொழும்புத்துறையில் (மலை வேம்படிச் சந்தியில்) உள்ள 2¼பரப்புக்காணியும், பிரதான வீதியில் இருந்து துண்டி வீதியின் ஊடாக 150 M தூரத்தில் உள்ள 8 பரப்புக்காணியும் (ஐயனார் கோயில் அருகாமையில்) விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0777639462,0778100080

Care

தலை முடி உதிர்தல், பொடுகு,இளநரை, POSORIASIS, புளுவெட்டு போன்ற பிரச்சினைகளுக்கு இம் மாதத்திற்குரிய மருத்துவ ஆலோசனை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் : 3ம், 4ம் திகதிகளில்
வவுனியா : 6ம் , 7ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முற்பதிவுகளுக்கு : 021 4923416

Jaffna - No. 26, Browns Road. Tel: 021-4923416, 021-2220288
Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078
Colombo - No. 100, George R. De Silva Mawatha Colombo 13. 011-4343270
Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924640

Dr. Pimple

Care

முகப்பருக்கள் சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு...

மருத்துவ ஆலோசனை

எதிர்வரும் 3ம், 4ம் திகதிகளில் யாழ் கிளையிலும்
6ம், 7ம் திகதிகளில் வவுனியா கிளையிலும் நடைபெற உள்ளது.

முற்பதிவுகளுக்கு : 021 4923416

Jaffna - No. 26, Browns Road. Tel: 021-4923416, 021-2220288
Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078
Colombo - No. 100, George R. De Silva Mawatha Colombo 13. 011-4343270
Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924640



# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக கணக்காளரும் நலன்புரிச்சங்க தலைவருமான திரு.ப.சுஜேந்திரன் அவர்களின் அன்புத்தந்தையார்

**திரு.சின்னையா பஞ்சராசா**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்*
*வேலணை*

*பிரதேச செயலரும்,*
*அனைத்து ஊழியர்களும்,*
*நலன்புரிச்சங்கம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னையா பஞ்சராசா

(முன்னாள் புகையிரதப்பகுதி ஊழியர்)

ஏழாலையைப்பிறப்பிடமாகவும் 171/1 பலாலி வீதி கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பஞ்சராசா நேற்று (30.04.2012) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (கணக்காளர் பிரதேசசெயலகம் வேலணை, பதில் பிரதேசசெயலகம் காரைநகர்) சுஜேந்திரன் (முகாமையாளர் கரிகணன் பிறிண்டேர்ஸ்), சுரேந்திரன் (ஆசிரியர், பொலநறுவை முஸ்லீம் கல்லூரி), ஆகியோரின் அன்புத்தந்தையும், கோகிலவதனி (ஆசிரியர், ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), சுவர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அட்ஷயனின் அன்புப் பேரனும். காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தங்கராசா, விமலாதேவி, விக்னராசா, கனகராசா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, இரத்தினம் காலஞ்சென்ற பாக்கியம், கந்தசாமி காலஞ்சென்றவர்களான நடராசா, வஞானம் மற்றும் வீரவாகு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

171/1 பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

தகவல்
குடும்பத்தினர்

# துயருடன்...



கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர்
சுஜேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

## சின்னையா பஞ்சராசா

மலர்வு
21.04.1943

உதிர்வு
30.04.2012

கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்க் கரைந்த
மாயமென்ன....

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

**உரிமையாளரும் ஊழியர்களும்.**

**கரிகணன் பிறிண்டேர்ஸ்**

இல. 424, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறிகண்டிக்குச் செல்ல இராணுவம் மீண்டும் தடை

முல்லைத்தீவு, மே 1

முல்லைத்தீவு திருமுறிகண்டியின் மீளக்குடியமர்வுக்கு அனுமதித்த பகுதிகளை அதிகாரிகள் சென்று பார்வையிட இராணுவம் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட திருமுறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த 117 வரையான குடும்பங்களை அவர்களது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர அனுமதிக்காமல் அங்கு இராணுவம் ஆக்கிரமித்து நிற்கிறது.

இந்த நிலையில் மேற்படி மக்களை மாற்று இடம் ஒன்றில் குடியமர்த்துவதாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அரச தரப்பு மக்களை ஏமாற்றி வந்த நிலையில் தற்போது திருமுறிகண்டி பகுதியின் 117 குடும்பங்கள் வாழ்ந்த இருநூறு ஏக்கர் காணியில் குறிப்பிட்ட ஒரு பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளை விடுவித்து நலன்புரி நிலையங்களில் உள்ள 46 குடும்பங்கள், உறவினர், நண்பர்கள் வீடுகளில் உள்ள குடும்பங்கள் என 117 குடும்பங்களையும் மீளக்குடியமர இராணுவம் அனுமதிப்பதாகக் கூறி கடந்த வாரம் பிரதேச செயலர், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதில் உரிய காணியில் பொதுமக்கள் குடியமர்வதற்கு இராணுவம் தடைவிதிக்காதென இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை குறிப்பிட்ட பகுதிகளில் காணிகளை பார்வையிடுவதற்கும், நில அளவீடுகளைச் செய்வதற்கும் சென்ற அதிகாரிகளையும் உடன் சென்ற மக்கள் பிரதிநிதிகளையும் இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

தமக்கு இதற்கான அனுமதி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும், இதனால் தாம் மேற்படி பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்க முடியாது என்றும் அங்கிருந்த இராணுவ அதிகாரிகள் கூறியதுடன் அனுமதி வழங்கவும் மறுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## துணுக்காய்ப் பிரதேசத்தில் இடி மின்னல் தாக்கம்

துணுக்காய், மே 1

துணுக்காய்ப் பிரதேசத்தில் இடி தாங்கி அமைக்கப் படாததால் இடி மின்னலின் தாக்கம் அதிகரித்துள்ளது.

தற்போது துணுக்காய், பாண்டியன் குளம் பிரதேசங்களில் மாலை நேரங்களில் இடிமின்னலுடன் கூடிய கன மழை பெய்து வருகின்றது. இதன் போது இடிமின்னல் தாக்கத்தினால் மின்சாரத்தில் இயங்கும் உபகரணங்களுக்குப் பெரும் சேதங்கள் ஏற்படுகின்றன.

மல்லாவியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்பனை நிலையமொன்று இடி மின்னலால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு விற்பனைக்கென வைக்கப்பட்டிருந்த நான்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் எரிந்து நாசமாகியுள்ளன. அத்துடன் குளிர்சாதனப் பெட்டியொன்றும் செயலிழந்துள்ளது, வானொலிப் பெட்டிகள் செயலிழந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இந்தப் பிரதேசத்தில் இடி மின்னலால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் இறந்தும் உள்ளனர்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பிரதேசத்திலே இடி தாங்கியொன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

# வவுனியா தெற்கு வலயத்துக்கு விசேட அடிப்படையில் ஆசிரியர்

### பெற்றோரின் உதவியுடன் கற்பித்தல் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், மே 1

வவுனியா தெற்கு வலயத்தில் உயர்தர வகுப்பில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் 5 பாடசாலைகளுக்கு மேலதிக ஆசிரியர் சென்று கற்பிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா தெற்கு வலயத்தில் கடந்தமுறை ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளமை பற்றி அரச அதிபர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதற்கு அங்குள்ள 5 பாடசாலைகளில் தமிழ், புவியியல், பொருளாதாரம், இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் அந்த வெற்றிடத்தை ஏனைய பாடசாலைகளில் உள்ள மேலதிக ஆசிரியர்கள், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் 5 பாடசாலைகளுக்குச் சென்று கற்பிக்கச் சம்மதம் தெரிவித்தனர்.

ஓகஸ்ட்டில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு போக்குவரத்து உட்பட வசதிகளைச் செய்வதற்கு மாணவர்களது பெற்றோர் சம்மதம் தெரிவித்துள்ளனர். உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றும் அந்தப் பாடசாலைகளில் ஆசிரியவளம் இல்லாததால் சில பாடப்பரப்புகள் கற்பித்து முடிக்கப்படாமல் இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனைச் சீர்செய்யும் ஒரு கட்டமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## திருமலை ஆசிரியர் குகதாஸ் பாதுகாப்புப் பிரிவால் கைது

### விடுவிக்க மாணவர்கள் கோரிக்கை

திருகோணமலை, மே 1

*திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயத்தில் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும் ரி.குகதாஸ் (வயது-47) கடந்த 23 திகதி பாதுகாப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*இவரது கைதினால் விசனம் அடைந்துள்ள பாடசாலை மாணவர்கள், இவரை விடுவிக்க பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் சி.நந்தகுமார், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு அவசர மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*இவரது கைதினால் பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. (ச-40)*

## யுனிசெப் நிறுவனத்தால் 50 பாடசாலைகள் அபிவிருத்தி

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 ஆரம்பப் பாடசாலைகள் யுனிசெப் நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

ஐரோப்பிய யூனியனின் 500 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் 30 மாத கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் 15 பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் 35 பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஆரம்பக் கல்வி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப் படவுள்ள இந்தத் திட்டத்தின் மிகவும் பின்தங்கிய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கவனத்தில் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## மன்னார் கிராமங்களில் முதலைகளின் நடமாட்டம்

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதிக்கு அருகேயுள்ள கிராமங்களில் கடந்த சில நாள்களாக முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என மக்கள் கூறுகின்றனர்.

இந்த வீதிக்கு அருகிலுள்ள பல குளங்கள் மூடப்பட்டு வீடுகள் அமைக்கப்படுவதோடு, குளங்கள் அமைந்துள்ள நிலங்கள் பல்வேறு தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனால் குளங்களில் இருந்த முதலைகள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளன. அத்துடன் இரவு வேளைகளில் வீடுகளை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. இதனால் கருசல், ஓலைத்தொடுவாய் உள்ளிட்ட பல கிராமங்களில் இவற்றின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களில் கோழி உட்படக் கால்நடைகள் வளர்க்கப்படுவதால் இவற்றை உண்பதற்காகவே முதலைகள் கிராமங்களுக்குள் வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-12)

# உள்ளூராட்சி சபைகளில் ரூ.101 மில்லியன் வரி தேக்கம்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பதின்மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் நூற்றியொரு மில்லியன் ரூபா ஆதனவரி அறவிடப்படாமல் உள்ளது என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.குணநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் திருகோணமலை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றங்கள் ஆதனவரி மூலமான வருமானத்தை நிலுவை இல்லாமல் வசூலிப்பதற்கான புதிய வழிமுறைகளையும், திட்டங்களையும் தமது சபைகள் மட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் தமது வரிகளைச் செலுத்துவதற்கான இலகுவழியை அறிமுகப்படுத்தவேண்டும். அத்தோடு விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தமது வருமான நிலை, நிதியினுடைய இருப்பு, எதிர்வரும் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கும் முறைகள் தொடர்பாக அட்டவணை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன. இதனை கணினி மயப்படுத்தி இலகுவாக தகவலைப் பெறுவதற்கான மென்பொருள் ஒன்றை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.குணநாதன் அறிமுகம் செய்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# மரண அறிவித்தல்

## சுந்தரலிங்கம் சுபந்தா

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி 2011 உயர்தரம் கலைப் பிரிவு)



களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.18, தாளையடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சுபந்தா (30.04.2012) நேற்றுத் திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் சுபதினி, சுகீவன், சுபஜா ஆகியோரின் சகோதரியும் மயூரன், கேசவன் ஆகியோரின் மைத்துனியும் பாணுஷா, மதுசனா ஆகியோரின் அருமைச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, தாளையடி லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் றைனோர்ஸ் வசம் கிண்ணம்

றைனோர்ஸ் அணியின் ரகுநாத்தின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஸ்பைடேர்ஸ் அணி இலக்குகளை அடுத்தடுத்து பறிகொடுக்க வெற்றி றைனோர்ஸ் அணிக்கு வந்து சேர்ந்தது.

வலி. வடக்கு, மே 1

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் மல்லாகம் பிரதேச மட்டக் கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய மல்லாகம் பிரிமியர் லீக் ரி-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டத்தில் மல்லாகம் றைனோர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெற்ற இறுதிப் போட்டி ஓய்வு பெற்ற இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் கே.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழைப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி



கௌரவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் றைனோர்ஸ் விளையாட்டுக்கழகம் 13.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. அஜித் 15 ஓட்டங்களையும், கிரிசன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்பைடேர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜிந்தா 4 ஓவர்கள் பந்து விசி 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், விமல் 3.4 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் காந்த சீலன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கௌசிபன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

77 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்பைடேர்ஸ் விளையாட்டுக் கழகம் 11.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. காந்தசீலன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.

றைனோர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுதன் 3.4 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் ரகுநாத் ஒரு ஓவர் பந்து வீசி ஒரு ஓட்டத்திக்கு 2 விக்கெட்டையும் அனுராஜன் 3 ஓவர்கள் பந்து விசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அஜித் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் ஆட்ட நாயகனாக றைனோர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அஜித்தும் போட்டிகளின் தொடர் ஆட்ட நாயகனாக ஸ்பைடேர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விமலும் தெரிவு செய்யப்பட்டார்கள். (86)

## வென்றது யாழ்.இந்து

வலி.வடக்கு மே.01

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதனத்தில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்கொள்ள முடியாது திணறியது.

முதல் பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 42:7 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் இருந்தது.



இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 26:3 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 68:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்றது. (த-86)

## வவுனியா கிரிக்கெட்டில் வென்ற பாடசாலைகள்

வவுனியா, மே 1

வவுனியா மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அணிகள் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகாவித்தியாலயமும், தெற்கு வலயத் தமிழ் மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. மகாவித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தமிழ் மகாவித்தியாலய அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

அடுத்து இடம் பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் வவுனியா தெற்கு வலயத்தை சேர்ந்த பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம் வடக்கு வலயத்தைச் சேர்ந்த கிடாச்சூரியை இலகுவில் வென்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஓமந்தை மகாவித்தியாலயமும், தெற்கு வலயத்தைச் சேர்ந்த இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் போட்டியிட்டன. இதில் வவுனியா தெற்கு இறம்பைக் குளம் வெற்றி பெற்று இந்த வருட சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை வவுனியா வடக்கு வலயத்தினைச் சேர்ந்த புதுக்குளம் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது. (த-400)

## இறுதிப்போட்டிக்கு யாழ்ஸ்ரார் தகுதி

யாழ்ப்பாணம்,மே 1

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அவையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஹொக்கி அணியும் இணைந்து யாழ். மாவட்ட ஹொக்கி கழகங்களுக்கு இடையே நடத்திய ஹொக்கிப் போட்டி அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் பல்கலைக்கழக வீரன் நிஷாந்தன் 14 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார். போட்டியின் முதல் பாதி ஆட்டம் முடிவடைய ஒரு சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று போட்டியை சமப் படுத்தியது .

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கியதுடன் கோல்கள் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். யாழ்ஸ்ரார் வீரன் ஜனார்த்தனன் 46 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார்.

போட்டி சூடு பிடித்த நிலையில் இரு அணிகளும் மேலும் கோல்பெறாமல் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் யாழ்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2:1 கோல்கள் என்ற அடிப்படையில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று இறுதிப் போட்டிக்கு விளையாடத் தகுதி பெற்றது. (86)

## ஆண்கள் பிரிவில் புதுக்குளம் பெண்கள் பிரிவில் மடுகந்தை

### வவுனியா எல்லையில் சம்பியன்

வவுனியா, மே 1

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட எல்லேப் போட்டியில் ஆண்கள் பிரிவில் புதுக்குளம் மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் மடுக்கந்தை மகாவித்தியாலயமும் சம்பியனாகியுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த புதன்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றன.


முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மடுக்கந்தை மகாவித்தியாலயமும், இறம்பைக் குளம் மகாவித்தியாலயமும் போட்டியிட்டன. இதில் மடுக்கந்தை வெற்றி பெற்று இந்த வருட மாகாண சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் நெடுங்கேணி மகாவித்தியாலயமும், புதுக்குளம் மகாவித்தியாலயமும் மோதின. இதில் புதுக்குளம் மகாவித்தியாலயம் வென்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகாவித்தியாலயமும், வவுனியா வடக்கு கல்மடு மகாவித்தியாலயமும் மோதின. இதில் புதுக்குளம் மகாவித்தியாலயம் வெற்றியீட்டி சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் வவுனியா இந்துக் கல்லூரியும் ஓமந்தை மத்திய கல்லூரியும் மோதின. இதில் இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.


இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் அடுத்த கட்ட மாகாணப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-400)



யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை இராணுவத்தின் விளையாட்டு இயக்குநர் சபையினரால் ஜூடோ பயிற்சி முகாம் ஒன்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் உள்ள தசைநார் பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் இராணுவ விளையாட்டுச் சபையின் பிரதம பயிற்சியாளர் ஜூடோ பயிற்சிகளை மாணவர்களுக்கு செய்முறை ரீதியாக விளக்கியதுடன், பயிற்சிகளையும் வழங்கினார். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லிக்கு 'திரில்' வெற்றி




ஐ.பி.எல்., பரபரப்பான லீக் ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ் அணி, ஓர் ஓட்டத்தினால் 'திரில்' வெற்றி பெற்றது. கடைசிப் பந்து வரை போராடிய ராஜஸ்தான் அணியின் ரஹானேவின் ஆட்டம் வீணானது.

டில்லியில் உள்ள பெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடருக்கான 39 வது லீக் ஆட்டத்தில், டில்லி டேர் டெவில்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி அணித் தலைவர் சேவாக், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

ஆட்டத்தின் முதல் பந்தில் பவுண்டரி அடித்து ஓட்ட வேட்டையை தொடக்கிய டில்லி அணியின் ஜெயவர்தனா (6), பங்கஜ் சிங் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கெவின் பீற்றர்சன் (5), அன்கீத் சவான் சுழலில் சிக்கினார். மறுமுனையில் அதிரடி காட்டிய சேவாக், ராஜஸ்தான் பந்துவீச்சை வெளுத்துவாங்கினார். கெவான் கூப்பர் பந்தை சிக்சருக்கு பறக்க விட்ட இவர், பங்கஜ் சிங் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்து, இந்தத் தொடரில் தனது நான்காவது அரைசதத்தைப் பூர்த்தி செய்தார்.

பிராட் ஹொக் பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த சேவாக் (63), பின்னர் அவரிடமே சரணடைந்தார். ரோஸ் ரெய்லர் (25) ஆறுதல் தந்தார். நமன் ஓஜா (11) நிலைக்கவில்லை. கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடித்த யோகேஷ் நாகர் (27) அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். கடைசிப் பந்தில் இர்பான் பதான் (7) பவுண்டரி அடிக்க, டில்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 152 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு அணித் தலைவர் டிராவிட், அஜின்கியா ரஹானே ஜோடி சூப்பர் தொடக்கம் கொடுத்தது. டில்லி அணி பந்து வீச்சை பதம்பார்த்த இவர்கள், அணியின் ஸ்கோரை வேகமாக உயர்த்தினர். உமேஷ் யாதவ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரஹானே, இந்தத் தொடரில் தனது இரண்டாவது அரைச் சதத்தை பதிவு செய்தார். முதல் இலக்குக்கு 99 ஓட்டங்கள் சேர்த்த போது, இர்பான் வேகத்தில் டிராவிட் (40) ஆட்டமிழந்தார்.

பின்னர், ரஹானேவுடன் இணைந்த பிரட் ஹொட்ஜ், உமேஷ் யாதவ் பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்து அசத்தினார். ஆட்டத்தின் 19 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசிய மார்னே மோர்கல், ஆட்டத்தில் திருப்பம் ஏற்படுத்தினார். அசத்தலாக பந்துவீசிய இவர், வெறும் மூன்று ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, பிரட் ஹொட்ஜை (22) எல்.பி.டபிள்யூ., முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் ராஜஸ்தான் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. உமேஷ் யாதவ் பந்துவீசினார். முதல் பந்தில் ஓட்டம் எடுக்கப்படவில்லை. அடுத்த இரண்டு பந்தில் 2 ஓட்டங்கள். நான்காவது பந்தை ரஹானே சிக்சருக்கு அனுப்ப, பரபரப்பு ஏற்பட்டது. ஐந்தாவது பந்தில் இரண்டு ஓட்டம். கடைசிப் பந்தில் இலக்குக் காப்பாளர் நமன் ஓஜாவின் துல்லிய 'த்ரோ'வில் ஒவைஸ் ஷா (1), 'ரன்-அவுட்' ஆக, ராஜஸ்தான் ரசிகர்களின் நெஞ்சம் தகர்ந்தது.

ராஜஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 151 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து, ஓர் ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ரஹானே (84) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்டநாயகன் விருதை டில்லி அணியின் சேவாக் பெற்றார்.

### அரைச்சத நாயகன்

ராஜஸ்தானுக்கு எதிராக 63 ஓட்டங்கள் எடுத்த டில்லி டேர் டெவில்ஸ் அணித்தலைவர் சேவாக், இந்தத் தொடரில் தொடர்ந்து நான்காவது அரைச் சதத்தைப் பதிவு செய்தார். முன்னதாக இவர், புனே (57), புனே (87), மும்பை (73) அணிகளுக்கு எதிராக அரைச்சதம் அடித்தார். இதன் மூலம், ஐ.பி.எல்., அரங்கில் தொடர்ந்து நான்கு அரைச்சதம் அடித்த முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார்.

சுழலும் 'ஒரேஞ்' நிற தொப்பி

63 ஓட்டங்கள் எடுத்த டில்லி அணித் தலைவர் சேவாக் (372 ஓட்டங்கள்), இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான 'ஒரேஞ்' நிற தொப்பியைப் பெற்றார். ஆனால் இது நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் அஜின்கியா ரஹானே, தனது 43 ஆவது ஓட்டத்தை எட்டிய போது, அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்து, 'ஒரேஞ்' நிற தொப்பியை மீண்டும் தன்வசப்படுத்தினார். இந்தத் தொப்பி கொல்கத்தாவுக்கு எதிராக அரைச்சதம் அடித்த பெங்களூர் அணியின் கிறிஸ் கெய்லிடம் இருந்தது.

(5)




# மீண்டும் சரிந்தது டெக்கான்




ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் பரபரப்பு வெற்றி பெற்றது. டெக்கான் அணியின் போராட்டம் எடுபடவில்லை.

மும்பையில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்., தொடரின் 40 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் மோதின. சங்ககாரா விலகிக் கொள்ள, டெக்கான் அணியின் தலைமைப் பொறுப்பை கமரான் வையிட் ஏற்றார். மும்பை அணியில் காயமடைந்த பொலார்ட் நீக்கப்பட்டு, ரிச்சர்ட் லீவி வாய்ப்பு பெற்றார். நாணயச சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணித் தலைவர் ஹர்பஜன், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

டெக்கான் அணிக்கு பார்த்திவ் படேல், ஷிகர் தவான் சேர்ந்து நல்ல தொடக்கம் அளித்தனர். ஆர்.பி.சிங் பந்தில் பார்த்திவ் ஒரு சிக்சர் அடித்தார். மலிங்கவின் பந்தில் தவான் ஒரு பவுண்டரி விளாசினார். மீண்டும் பந்துவீச வந்த ஆர்.பி.சிங் இந்த முறை பார்த்திவை (19) வெளியேற்றினார். இதற்கு பின் வந்தவர்கள் ஏனோதானோ என்று விளையாடினர். ஆடுகளமும் பந்துவீச்சுக்கு ஒத்துழைக்க, மும்பை வீரர்கள் படையை கிளப்பினர். ஹர்பஜன் சுழலில் ஜாகி(2) சிக்கினார். மலிங்கவின் பந்தில் கமரான் வையிட் 'டக் அவுட்டானார்'. தொடர்ந்து அசத்திய ஹர்பஜன் வலையில் தவானும் (29) வீழ்ந்தார். பிராங்க்ளின் வீசிய ஆட்டத்தின் 13 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் கிறிஸ்டியன் (5), சிப்லி (1) நடையைக் கட்டினர். பின்வரிசை வீரர்கள் மலிங்கவின் வேகத்தில் வெளியேற, டெக்கான் அணி 18.4 பந்துப் பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. டுமினி (25) ஆட்டமிழக்காமல் இருந்தார். மும்பை சார்பில் மலிங்க 4, ஹர்பஜன் 2, பிராங்க்ளின் 2 இலக்குகள் வீழ்த்தினர்.

போகிற போக்கில் எட்டக்கூடிய இலக்கை விரட்டிய மும்பை அணி திணறல் தொடக்கம் கண்டது. முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். ஸ்ரைன் வீசிய முதல் பந்தில் லீவி (0) 'போல்டானார்'. பிரதாப் சிங் வேகத்தில் சச்சின் (14) ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய ஸ்ரைன் பந்துவீச்சில் தினேஷ் கார்த்திக்கும் (2) ஆட்டமிழக்க, 8.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 45 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது.

பின்னர், ரோகித் சர்மா, பிராங்க்ளின் இணைந்து போராடினர். பொறுப்பாக விளையாடிய ரோகித் சர்மா 42 ஓட்டங்களுக்கு (4 பவுண்டரிகள், 1 சிக்சர்), டுமினி பந்தில் வெளியேறினார். சிறிது நேரத்தில் பிராங்க்ளினும் (13) ஆட்டமிழக்க, 'டென்ஷன்' ஏற்பட்டது. ஆனால், அமித் மிஸ்ரா வீசிய ஆட்டத்தின் 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அம்பதி ராயுடு இரண்டு பவுண்டரிகள் அடிக்க, பதட்டம் தணிந்தது. மும்பை அணி 18.1 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 101 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ராயுடு (19), ரொபின் பீட்டர்சன் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை டெக்கான் வீரர் ஸ்ரைன் வென்றார்.

(5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்போல் முதலிடம்



ஆஸ்ரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்டுத்தியதாலேயே சந்தர்போல் முதல் இடத்தைப் பிடிக்க முடிந்துள்ளது.

ஆஸ்ரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நிறைவடைந்துள்ளமையை அடுத்து வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் மேற்கிந்தியத் தீவுகளின் சந்தர்போல் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஆஸ்ரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சந்தர்போல், இந்தத் தொடரின் தொடர் நாயகன் விருதையும் வென்றார். இந்தத் தொடரின் ஆரம்பத்தில் 8 ஆம் இடத்தில் காணப்பட்ட அவர், தற்போது முதலிடத்தில் காணப்படுகிறார்.

இரண்டாமிடத்தில் ஏ.பி.டி.வில்லியர்ஸும், தொடர்ந்து ஜக்ஸ் கலிஸ், யுனிஸ் கான், குமார் சங்ககார, அலஸ்ரெயர் குக், திலான் சமரவீர ஆகியோர் காணப்படுகின்றனர். இந்தத் தொடர் ஆரம்பத்தில் முதலிடத்தில் காணப்பட்ட மைக்கல் கிளார்க், தற்போது 8 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

தொடர்ந்து ஹசிம் அம்லா,ரோஸ் ரெய்லர் ஆகியோர் 9 ஆம், 10 ஆம் இடங்களில் காணப்படுகின்றனர். பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ஸ்ரெய்ன் தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்றார்.

அத்தோடு முதல் 5 இடங்களுக்குள் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. சயிட் அஜ்மல், ஜேம்ஸ் அன்டர்சன், கிரேம் ஸ்வான், ரங்கன ஹேரத் ஆகியோர் 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் இடங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றனர்.

6 ஆம் இடத்தில் காணப்பட்ட பீற்றர் சிடில் 9 ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார். 7 ஆவது இடத்தில் காணப்பட்ட வேர்ணன் பிலாந்தர் 6 ஆவது இடத்திற்கும், 11 ஆவது இடத்தில் காணப்பட்ட பென் ஹில்பன்ஹாஸ் 7 ஆவது இடத்திற்கும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

இந்தத் தொடர் ஆரம்பத்தில் 37ஆவது இடத்தில் காணப்பட்ட மேற்கிந்தியத் தீவுகளின் கேமர் ரோச், தற்போது 16 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அத்தோடு இதற்கு முன் முதல் 100 வீரர்களுக்குள் காணப்பட்டிருக்காத மேற்கிந்தியத் தீவுகளின் சிலிங் போர்ட், தற்போது 46 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சகலதுறை வீரர்களுக்கான வரிசையில் மாற்றம் ஏற்படவில்லை. (5)

# ஆதரவு எங்களுக்கே; நம்புகிறார் கம்பீர்




ஈடன் கார்டனில், புனே அணிக்கு எதிராக நடக்கவுள்ள ஆட்டத்தில், கொல்கத்தா அணிக்கே ரசிகர்களின் ஆதரவு கிடைக்கும், என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித்தலைவர் கம்பீர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மே 5 இல் நடக்கவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா-புனே அணிகள் மோதுகின்றன. புனே அணியின் தலைவராக, 'பெங்கால் ரைகர்', 'பிரின்ஸ் ஒப் கொல்கத்தா' என்று அழைக்கப்படும் கொல்கத்தாவை சேர்ந்த சவுரவ் கங்குலி உள்ளார். இதனால் ரசிகர்களின் ஆதரவு யாருக்கு என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் கூறியதாவது:

புனே அணிக்கு எதிரான ஆட்டத்தில், ரசிகர்களின் ஆதரவு எங்கள் அணிக்கே கிடைக்கும். ஏனெனில் வேறு எந்த ஒரு அணியும் கொல்கத்தாவை சார்ந்தது கிடையாது. புனே அணிக்கு எதிராக எங்கள் அணியின் செயல்பாடு, கொல்கத்தா ரசிகர்களின் முகத்தில் புன்னகையை உண்டாக்கும். இது, புனே அணிக்கு எதிராக விளையாடும் ஆட்டம். எந்த ஒரு தனி நபருக்கு எதிராக விளையாடும் ஆட்டம் அல்ல - என்றார்.


## புதிய நாவலர்
கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்

O/L Day Class
பிரிவு-II,ஆரம்பம்.02.05.2012
புதன் 8மணி

## பார்மசி விற்பனைக்குண்டு
தற்பொழுது நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் பார்மசி சகல பதிவுகளுடனும் உண்டு.
தொடர்பு:
0721380587


# நடிகையுடன் ஊர் சுற்றும் சனத்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூர்யா (வயது 41) சமீபகாலமாக நடிகையும், 2006 ஆம் ஆண்டு மிஸ் இலங்கை பட்டம் வென்ற ஜாக்குலின் பெர்னாண்டஸ் என்பவருடன் ஊர் சுற்றி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.



சமீபத்தில் இருவரும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர். அப்போது சினிமா, விளையாட்டு என்று இருவரும் பல்வேறு தகவலை பகிர்ந்து கொண்டதாகவும், ஜாக்குலின் நடித்த படங்களை பார்ப்பதாகவும் ஜெயசூர்யா உறுதி அளித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. (5)


## காணி விற்பனைக்கு
மீசாலை வடக்கில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778212084

## அறிவித்தல்
NEW SCIENCE HALL
தொழிலாளர் தினத்தை முன்னிட்டு 01.05.2012 மட்டும் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது
நிர்வாகி

## அறிவித்தல்
### தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறியோர் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். மேலதிக விபரங்களை இல. 324. பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர்,BIT கற்கை நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம்

BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

## விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள HL-XXXX இலக்க HONDA CD-125 Benly ரக சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு
தொடர்பு:
078 6788826

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Batch I: 2-5-2012 09.00 - 12.00
Batch II: 5-5-2012 03.00 - 5.00
Batch III : 7-5-2012 09.00 - 12.00

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

## யாழில் இங்குமட்டுமே O/L DAY Class
விக்னா கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி வீதி, யாழ்
O/L DAY Class
(8.00 to 2.00)
பிரிவு3 ஆரம்பம்
03.05.2012 8 மணி
★ சென்ற வருடம் 99% சித்தி
★ இவ் வருடமும் பிரிவு 6 மட்டுமே

## தேவை
பிரபல ஆங்கில பாலர் பாடசாலைக்கு ஆசிரியர்கள் தேவை. சங்கானை, மானிப்பாய் ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நேர்முகத் தேர்விற்கு சுய விவரக் கோவை (Bio Data) உடன் (04.05.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நேரில் வரவும்.
முகவரி : 140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2225796, 077 6646357
077 7009653


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.